இருள் சூழ்ந்த நிலையில் தமிழர்களின் எதிர்காலம் பக். 13

விலை ரூபா 20

பக்கங்கள் : 28

# உதயன்

34°c - 26°c

தெளிவான வானிலை

சுடர் 31 கதிர் 131 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 23, செவ்வாய்க்கிழமை 05.04.2016


## சமுர்த்தி முகாமையாளர் மீது பாலியல் குற்றச்சாட்டுக்கள்

### கட்டாய இடமாற்றம் வழங்கியது திணைக்களம்

யாழ்ப்பாணம், ஏப். 5
பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட சமுர்த்தி முகாமையாளர் ஒருவர் நெடுந்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
இந்த இடமாற்றம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது.
ஏழாலையிலுள்ள சமுர்த்தி முகாமையாளருக்கு எதிராகப் பெண் ஊழியர்களினால், யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் யாழ்ப்பாணம் பக். 23

## நிரந்தர இராணுவ முகாமை கூழாவடியில் நிறுவ முயற்சி

### 16 பரப்புக் காணியைப் பறிக்க நடவடிக்கை ஜனாதிபதியிடம் முறையிட்டும் பயனில்லை

யாழ்ப்பாணம், ஏப். 5
ஆனைக்கோட்டை கூழாவடியில் தனியாருக்குச் சொந்தமான 16 பரப்புக் காணியை இராணுவ முகாம் அமைப்பதற்காகச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதற்காக அந்தக் காணியை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை வருகை தரவுள்ளதாகக் காணி உரிமையாளருக்கு அறிவித்துள்ளனர்.
ஜனாதிபதி, பிரதமர், பக். 23

## அதிக வெப்பத்தினால் பூநகரியில் பெண் சாவு

கிளிநொச்சி, ஏப். 5
பூநகரியில் அதிக வெப்பத்தின் காரணமாக நீர்த்தன்மையின்றி 43 வயதுப் பெண்மணி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.
குறித்த சம்பவத்தில் பூநகரி – கறுக்காய்த்தீவைச் சேர்ந்த இராஜேஸ்வரன் செந்தமிழ்ச்செல்வி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
திடீர் சுகவீனமுற்ற நிலையில், கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் குறித்த பெண் சாவடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. பக். 23

# சவால்களை முறியடித்து நிரந்தரத் தீர்வு காண்பேன்

### பதுளையில் ஜனாதிபதி சூளுரை

கொழும்பு, ஏப்ரல் 5
எல்லாச் சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு, நாட்டில் உள்ள மூவின மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வைக் காண்பேன். மூவின மக்களுக்கும் உயர்ந்த வாழ்க்கை நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நான் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றேன்.
இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன .
நேற்று முற்பகல் பதுளை – வெலிமட சிறி சங்ககிரி விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நுழைவாயிலைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது அவர் தனது உரையில், நாட்டுக்குத் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்காகவே 2015 ஜனவரி 8 ஆம் திகதி மூவின மக்களும் நாட்டின் பொறுப்புக்களை என்னிடம் ஒப்படைத்தனர். எத்தகைய விமர்சனங்கள், பக். 23



## போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க கடலில் ரோந்தை தீவிரப்படுத்துங்கள்

### வட பிராந்தியக் கடற்படைக்கு மேல்நீதிமன்ற நீதிபதி பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
போதைப் பொருள்கள் கடல் வழியாகவே கடத்தப்படுவதால், அவற்றை நடுக் கடலிலும், கடல் எல்லையிலுமே தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன் போதைப் பொருள் கடத்தலை முறியடிக்க வடக்கு கடற் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரியுங்கள்.
இவ்வாறு வட பிராந்திய கடற்படையினருக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பணிப்புரை விடுத்துள்ளார்.
போதைப் பொருள்களைக் கடத்தி வரும் படகுகள் எவை, நடுக் கடலில் போதைப் பொருள்களை ஒன்றில் இருந்து மற்றொன்றுக்குப் பரிமாற்றம் செய்வதில் ஈடுபடும் படகுகள் எவை என்பதைக் கண்காணித்து கையும் மெய்யுமாகப் பிடித்து போதைப் பொருள் கடத்தலை முறியடிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(விரிவு பக்கம் 7)

முச்சந்தி முரளி



கஞ்சாவில மூழ்கப்போகுது பாருங்கோ குடாநாடு...

## மன்னார் புதைகுழிக் கிணற்றை தோண்டும் பணிகள் ஒத்திவைப்பு

### சட்ட வைத்திய அதிகாரி வருகைதராததால்




மன்னார், ஏப். 5
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப்புதைகுழி எனச் சந்தேகிக்கும் இடத்திலுள்ள கிணற்றைத் தோண்டும் நடவடிக்கைக்கான முன்னேற்பாடாகக் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதி நேற்று வெட்டிஅகற்றப்பட்டது. பக். 25

## மிருசுவிலில் நேற்றுச் சிக்கியது 1 கோடி பெறுமதியான கஞ்சா

### பொலிஸாரின் வலையிலிருந்து தப்பித்தனர் கஞ்சா வியாபாரிகள்

சாவகச்சேரி, ஏப்.5
சுமார் ஒரு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ள 96 கிலோ கஞ்சா நேற்று மிருசுவிலில் கைப்பற்றப்பட்டுள்ளது.



பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் திட்டமிட்டு வலை விரித்திருந்த நிலையில், அவர்களை இனங்கண்டு கொண்ட கஞ்சா விற்பனையாளர்கள் இருவர், கஞ்சாப் பொதிகளையும், மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். மிருசுவில் ரயில் நிலையத்துக்கு அண்மையிலுள்ள வீதி வழியாகச் செல்லும் ஒழுங்கைக்குள்ளேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(விரிவு பக்கம் 2)

## வெடிகள் கொளுத்தி ஆரவாரத்துடன் மீளத் திறக்கப்பட்ட மதுபானச்சாலை

யாழ்ப்பாணம், ஏப். 5
வெடிகள் கொளுத்தி பெரும் ஆரவாரத்துடன் பருத்தித்துறையில் மதுபானச்சாலை ஒன்று நேற்று மீளவும் திறக்கப்பட் டுள்ளது.
மதுபானச் சாலைக்கான அனுமதி தற்காலிகமாக 2 மாதங்களுக்கு வழங்கப்பட்ட நிலையிலேயே, வெடிகொளுத்தி ஆரவாரத்துடன் திறக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறை நகரில் பிரதான வீதியில் சிவன் கோயிலுக்கு அருகில் மதுபானச்சாலை ஒன்று அமைந்துள்ளது. இந்த மதுபானச்சாலை ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளமை தொடர்பில் பல்வேறு பக். 23

## யாழ். நகரில் சனியன்று மாபெரும் கவனவீர்ப்பு

### மும்முனைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தி

யாழ்ப்பாணம், ஏப். 5
வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வை அச்சுறுத்தும் மும்முனைப் பிரச்சினைகள் பற்றிய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது. பக். 23

## யாழ்ப்பாணத்துக்கு நேற்று ஹெரோயின் கடத்த முயற்சி

### வல்லையில் வைத்து முறியடித்தனர் மதுவரித் திணைக்கள அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஏப். 5
ஹெரோயின் போதைப் பைக்கற்றுகளைப் பருத்தித்துறையிலிருந்து மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி கடத்தும் முயற்சி பக். 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோடி ரூபா பெறுமதியான கஞ்சா மிருசுவிலில் சிக்கியது

## போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் விரித்த வலையில் இருந்து தப்பினர் கஞ்சா வியாபாரிகள்


சாவகச்சேரி, ஏப்.5

சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதிமிக்க 96 கிலோ கஞ்சா நேற்று மிருசுவிலில் கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் திட்டமிட்டு வலை விரித்திருந்த நிலையில் பொலிஸாரை இனங்கண்டு கொண்ட கஞ்சா விற்பனையாளர்கள் இருவர் கஞ்சாப்பொதிகளையும், மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

மிருசுவில் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள வீதியில் உள்ள சிறிய ஒழுங்கைக்குள்ளேயே கஞ்சா கைப்பற்றப்பட்டது.

போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் கஞ்சா கொள்வனவாளர் போன்று கஞ்சா வியாபாரி ஒருவரைத் அலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். அதிகாரி தனக்கு கஞ்சா தேவையாகவுள்ளது என்று கூறியதையடுத்து குறித்த நபர் மிருசுவில் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள வீதியில் முதலாவது ஒழுங்கைக்கு பணத்துடன் இரவு 11 மணிக்கு வந்து கஞ்சாவைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளார்.



அதன்படி போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் சென்றபோது அவர்களின் ஜீப் வண்டியை இனங்கண்டு கொண்ட கஞ்சா கொண்டு வந்திருந்த இருவர் 96 கிலோ 685 கிராம் கஞ்சாவையும், மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

கஞ்சாவையும், மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் இது தொடர்பான அறிக்கையை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் வழக்கை அடுத்த மாதம் 18ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (ந-4,9)

போதைப் பொருள்கள் கடல் வழியாகவே கடத்தப்படுகின்றன. போதைப் பொருள் கடத்தலை முறியடிக்க வடக்கு கடல் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும் – இவ்வாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் வட பிராந்திய கடற்படையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். போதைப் பொருள் கடத்தல் வழக்கு ஒன்......

(7ஆம் பக்கம் பார்க்க)

## அடித்துக் காயம் ஏற்படுத்தியவருக்கு விளக்கமறியலில்

சாவகச்சேரி,ஏப்.5

ஒருவரை கைகளாலும், பொல்லாலும் அடித்துக் காயப்படுத்திய கொடிகாமம் கோயிலாமனை வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் இவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-ஐ-9)

## உலக காசநோய் தினம்

யாழ்ப்பாணம், ஏப்.5

மார்பு நோய் சிகிச்சை மையத்தின் ஏற்பாட்டில் உலக காசநோய் தினம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி ஆர்.மணிவாசகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கலந்து கொள்வார். நிகழ்வில் காசநோய் தொடர்பான கலை நிகழ்வுகளும், உரைகளும், பாட்டுக்களும், கவிதைகளும் நோயாளர் மற்றும் விசேட வைத்திய நிபுணர்களால் நிகழ்த்தப்பட உள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-ரி5)

## கிராம சேவகர் உள்ளக இடமாற்றம் அரசியல் தலையீடுகளால் இழுபறி

### முல்லைத்தீவு பிரதேச கிராம சேவகர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,ஏப்.5

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவகர்களுக்கான உள்ளக இடமாற்றம் அரசியல் தலையீடு காரணமாக இழுபறி நிலையில் உள்ளது என்று தெரிவித்துள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவகர்கள் தமக்கான உள்ளக இடமாற்றத்தை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் இடமாற்றங்கள் இழுபறி நிலையில் உள்ளமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

கடந்த வருட ஆரம்பத்தில் கரைதுறைப்பற்றுப்பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து கிராம சேவகர்களுக்குமான உள்ளக இடமாற்றத்துக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு, அரச அதிபரின் அனுமதிக்காக முன்பு கடமையாற்றிய கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளரால், மாவட்ட அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அரசியல் தலையீடுகள் காரணமாக அப் பட்டியல் கிடப்பில் போடப்பட்டிருந்தது என்று கூறப்படுகின்றது.

அதன் பின்னர் தற்போதைய பிரதேச செயலாளரால் கிராம சேவகர்களின் முன்னிலையில் அப் பட்டியல் சீர் செய்யப்பட்டு மீண்டும் அரச அதிபரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மாத காலம் கடந்துவிட்ட போதிலும் மீண்டும் அரசியல் தலையீடுகள் காரணமாக அனுமதி கிடைக்காமையால் இடமாற்றம் இழுபடுகின்றது என்று தெரிவித்த கிராம சேவகர்கள் இடமாற்றத்துக்கான துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது–

கிராம சேவகர்களுடைய இடமாற்றங்களில் அரசியல் தலையீடு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. இது தொடர்பாக என்னிடம் தெரியப்படுத்தவும் இல்லை. ஆனாலும் குறித்த இடமாற்றம் தாமதமாவதற்கான காரணம் என்ன என்பது தொடர்பாக ஆராய்கின்றேன் என்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அதிக சனத்தொகையைக் கொண்ட பிரதேசமாக கரைதுறைப்பற்றுப் பிரதேசம் விளங்கி வருகின்றது. அத்துடன் இங்கு 46 கிராம சேவகர் பிரிவுகள் உள்ள போதிலும் 31 கிராம சேவகர்கள் மட்டுமே தற்போது இங்கு சேவையாற்றி வருகின்றனர். மிகுதி 15 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இந்த கிராம சேவகர்களில் 15 கிராம சேவகர்களே பதில் கடமையாற்றி வருகின்றனர். குறித்த 15 கிராம சேவகர் பிரிவுகளில் இதுவரையும் நிரந்தரமான கிராம சேவகர்கள் நியமிக்கப்படவில்லை.

(ற-ஐ-21,102)

## அச்சுவேலி கொள்ளை; 2 சந்தேக நபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப்.5

அச்சுவேலியில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொள்ளைச் சந்தேக நபர்கள் 2 பேரும் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் இருவரும் வல்லையில் வைத்துக் கைது செய்யப் பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி தெற்குப் பகுதியில் ஒரு வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்து அனைவரையும் கத்தி முனையில் மிரட்டி 15பவுண் நகையை எடுத்துள்ளனர்.

அதே போல் 50 மீற்றர் தொலைவில் உள்ள மற்றொரு வீட்டில் வீட்டின் பின்பக்கக் கதவை உடைத்து உள்ள சென்ற குறித்த கொள்ளையர்கள் 14 பவுண் நகை, 4 அலைபேசிகள், மற்றும் 25ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டிருந்தனர்.

அதே போல் புத்தூர் மேற்கு நவக்கிரிப் பகுதியில் சுவிஸ் நாட்டில் இருந்து வந்த பெண்ணொருவரின் ஏராளமான பவுண் நகைகள் மற்றும் குறித்த வீட்டின் பெண் அணிந்திருந்த 11 பவுண் தாலி என்பவற்றைப் பறித்தெடுத்துச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்து கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தடயவியல் பொலிஸார் மற்றும் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது கொள்ளையர்கள் விட்டு சென்ற கத்தி, மற்றும் சான்றுப்பொருள்கள் என்பவற்றை பொலிஸார் மீட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான வாகனத்தின் சாரதி அன்றிரவு கைது செய்யப்பட்ட நிலையில் இருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், தலைமறைவாகியுள்ள ஏனைய கொள்ளையர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ற-ஐ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல ஹெரோயின் வியாபாரி சிக்கினார் பொலிஸ் வலையில்

## 110 கோடி ரூபா போதைப்பொருள் கடத்தலில் தேடப்பட்டவர் இவர்

கொழும்பு, ஏப். 5

வெளிநாட்டிலிருந்து 110 கிலோ கிராம் ஹெரோயின் இலங்கைக்குக் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பியவேளையிலேயே விமான நிலையத்தில் வைத்துக் குறித்த சந்தேகநபரை மடக்கிப்பிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர் களுபோவில பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தென் கடற்பரப்பில் 110 கோடி ரூபா பெறுமதியான 110 கிலோ ஹெரோயின் கடந்த முதலாம் திகதி கைப்பற்றப்பட்டது. இது தொடர்பில் 10 ஈரானியர்கள், ஒரு பாகிஸ்தானியர் அடங்கலாக 14 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து இந்தக் ஹெரோயின் வணிகத்தின் பின்னணியில் செயற்படும் பிரதான புள்ளி எனச் சந்தேகிக்கப்பட்ட நபர் இந்தியாவுக்குத் தப்பியோடிவிட்டார் எனக் கூறப்பட்டிருந்தது.

இதுபற்றி பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தனர். பிரதான சந்தேக நபரைப் பிடிப்பதற்குரிய தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, பிரதான சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப் பட்டுள்ளார். அத்துடன், ஹெரோயின் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

**மேலும் இருவர் கைது**

இதேவேளை, இந்தக் ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் மேலும் இரு சந்தேக நபர்கள் நீர்கொழும்புப் பகுதியில் நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சுமுது தரங்க பிரணாந்து எனப்படும் 38 வயதான ஒருவரும், பண்டார அனில் ரோஹான் எனப்படும் கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவருமே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

சந்தேகநபர்கள் சட்டத்தரணியுடன் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் முன்னிலையாகியதன் பின்னரே, கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(த-வ-5)

விற்பனைக்கு உண்டு
தரமான சிமெந்துக்கற்கள் விற்பனைக்கு!
யாழ்ப்பாணத்துக்கு விசேட கழிவு.
தொடர்புக்கு : 0750391980

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 483
சீட்டிழுப்பு திகதி 2016.04.04

வெற்றி இலக்கங்கள்
10 16 27 65 A
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 50,475,740/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1251
சீட்டிழுப்பு திகதி 2016.04.04
வெற்றி இலக்கங்கள்
08 11 22 49 Q
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 12,501,740/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு 1919

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 004
சீட்டிழுப்பு திகதி 2016.04.04
வெற்றி இலக்கங்கள்
08 27 44
இவ்வார இலட்சாதிபதிகள் 142
வழங்கப்பட்ட மொத்த பரிசு 27,517,720/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.

# இளைஞர்கள் உசாரடைந்ததால் கொள்ளை முயற்சி முறியடிப்பு

## அச்சுவேலியில் நேற்றுமுன்தினமிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

அச்சுவேலியில் நேற்றுமுன்தினமிரவும் கொள்ளை முயற்சி இடம்பெற்றுள்ளது.

எனினும் இளைஞர்கள் அங்கு கூடியதனால் கொள்ளையர்கள் தப்பியோடிவிட்டனர். இதனால் அங்குள்ள மக்கள் நேற்றுக் காலை வரை விழித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது,

அச்சுவேலியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மூன்று வீடுகளின் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் வாள் முனையில் வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி நகை,பணம்,அலைபேசி ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றனர். இந்தநிலையில் மீண்டும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மூவர் அடங்கிய குழுவொன்று கொள்ளை முயற்சியில் இறங்கியது.

அச்சுவேலி வடக்கில் உள்ள வீட்டுக்குள் நுழைந்த குறித்த கும்பல், வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்திக் கொள்ளையடிக்க முற்பட்டபோது, அவர்கள் கத்தியதால் இளைஞர்கள் வீட்டின் முன் கூடினர். இதனால் கொள்ளையர்கள் தப்பியோடினர்.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்கும் வலி.வடக்கு பிரதேச சபைக்கும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் மக்கள் இரவிரவாக விழித்திருந்தனர். குறித்த சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-4,11)

கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் **நிதர்ஷனின்** அன்புத் தந்தை **சுப்பிரமணியம் கதிர்காமதேவன்** அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்
மருத்துவ பிரதிநிதி, மருத்துவ விற்பனை பிரதிநிதி நண்பர்கள்.
Jaffna Medical Delegates Association

தேவை
நாவற்குழிச் சந்தியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அழகுக் கலை நிலையம் ஒன்றுக்கு அழகுக் கலையில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
Threading மற்றும் Hair cutting தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
077 623 7747, 077 381 9378

காணி விற்பனை
வேலணை வங்களாவடிச்சந்திக்கு அண்மையிலும் பிரதேச செயலகத்திற்கு அருகிலும் உள்ள 5¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 465 9570

# தாதி உத்தியோகத்தர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அரச தாதி உத்தியோகதர் சங்கம் நாளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தாதி உத்தியோகத்தர்களின் பிரச்சினை தொடர்பாக, பல முறை கடிதம் மூலம் அறியத்தந்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தாதியத்தையும், தாதி உத்தியோகத்தர்களையும் பாதுகாக்கவேண்டிய நாம், நாளை புதன்கிழமை முதல் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

எனவே நாளை முதல் தொடர்ச்சியாக சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்தை(6மணித்தியாலம் மட்டும் வேலை செய்தல்) ஆரம்பிக்கவுள்ளோம். அத்துடன் மேலதிகமாக நாளை காலை ஒரு மணித்தியாலம் தாதிய உத்தியோகத்தர்கள் அனைவரும் அடையாளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதுடன், நாளை மறுதினம் ஏனைய தொழிற்சங்க உத்தியோகத்தர்களுடன் இணைந்து இரு மணித்தியாலங்கள் பணிப்புறக்கணிப்பையும், அடுத்து வரும் நாட்களில் எமது தாய்ச் சங்கத்தின் அறிவுறுத்தலுடன் தொடர்ச்சியான பெரியளவில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-4.107)

யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில்
பெருந்திருவிழா - 2016

| | | |
|---|---|---|
| 06.04.2016 புதன்கிழமை | கொடியேற்றம் | நண்பகல் 12.00 மணி |
| 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை | தங்கரதம் | மாலை 07.00 மணி |
| 13.04.2016 புதன்கிழமை | வேட்டைத்திருவிழா | காலை 07.30 மணி |
| 13.04.2016 புதன்கிழமை | சப்பரம் | மாலை 07.00 மணி |
| 14.04.2016 வியாழக்கிழமை | தேர் | காலை 09.00 மணி |
| 15.04.2016 வெள்ளிக்கிழமை | தீர்த்தம் | முற்பகல் 11.00 மணி |
| 16.04.2016 சனிக்கிழமை | பூங்காவனம் | மாலை 07.00 மணி |

பகல் திருவிழாக்கள் வசந்த மண்டபப் பூசை முற்பகல் 11.00 மணி தொடர்ந்து உள்வீதி உலா நடைபெறும்.

மாலைத் திருவிழாக்கள் வசந்த மண்டபப் பூசை மாலை 06.15 மணி தொடர்ந்து உள்வீதி, வெளிவீதி உலா நடைபெறும்.

திருவிழா நாள்களில் தினமும் நண்பகல் 12.00 மணிக்கு கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.

பிள்ளையார் பணியில் நிற்கும்
கோயில் நிர்வாகம்.

நகுலா ஜீ வல்லர்ஸ்
தங்கப்பவுன் நகை வியாபாரம்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.5

நாடளாவிய ரீதியில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் பௌதிகவளக் குறைபாடுகள், ஆசிரியர் ஆளணிக் குறைபாடுகள் மற்றும் கல்வித் தேவைகள் தொடர்பான தரவுகளைப் பெற்று அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அகில இலங்கை இந்து மாமன்றக் கல்விக் குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் இவை தொடர்பான கலந்துரையாடல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேவையான தகவல்களை எழுத்து மூலம் கல்விக்குழு, அகில இலங்கை இந்து மாமன்றம்,சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், இந்தச் செயற்பாட்டை சிறந்த முறையில் மேற்கோள்வதற்கான ஒத்துழைப்பு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

# தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு,ஏப்.5

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் எதிர்காலத்தில் மின்சாரம் தடைப்படுமானால், இலங்கை ராணுவத்தின் இயந்திரவியல் பொறியியலாளர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தித் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு அரசு கொள்கை ரீதியிலான தீர்மானமொன்றை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மக்களுக்குத் தொடர்சியான மின்சாரத்தை விநியோகிப்பது தொடர்பாக சட்டமொன்றைக் கொண்டு வருவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் அமைச்சர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த பேச்சின் அடிப்படையில் அரசு மேற்குறித்த தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

மக்களுக்குத் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு தடைகளை ஏற்படுத்தும் எந்தவொரு இடத்துக்கும் உடனடியாகப் பொலிஸாரையும், தேவையேற்பட்டின் இராணுவத்தையும் அழைப்பதற்கு அரசு மேலும் எண்ணியுள்ளது.

அதற்கு மேலதிகமாக,2008 ஆம் ஆண்டில் இந்த நாட்டின் மின்சாரத்தை விநியோகிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை முன்வைக் கப்பட்டிருந்தது.

இந்தப்பரிந்துரை அறிக்கை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும், மேற்கொள்ளாதிருந்தமை தொடர்பில் இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளரிடத்திலும், அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியுள்ள பொறியியலாளர்களிடத்திலும் அதற்கான விளக்கங்களைக் கோருவதற்கும் அரசு மேலும் தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-4,22)

## சேவை நலன் பாராட்டு

கடந்த முப்பது வருட கல்விச் சேவையில் எமது பாடசாலையில் இருபத்தைந்து வருடங்களாக ஆசிரியராகப் பிரதி அதிபராக அரும்பணியாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்



செல்வி
**செல்வராணி முத்துக்குமாரசாமி**
(B.A,PGDE)

விந்தைமிகு மனத்திடத்துடன்
இங்கிதமாய் கதை பேசி
பாடசாலையில் பவனிவந்து
பக்குவமாய் கடமை புரிந்தீர்
என்றும் பல்லாண்டு வாழ
அகவை ஐம்பத்தைந்தில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
நீடூழி வாழி.

**கல்விச் சேவை விவரம்**

இ/பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயம் - 26.12.1985 - 15.03.1990
யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம் - 16.03.1990- 09.05.1991
யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம் - 10.05.1991 - 05.04.2016

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்

## யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையில் ஈச்ச மோட்டையில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

## காணிவிற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெரு லேனில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

## PERSONAL CLASSES

இலக்கணப்பிழையின்றி ஆங்கிலத்தில் கதைக்கப்பயில By: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip/ cer in Engilsh and Science London (BTEC, MLS)
வகுப்புகள் யாழ்ப்பாணம், சங்கானை

077 675 1649

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு, மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல்,திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

Manufactured by :
jeewaka Herbal Products (pvt) Ltd
yakkala

அனைத்து பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல. 288, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)
தொ.பே. 021 222 2567

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள DMI பிரதான கிளைகளுக்கு O/L, A/L படித்தவர்கள் தேவை.

* அனுபவம் அவசியமற்றது
* தங்குமிடம் உணவு வசதிகள் உண்டு.
* O/L பெறுபேறு அற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
* EPF,ETF,Medical,Insurance வசதிகள் உண்டு.
* Supervisor, Team Leader, Administration

077 136 3797/ 077 556 6226

## கேள்வி அறிவித்தல்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG ) -2016 வவுனியா வடக்குப்பிரதேசசபை, நெடுங்கேணி

1. ஒப்பந்த பெயர், இல:- வாராந்த சந்தை அமைத்தல் (புளியங்குளம் கடைத்தொகுதி) PSDG/VU/VNPS/W/03
2. ஒப்பந்த பெயர், இல:- கனகராயன்குளம் ஆரம்பபாடசாலை வீதி கல்லிட்டுத்தாரிடல். PSDG/VU/VNPS/W/04

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களிற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் குறிப்பிடப்பட்ட திட்டங்களிற்கான இக்ராட் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி (தொலைபேசி: 0243248346, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை 2016.04.27ம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் இடத்திலிருந்து 2016.04.05ம் திகதியிலிருந்து 2016.04.27ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் முகவரிக்கு 2016.04.27ம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 77 நாட்கள் (எழுபத்தேழு 2016.07.13ம் திகதி) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (MN) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. PSDG/VU/VNPS/W/03 | வாராந்தசந்தைஅமைத்தல்-புளியங்குளம்(இறைச்சி,மீன் கடைத்தொகுதி) | 0.80Mn | 3 Months | C7 or Above | 8,000 | 2016.08.10 |
| 2. PSDG/VU/VNPS/W/04 | கனகராயன்குளம் ஆரம்பபாடசாலை வீதி கல்லிட்டுதாரிடுதல்-கனகராயன்குளம் | 2.58Mn | 3 Months | C7 or Above | 30,000 | 2016.08.10 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2016.04.12 திகதி 14.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
2016.04.05

## வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 10**
**ஆதன இலக்கம் :- 69 (புதிய இலக்கம்)**
**நவாலி வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/136 நவாலி**

வட்டாரம் 10 . நவாலி வீதி, ஆதன இலக்கம் 69 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை " வண்ணலித் தோட்டம்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு குளி 11 கொண்ட) இவ்வாதனமானது யாழ்ப்பாணம் நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த கந்தையா நடராசா ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் அதேயிடத்தைச்சேர்ந்த அருணாசலம் சக்திவேல் பெண் சரோசாதேவி என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு. இ. வசந்தசேனன் அவர்களால் எழுதப்பட்ட 6398 ஆம் இலக்க 2004.10.05 ஆம் திகதிய அறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவகை (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு. த. தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 8546ஆம் இலக்க 2016.02.16 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " வண்ணலித் தோட்டம்" குளி 11 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அருணாசலம் சக்திவேல் பெண் சறோசாதேவி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் மீள போட்டியிடப் போவதில்லை

## கொடுத்த வாக்கு மாறாது என்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, ஏப்.5
ஜனாதிபதித் தேர்தலில் மீண்டுமொரு தடவை போட்டியிடப் போவதில்லையென்று நான் ஆரம்பத்தில் வழங்கிய வாக் குறுதியில் எந்தவொரு மாற்றமும் இல்லை.- இவ்வாறு ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி நடைமுறையை இரத்துச் செய்வது எனக்குரிய கருமம் அல்ல. அது நாடாளுமன்றத்துக்கு உரிய செயற்பாடு. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி நடைமுறையை இரத்துச் செய்வதற்கு எனது முழுமையான அனுமதியை வழங்கியுள்ளேன்.

இது சம்பந்தமாகச் செயற்படும் பொறுப்பு நாடாளுமன்றத்துக்கே இருப்பதால் அதை நிறைவேற்றுவது நாடாளுமன்றத்தின் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

நான் இது சம்பந்தமாக ஆரம்பத்தில் தெரிவித்திருந்த வார்த்தையில் எந்தவொரு மாற்றமும் இல்லை - என்று தெரிவித்துள்ளார்.

(ற-ஐ-22)

# தற்கொலை அங்கி தொடர்பான விவரம் கண்டறியப்படவில்லை

## பயங்கரவாத விசாரணைப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.5
சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியும், வெடிபொருள்களும் ஏன் வீட்டுக்கு எடுத்து வரப்பட்டன என்பது தொடர்பில் இதுவரை காரணங்கள் வெளிவராதபோதிலும், குறித்த பொருள்கள் அனைத்தும் 2008 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்று தெரிய வந்துள்ளது என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தத் தற்கொலை அங்கிக்குச் சமமான அங்கிகள் பல 2008 ஆம் ஆண்டு பாதுகாப்புப் பிரிவால் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவரிடம் நீண்ட விசாரணைகள் மேற்கொண்ட போதிலும் குறிப்பிடத்தக்க தகவல்கள் எவையும் தெரியவரவில்லை என்றும் பயங்கரவாதம் தொடர்பான விசாரணைப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஐ-5)

# மாணவர்கள் கௌரவிப்பு

வவுனியா, ஏப்.5
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இருந்து பரீட்சை எழுதி சித்திபெற்ற 35 மாணவர்கள் நேற்றுப் பாடசாலைச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார்கள். அத்தோடு மாணவர்களுக்கான உதவித் தொகைகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் பாடசாலை அதிபர் திருமதி கமலேஸ்வரி பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்றது.

2015ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களே அதிபர், ஆசிரியர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

கணிதம், விஞ்ஞானம்,வர்த்தகம், மற்றும் கலைப் பிரிவில் மாவட்ட ரீதியாக தெரிவான மாணவர்களுக்கு வவுனியா ஒஸ்ரியா நிறுவன உரிமையாளர் திருமதிசிவஜீவன் வேந்தினி யால் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன. அத்தோடு வர்த்தகர் எஸ்.ஜீவனால் 4 மாணவர்களுக்கு 5ஆயிரம் ரூபா வீதம் பண உதவிகளும் வழங்கப்பட்டன.

பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், பரிசில்களையும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கே.கே.மஸ்தான் வழங்கினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஒஸ்ரியா நிறுவனத்தின் உரிமையாளர் திருமதி சிவஜீவன் வேந்தினி, சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.எஸ். வாசன், மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

(ற-ஐ-21)


## சிறிகுமரன் றெக்ஸ்

தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விசேடமாக Office Wear Sarees





* பட்டுச்சாறி
* பன்சிசாறி
* கொட்டன்சாறி
* சல்வார்
* சால்வார் துணி
* TOPவகைகள்
* ரவுசர்,சேட் என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

சிறிகுமரன் றெக்ஸ்
770,K.K.S. றோட்,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

## காசி யாத்திரை
## ஆரம்பம் 10.06.2016, யாத்திரீகர்கள்.20, நாள்கள் 10

**தரிசிக்கும் இடங்கள்:**
டெல்லி அட்ஷயதாம் மற்றும் சில இடங்கள் ஆக்ரா, தாஜ்மகால், மதுரா, கிருஷ்ண ஜென்மபூமி, அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம், நேருவீடு, சயன ஆஞ்சினேயர், சீத்தாமடி, சீதை தாயாருடன் பூமியுள் புதையுண்ட இடம் பிர்லா மந்திர், காசிவிஸ்வநாதர், காசிவிசாலாட்சி காலபைரவர், அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த சுடலை உட்பட காசியில் பல இடங்களில். அத்துடன் இராமேஸ்வரம், இராமர்பாதம், பஞ்சமுக ஆஞ்சினேயர், திருப்புலாணி, உத்திரகோசமங்கை உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு மூன்றுவேளை, காலை மாலை,கோப்பி, ரீ, 2 லீற்றர் குடிநீர், பயணம் முழுவதும் AC வாகன வசதி மற்றும் விமானம், 2பேருக்கு குளியலறை இணைந்த அறைகள் மேலும் மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதனால் நமது குருக்கள்மார்களும் தயக்கமின்றி சேர்ந்துகொள்ளலாம்.

பயணம்: கொழும்பு, டெல்லி, காசி, டெல்லி, சென்னை, மதுரை, சென்னை, கொழும்பு விமானம் சுற்றிப்பார்க்க AC பஸ், AC வான்.

விருப்பமுடையவர்கள் மேலும் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும்.

மேலதிக விவரங்களுக்கு
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் - ராஜன்
இல.59, 3/6 செட்டியார்தெரு, கொழும்பு - 11
077 768 0102, 077 736 2154

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு

| | |
|---|---|
| வங்கியியல் கற்கைநெறிகள் IABF & DABF | Medium :- Tamil & English<br>Minimum qualification :-<br>G.C.E. O/L 6 Passes including 5 Credits |
| பட்டயக்கணக்காளர் ஆவதற்கு Chartered Accountancy Executive Level , Business level | Medium :-Tamil & English<br>Minimum qualification:-<br>G.C.E. A/L 3 Passes |
| ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு CERTIFICATE COURSE IN ENGLISH | Minimum qualification :-<br>G.C.E. O/L 3 Passes<br>Total Hours :- 130 Hours |

A/L வர்த்தகப்பிரிவுகளும் இடம்பெறுகின்றன 2016 & 2017 & 2018

Further Details :-
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
Contact NO :-
021 222 3382, 021 2229149

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

* ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
* ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்,
* ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
* ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில்.6 மாத கற்கைநெறி

(Trainer Training (teacher Training programme)

→ 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
→ அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
→ நவீன அணுகுமுறைகள்
→ Psychology, Leadership, Personality development.
→ Teaching practice
→ How to use the Techniques and teaching aids effectively in English

New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)
9.am (18.04.2016) திங்கள் (Week day batch)

4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

P. ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:
384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)
தொலைபேசி: 021 221 7944

கொழும்பு முகவரி:
19/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஞ்சிச் செய்கையில் முதலிட்டு ஏமாற்றமடைந்தோருக்குத் தீர்வு

## வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்ப்பாண மாவட்டத்தில் இஞ்சிப் பயிர்ச் செய்கையில் முதலீடு மேற்கொண்டு ஏமாற்றமடைந்தோர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்று அறிய முடிகின்றது. இந்த முதலீட்டு நடவடிக்கை தொடர்பில், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்திடமிருந்து அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட வடபகுதியில் இஞ்சிப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதன் மூலம் முதலீட்டுத் தொகையைப் போன்று பல மடங்கு தொகையை வருமானமாக பெற்றுக் கொள்ளலாம் என்று 2014 ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் ஒன்று கவர்ச்சிகரமான விளம்பரம் மற்றும் பரப்புரை மேற்கொண்டது. அதையடுத்து பலர் இதில் முதலீடு மேற்கொண்டிருந்தனர்.

ஒரு கிலோ இஞ்சியை ஆயிரம் ரூபா விலைக்கு விற்பனை செய்ய முடியும் என்றும், அறுவடை செய்யும் உத்தேச அளவை ஆயிரம் ரூபாவால் பெருக்கி பெறக் கூடிய இலாபத்தை கணக்கிட்டுக் காட்டி இஞ்சிச் செய்கையில் முதலீடு செய்யுமாறும் கூறப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட தனியார் துறையினரின் விளம்பரத்தால் கவரப்பட்ட பலர், மில்லியன் கணக்கில் இஞ்சிப் பயிர்ச் செய்கையில் முதலீடு செய்தனர். ஆனால், முதலீட்டுத் தொகையைக்கூட அறுவடை மூலம் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. இந்த நிலையில் இந்த முதலீட்டு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள், வடக்கு மாகாண ஆளுநருக்கு முறைப்பாடு செய்திருந்தனர். இஞ்சிப் பயிர்ச் செய்கை நடைமுறை ஒழுங்கு மற்றும் பொது மக்கள் ஏமாற்றப்பட்ட நடை முறை தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொண்டுள்ள வடக்கு மாகாண ஆளுநர், பயிர்ச் செய்கையுடன் தொடர்பான விவசாயத் திணைக்களத்திடமும் விரிவான அறிக்கையைக் கோரிப் பெற்றுக்கொண்டுள்ளார்.

விவசாயத் திணைக்களத்திடம் இருந்து பெறப் பட்ட அறிக்கையில், இஞ்சிப் பயிர்ச் செய்கை சம்பந்தமாக விவசாயத் திணைக்களத்தையோ அல்லது அது தொடர்பான உரிய அதிகாரிகளையோ குறித்த நிறுவனம் தொடர்பு கொள்ளவில்லை எனவும், இது சம்பந்தமான ஆலோசனைகளைக் கூட பெறவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான தனியார் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் பரப்புரையை நம்பி இஞ்சிப் பயிற்சி செய்கை தொடர் பாக சரியான வழிநடத்தல் இன்றி, இவ்வாறான செய்கையை மேற்கொள்ள வேண்டாம் என்று மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததையும் ஆளு நருக்கு வழங்கிய அறிக்கையில் விவசாயத் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது. விவசாயத் திணைக்களத் திடமிருந்து பெற்றுக் கொண்ட அறிக்கையை அடிப்படையாக வைத்து விசாரணைகளை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்னெடுத்துள்ளது என்று தெரிய வருகின்றது. (ற-ஐ-5-11-ரி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய சாரணர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10 திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நூற்றாண்டு வருட செயற்றிட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் மற்றும் ஆவணப்படுத்தல் நிகழ்வில் அனைத்து முன்னாள் சாரணர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.இந்து சாரணர் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி5)

## முஸ்லிம் பெண்கள் திருமண வயது குறித்துப் பேச்சின் பின்னரே முடிவு

### அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.5

18 வயதுக்குட்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுவதை மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கான அமைச்சால் மாத்திரம் தடுக்க முடியாது. மதம் சார்ந்த விடயம் என்பதால், முஸ்லிம் தரப்பினருடன் பேசிய பின்னரே தீர்மானத்துக்கு வர முடியும்.- இவ்வாறு அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.

18 வயதுக்குட்பட்ட முஸ்லிம் பெண்களுக்குத் திருமணம் செய்து வைப்பது தொடர்பில் அந்த சமூகத்திலிருந்தே எதிர்ப்புகள் வருகின்றன என்று குறிப்பிட்டுள்ள அவர், தானும் ஒரு தாய் என்ற வகையில், 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பதை எதிர்க்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், முஸ்லிம் அமைச்சர்கள், சமூகப் பிரதிநிதிகள், நீதி அமைச்சு எனப் பலதரப்புக்களுடன் கலந்துரையாடிய பின்னரே, தன்னால் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முஸ்லிம் பெண்களுக்கு 18 வயதுக்கு முன்னர் திருமணம் செய்து வைக்கப்படுவதை மதப் பிரச்சினையாகப் பார்க்காமல், சிறுவர் நலன் மற்றும் சமூகப் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும் என்று புதிய அரசமைப்பை உருவாக்கும் குழுவின் மக்கள் கருத்தறியும் அமர்வில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 03 . 1932



உதிர்வு 18 . 03 . 2015

அமரர் சிவக்கொழுந்து செல்வமாணிக்கம்

மக்களுள் மாணிக்கமாம் செல்வமாணிக்கமே
மறைந்து ஓராண்டு ஆனதுவோ மாண்புப் பண்புடன்
மக்கள் சேவை செய்தாய் மறையாது உங்கள் புகழ்
மறப்போமா நாம்...!

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

சி.இராஜகுலசிங்கம் (ஆசிரியர்)
குடும்பம்

(C 02) (பட)

## இஞ்சிச் செய்கை மேற்கொள்வதற்கான இலவச ஆலோசனை, வழிகாட்டல்கள்

### யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.5

குடாநாட்டில் இஞ்சிச் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களை வழங்கவும், இஞ்சிக் கிழங்குகளை மானிய அடிப்படையில் வழங்குவதற்கும் திட்டமிடப் பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இஞ்சி பயிரிடுதல் சம்பந்தமான விவசாயிகளின் தெரிவு தற்பொழுது யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவர்களுக்கு 2 பரப்புக்குரிய நடுகைக் கிழங்கும், வெப்பநிலையை கட்டுப்படுத்தக்கூடிய நிழல்நெற் என்பனவும் 50 வீத மானிய அடிப் படையில் வழங்கப்படவுள்ளன.

இதனைவிட இஞ்சி பயிரிடுதல் தொடர்பான பயிற்சிகளும், ஆலோசனைகளும் அந்தந்தப் பிரதேச போதனாசிரியர்கள் ஊடாக வழங்கப்படும். பயிர்ச்செய்கையின் போது அந்தந்தப் பிரிவு போதனாசிரியர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை களப் பரிசோதனையும் மேற்கொள்வார்கள்.

மேலதிகமாக இந்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயி களை ஒரு குழுவாக்கி இஞ்சி ஏற்றுமதி செய்யும்நிறுவனங்களுடனும்தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் தீர்மானித்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனத்தின் ஆசை வார்த்தைகளை நம்பி, தகுந்த ஆலோசனைகள் இன்றித் தாம் மேற்கொண்ட இஞ்சிப் பயிர்ச் செய்கையில் பெரிய நட்டத்தை விவசாயிகள் எதிர்கொண்டனர்.

சரியான ஆலோசனைகள், வழி நடத்தல்களின் கீழ் இந்தப் பயிரை பயிரிடுவதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், ஆர்வமுள்ள விவசாயிகள் விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம்.- என்றும் தெரிவித்தார். (ற-ஐ-ரி)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் விக்னேஸ்வரன் சஞ்சீவன்

தோற்றம் : 05.11.1982 மறைவு : 18.03.2015

திதி:- அபரபக்க திரயோதசி
(05.04.2016)

மதிமுகத்தையனே எதிலும் முந்தும் நீ
இதிலும் முந்திவிட்டாய்
உன் கடமை முடிந்ததென்று காலனும்
எண்ணினானோ பாசத்தைப்
பிரிக்கத்தான் பாசக்கயிற்றைவீசிய
காலனுக்கு வெம்பியழும் நெஞ்சங்களை
வெல்ல முடியாதென காலனுக்குச்
சொல்லினை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு ஓராண்டு
மறைந்தாலும் எம் உயிரோடு கலந்து
நிற்பாய் உயிராக

உமது ஆத்மா இறைவனடியில் என்றும்
இளைப்பாற வேண்டி உன் [illegible]

"சிந்துபவனம்"
சிவன்கோயில் வீதி, சித்தன்கேணி.

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.5

பிரதேச கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதேச மட்டப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

மூன்று வகையில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டிகளில் 2015,2016 ஆம் ஆண்டுக்கான அரச இசைவிருது வழங்கல் போட்டிக்காக குறித்த ஆண்டுகளில் இசை சார்ந்த இறுவட்டுக்கள், புத்தகங்களை வெளியிட்டவர்கள் தமது படைப் புக்களை இந்த மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம்.

திறந்த போட்டிகளாக நடைபெறவுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான குறுநாடகம், சிறுவர் நாடகம் என்று மட்டுப் படுத்தப்பட்ட போட்டி விண்ணப்பங்களை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும், பாட சாலை மற்றும் திறந்த போட்டியாக நடைபெறவுள்ள தேசிய இலக்கியப் போட்டிக்கான விண்ணப்பங் களை அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட போட்டியாளர்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் போட்டி நிபந்தனைகள், விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி5)

## பெருந்திருவிழா

புங்குடுதீவு கிழக்கு கண்ணகைபுரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்குக் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

தினமும் பூசைகள் காலை 7 மணிக்கு ஆரம்பித்து நண்பகல் 12 மணிக்கு நிறைவடைய உள்ளதுடன், மாலை 4 மணிக்கு ஆரம் பிக்கும் பூசைகள் இரவு 8 மணியுடன் நிறைவடைய உள்ளன. பெருந்திருவிழாவில் எதிர் வரும் 20ஆம் திகதி புதன் கிழமை மு.ப. 10 மணிக்குத் தேர்த் திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன என்று ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர் குறிப்பிட்டுள்ளனர். (ற-ஐ-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் கடத்தலை தடுக்க கடலில் ரோந்தைத் தீவிரப்படுத்துங்கள்

## வட பிராந்திய கடற்படையினருக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி பணிப்புரை

யாழ்ப்பாணம், ஏப்.5

போதைப் பொருள்கள் கடல் வழியாகவே கடத்தப்படுவதால், இந்தக் கடத்தல் நடவடிக்கைகளை நடுக் கடலிலும், கடல் எல்லையிலுமே தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன் போதைப் பொருள் கடத்தலை முறியடிக்க வடக்குக் கடற்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைளை அதிகரிக்குமாறு வட பிராந்திய கடற்படையினருக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பணிப்புரை விடுத்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தல் வழக்கொன்றில் பிணை வழங்குமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வட பகுதிக்குள் கேரளக் கஞ்சா இந்தியாவில் இருந்தே கொண்டு வரப்படுகின்றது என்பது உறுதியாகி விட்டது.

அண்மைக் காலமாக மாதகல், பருத்தித்துறை, மயிலிட்டி, மன்னார் ஆகிய வடபகுதிக் கடற்கரைகளிலும், நிலப் பகுதிகளிலும் பெருந்தொகையான கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டு, அவற்றைக் கடத்தி வந்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் போதைப் பொருள்களைக் கடத்தி வரும் படகுகள் எவை, அத்துடன் நடுக் கடலில் போதைப் பொருள்களை ஒன்றில் இருந்து மற்றொன்றுக்குப் பரிமாற்றம் செய்வதில் ஈடுபடும் படகுகள் எவை என்பதைக் கண்காணித்துக் கையும் மெய்யுமாகப் பிடித்து போதைப் பொருள் கடத்தலை முறியடிக்க வேண்டும். - என்றும் மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

போதைப் பொருள்கள் கடல் வழியாகவே கடத்தப்படுவதால், இந்தக் கடத்தல் நடவடிக்கைகளை நடுக் கடலிலும், கடல் எல்லையிலுமே தடுத்து நிறுத்த வேண்டும். போதைப் பொருள்கள் கரைக்கு வந்து சேரும் வரையில் சட்டம் பொறுத்திருக்க முடியாது.

இலங்கைக்கடல் இலங்கைக்கே சொந்தமானது. கடல் வழியாகக் கடத்தி வரப்படுகின்ற போதைப் பொருள்களைக் கைப்பற்றி அவற்றைக் கொண்டு வருபவர்களைக்கைது செய்யும்பொறுப்பு கடற்படையினருக்கு உண்டு.

வடக்குக்கடலில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்து, சோதனை நடவடிக்கைளைத்தீவிரப்படுத்தி கேரளக் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலை முறியடிக்குமாறு

> போதைப் பொருள்கள் கடல் வழியாகவே கடத்தப்படுவதால், இந்தக் கடத்தல் நடவடிக்கைகளை நடுக் கடலிலும், கடல் எல்லையிலுமே தடுத்து நிறுத்த வேண்டும். போதைப் பொருள்கள் கரைக்கு வந்து சேரும் வரையில் சட்டம் பொறுத்திருக்க முடியாது.

வடபிராந்திய கடற்படைத் தளபதிக்கு இந்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

அதேநேரம் கொழும்பு போதைப் பொருள் தடுப்புப்பொலிஸாரின் விசேட கடலோரப் பொலிஸ் பிரிவு ஒன்றை உருவாக்கி வடக்குக் கடலில், இந்தியாவில் இருந்து நேரடியாக பொருள்கள் வரக் கூடிய கடலோர எல்லைகளில் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொலிஸ் மா அதிபருக்கு இந்த நீதிமன்றம் பரிந்துரைக்கின்றது.

இந்தப் போதைப்பொருள் கடத்தல் முறியடிப்புக்கான விசேட கடலோர பொலிஸ் பிரிவினர் ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் வரையிலும், மறுபக்கமாக ஊர் காவற்றுறையில் இருந்து பருத்தித்துறை வழியாக முல்லைத்தீவு வரையிலும் கண்காணிப்பு மற்றும் தமது சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும்.

இந்தக் கடலோரப் பகுதிகளே, இந்தியாவில் இருந்து போதைப் பொருள் கடத்தப்படும் ஆரம்ப மற்றும் மையப் பிரதேசங்களாகத் திகழ்கின்றன.

இந்தப் பிரதேசங்களின் ஊடாக வடபகுதிக்குக் கடத்தி வரப்படுகின்ற போதைப் பொருள்களில் 25 வீதமானவை யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதிகளிலும், 75 வீதமானவை நாட்டின் தென்பகுதிப் பிர தேசங்களிலும் வியாபாரத்துக்காகக் கடத்திச் செல்லப்படுகின்றன. இது விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றது.

போதைப் பொருள் கடத்தலுக்கான முக்கிய தளமாக வட பகுதியும், யாழ்ப்பாணமும் திகழ்வதாகக் கூறப்படுகின்றது.

அதிகரித்துச் செல்லும் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் கடத்தற்காரர்களின் செயற்பாடுகளை முறியடிப்பதற்கும் கடற்படையினரும், பொலிஸாரும் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ள இன்றைய நிலையில் போதைப் பொருள் கடத்தல் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்கில் பிணை கோரிச்செய்யப்பட்டுள்ள மனுவை சாதகமாகப் பரிசீலனை செய்து பிணை வழங்குவது என்பது போதைப் பொருள் தொடர்பில் தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில் பிழையான வழிகாட்டல் நடவடிக் கையாகவும் - முரண்பட்ட நடவடிக்கையாகவும் அமைந்துவிடும்.- என்றார்.

பிணை மனுவை நிராகரித்த நீதிவான் இளஞ்செழியன் கடற்படையினருக்கான பணிப்புரையை வடபிராந்திய கடற்படைத் தளபதிக்கும், போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்கான விசேட கடலோர பொலிஸ் பிரிவின் உருவாக்கத்துக்கான பரிந்துரையை பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பி வைக்குமாறு பணித்தார்.

(ற-ஜ-5)

# அச்சுவேலி மற்றும் புத்தூரில் அதிகரித்த விலையில் பணிஸ்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.5

அச்சுவேலி மற்றும் புத்தூர்ப் பகுதிகளில் பணிஸ் வகைகள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்று பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் பாஸ்கரனிடம் கேட்டபோது பணிஸ் விலை அதிகரிக்கப்படவில்லை. விலையை அதிகரித்து விற்பவர்கள் மீது நுகர்வோர் பாவனையாளர் அதிகார சபையூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 450 கிராம் பாணின் விலை நான்கு ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்து. எனினும் அறிவிப்புக்கள் எவையும் இன்றி பணிஸின் விலையும் ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றது என்று அச்சுவேலி, புத்தூர்ப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் செயலாளர்-

பணிஸுக்கான கட்டுப்பாட்டு விலை 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிர்ணயிக்கப்படவில்லை. அப்போது அறிவிக்கப்பட்ட விலை நிலையே தற்போதும் நடைமுறையில் உள்ளது. எனினும் தற்போது பாணின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து குறிப்பிட்ட பிரதேச வியாபாரிகள் தம்முடைய வெதுப்பகப் பணிஸ்களுக்கான விலையை நிர்ணயித்து விற்பனை செய்கின்றனர்.

இவை எம்முடைய கட்டுப்பாட்டு விலைகளுக்கு உட்பட்டதாகவே விற்பனை செய்யப்படுகின்றன. கட்டுப்பாட்டு விலைகளின் படி கிறீம் பணிஸ் ஒன்று 35 ரூபா முதல் 40 ரூபா வரையும், ரீ பணிஸ் ஒருசோடி 30 ரூபாவாகவும், கறி பணிஸ், சங்கிலி பணிஸ், ஜாம் பணிஸ் என்பவை 30 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் அதே வேளை, கொம்பு பணிஸ் 20 ரூபாவுக்கு விற்கப்படுதல் வேண்டும் என்ற கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பாணின் விலைகள் அதிகரிக்கப்பட்டு வரும் வேளையில் பணிஸ் விலை அதிகரிக்கப்படவில்லை. கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு விற்கும் வியாபாரிகள் மீது நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.-என்றார்.

முன்னதாக 450 கிராமுக்குக் குறையாத நிறை கொண்ட பாணுக்கு 4 ரூபா அதிகரிக்கப்பட்ட நிலையில் ஒரு சோடி பணிஸுக்கு 5 ரூபா அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

பாண் விலை நிறுவன மயப்படுத்தப்பட்ட நிலையில், வெதுப்பக உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் விலை அதிகரிப்புச் செய்து பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. பணிஸ் வகைகளின் விலை அதிகரிப்புக்கு எந்த விதமான அறிவித்தல் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

பாண், பணிஸ் விலை அதிகரித்துள்ள நிலையில் அவற்றின் நிறை அளவு மற்றும் தரநிலையும் குறிப்பிடத்தக் அளவுக்கு இல்லை. அதனைக் கண்காணித்து பொருத்தமான தர நிலை, சீரான விலையில் இவற்றை விற்பனை செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற-ஜ-ரி5.1)

# மிருக பலிக்கான இடைக்காலத் தடை சைவத்தின் புனிதத்தைப் பாதுகாக்கும்

## அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

ஆலயங்களில் மிருகங்களைப் பலியிட்டு வேள்வி நடத்துவதற்கு யாழ்.மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியமைக்குஅகில இலங்கை இந்து மாமன்றம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இந்த உத்தரவானது சைவ மதத்தின் உன்னத கொள்கையையும், ஆலயத்தின் புனிதத்தையும் மேம்படுத்த உதவுமென்பது எமது நம்பிக்கை. சமுதாயத்திலுள்ள இவ்வாறான மூடக்கொள்கைகளையும், மதத்துக்கு முரணான செயல்களையும் தடுக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கும், சமய அமைப்புக்களுக்குமே உரியதாகும். அந்த வகையில் நீதிமன்றத்தின் இந்தத் தடையுத்தரவு மிகவும் போற்றுதற்குரியது.

எனினும் சமீபத்தில் யாழ். மாவட்டத்தின் சங்கானை மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேசங்களில் இவ்வாறான மிருகபலி நடைபெற்றதையிட்டு நாம் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆலயங்களில் மிருக பலி மேற்கொள்வதை எமது சமயம் இதுவரை அங்கீகரிக்கவுமில்லை. எதிர்காலத்தில் அங்கீகரிக்கப் போவதுமில்லை. சகல உயிரினங்களும் ஆண்டவனின் குழந்தைகளென்றும், சகல உயிரினங்களுடனும் அன்பு பாராட்ட வேண்டுமென்றே எமது சமயம் போதிக்கின்றது.

அந்த வகையில் மிருக பலிக்கெதிரான நீதிமன்றத்தின் தடையுத்தரவைத் தொடர்ந்து, இந்து சமய கலாசாரத் திணைக்களம் விரைவில் இந்தச் சட்ட வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துச் சட்டமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகின்றோம் - என்றுள்ளது.

(ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் இன்று முதல் நெல் கொள்வனவு ஆரம்பம்

முல்லைத்தீவு, ஏப்.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாவது தடவையாக இன்றும் நாளையும் நெல் சந்தைப்படுத்தும் சபையால் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

மாவட்டத்தில் மேலும் 225 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட உள்ளது என்று முள்ளியவளை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.சுகந்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் நெற் செய்கையை மேற்கொண்ட 75 விவசாயிகளிடமும், முள்ளியவளை குமுழமுனை, புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையங்களின் கீழ் நெற் செய்கையை மேற்கொண்ட தலா 50 விவசாயிகளிடமிருந்தும் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

முள்ளியவளை நீராவிப்பிட்டியில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்துக்குரிய உணவுக் களஞ்சியத்தில் கடந்த வருடம் கொள்வனவு செய்யப்பட்டு இருப்பில் இருந்த நெல் முற்றாக இடமாற்றப்பட்டு தற்போது நெல் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் களஞ்சிய சாலை 800 மெற்றிக் தொன் நெல் கொள்ளளவைக் கொண்டது. ஆனால் போதிய நிதி ஒதுக்கீடு இன்மையால் தற்போது 300 மெற்றிக் தொன் நெல் மட்டுமே கொள்வனவு செய்யப்படவுள்ளது.

ஆரம்பத்தில் நெல் கொள்வனவு செய்வதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு இருந்தபோதிலும், போதிய களஞ்சிய வசதி இல்லாதிருந்தது. ஆனால், தற்போது களஞ்சிய வசதி கிடைத்துள்ள நிலையில், நிதி ஒதுக்கீடு போதாதுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் மேலும் 250 விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யமுடியும். முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் 975 விவசாயிகள் 2015-2016 கால போக நெற் செய்கையை மேற்கொண்டிருந்தனர். ஏற்கனவே 145 விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நெல் கொள்வனவு செய்யப்படவுள்ள 50 விவசாயிகளையும் சேர்த்து மொத்தம் 195 விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல்லைக் கொள்வனவு செய்ய முடிந்துள்ளது. - என்று தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தும் சபையால் நெல் கொள்வனவு நடவடிக்கை நடைபெறப்போவதை அறிந்து கொண்ட முள்ளியவளைப் பிரதேச விவசாயிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் முள்ளியவளை கமநல சேவை நிலையத்துக்குப் படையெடுக்க ஆரம்பித்திருந்தனர். சில விவசாயிகள் இரவிரவாக அங்கேயே தங்கி நின்றனர்.

இந்த நிலையில் அங்கு நின்றிருந்த ஒரு கமக்கார அமைப்புபின் தலைவர் நேற்று மாலைமுதல் அங்கு கூடிய விவசாயிகளின் பெயர்களை பட்டியலிட்டார்.

அதில் முறைகேடு நடைபெறுகின்றது என்று மாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், து.ரவிகரன் ஆகியோருக்கு சில விவசாயிகள் முறையிட்டதைத் தொடர்ந்து கமநல சேவை நிலையத்துக்கு நேற்றுச் சென்ற மாகாண சபை உறுப்பினர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோருடன் கலந்துரையாடி சுமுகமான முடிவை எட்டினர்.

இதன்படி பதிவு செய்யப்பட்ட பட்டியலை மீளாய்வு செய்து தகுதியான விவசாயிகளை இனம்கண்டு பட்டியலின் ஒழுங்கின் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு நெல்லை வழங்குவதற்கான படிவங்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்தனர். அதன்படி முள்ளியவளை கமநல சேவை நிலையத்தில் நேற்று 30 விவசாயிகளுக்குப் படிவங்கள் வழங்கப்பட்டன. இன்று மேலும் 20 விவசாயிகளுக்குப் படிவங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-102)

# 400 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

மன்னார், ஏப்.5

போரால் பாதிக்கப்பட்டு, பொருளாதார வசதி அற்ற பாடசாலை மாணவர்கள் 400 பேருக்கு மன்னார் புனர்வாழ்வு அமையம் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் இலுப்பைக்கடவை கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், போரால் பாதிக்கப்பட்ட மற்றும் பொருளாதார வசதி அற்ற பாடசாலை மாணவர்கள் 400 பேர் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்குப் பகுதியில் 19 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கும், இலுப்பைக் கடவை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் 17 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் உப தலைவர் செல்வி சாந்தினி கஸ்மீர், செயலாளர் அமல்ராஜ் பெர்னாண்டோ, பொருளாளர் தோமஸ் மரியதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த கற்றல் உபகரணங்களை வைபவ ரீதியாக வழங்கினர்.

குறித்த நிகழ்வுகளில் கிராம அலுவலர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகஸ்தர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(ற-ஐ-56)

# ரயிலுடன் மோதி இளைஞன் சாவு

மன்னார் தாராபுரம் பிரதான வீதி 4 ஆம் கட்டைப் பகுதியில் ரயில் மோதியதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் என்று வைத்தியசாலையை சேர்ந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் மன்னார் பெரியமடு கிராமத்தைச் சேர்ந்த இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து தலை மன்னார் நோக்கி நேற்று திங்கட்கிழமை அதிகாலை பயணித்த ரயிலுடன் மோதியே குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார். இவர் மன்னார் பொது வைத்தியசாலையில் மனநல நோய்க்கான சிகிச்சை பெற்று வந்தார் என்றும் - கடந்த வெள்ளிக்கிழமை சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார் என்றும் வைத்தியசாலையைச் சேர்ந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது. மன்னார் பொலிஸாரால், இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தனர்.

(ற-ஐ-21,56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்தோட்டம் முகாம் மக்களுக்கு சின்ன அடம்பனில் புதிய வீடுகள்

## வவுனியா மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு


வவுனியா, ஏப்.5
போரால் பாதிக்கப்பட்டு வவுனியா பூந்தோட்டம் அகதி முகாமில் உள்ள மக்கள் எதிர்வரும் ஜூன் மாதமளவில் நெடுங்கேணி சின்ன அடம்பன் பிரதேசத்தில் குடியமர்த்தப்படவுள்ளனர் என்று வவுனியா மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதிகிருபாகரன் தெரிவித்தார்.
அவர்களுக்கான வீடுகள் ஒவ்வொன்றும் அரை ஏக்கர் காணியில், 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன என்றும், இவ்வாறு 150 வீடுகள் ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தால் அந்தப் பகுதியில் அமைக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
போர் காரணமாக வடக்கின் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் கடந்த 20 வருடங்களாக பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வாழ்கின்றனர்.
இந்தக் குடும்பங்களுக்கு மீள் குடியமர்வு அமைச்சால் நெடுங்கேணி சின்ன அடம்பன் பிரதேசத்தில் காணிகள்ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் வாழ்வதற்கான நிரந்தர வீட்டுத்திட்டங்களும் அமைத்துகொடுக்கப்படவுள்ளன.

> பூந்தோட்டம் முகாமைச் சேர்ந்த மக்கள் தங்களை வேகமாக குடியமர்த்துங்கள் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

பூந்தோட்டம் முகாமைச் சேர்ந்த மக்கள் தங்களை வேகமாக குடியமர்த்துங்கள் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அவர்களைக் குடிமர்த்துவதற்கான அனைத்து வேலைகளும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. அங்கு வீதிகள், உட்பட அடிப்படை வசதிகள் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது ஒவ்வொன்றும் 10 லட்சம் ரூபாபெறுமதியிலான 90 வீடுகள் ஞானம்பவுண்டேசனால் அமைக்கப்படுகின்றன. மிகுதி வீடுகளுக்கான இடத் தெரிவுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
எதிர் வரும் ஜூன் மாதமளவில் பூந்தோட்டம் அகதி முகாம் மக்கள் வவுனியா வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் இராசபுரம் எனும் கிராமத்தில் அமைக்கபடும் இந்த வீடுகளில் குடியமர்த்தப்படுவார்கள் என நம்புகின்றேன்.
அங்கு குடியமர்த்தப்படும் மக்கள் தங்களுடையவாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவர்கள், கோழி வளர்ப்பதற்கோ அல்லது வேறு ஏதாவது தொழில்களை மேற்கொள்வதற்கோ வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
அத்தோடு அகதி முகாமில் உள்ள ஓரிரு குடும்பங்கள் தாங்கள் அங்கே போக மாட்டோம் என்றும், தங்களுக்கு அகதி முகாமிலேயே காணிகள் வழங்கி வீடுகட்டித் தர வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். அவர்கள் இருக்கும் அந்த அகதி முகாம் காணி தனியாருக்குச் சொந்தமானது அதை அரசால் அவர்களுக்கு வழங்க முடியாது. ஏற்கனவே வடக்கு மாகாண மீள் குடியேற்ற அமைச்சால் திட்டமிடப்பட்ட சின்ன அடம்பன் பகுதியில் அனைத்து மக்களும் குடியேற்றப்படுவர்.- என்றார். (ற-ஜ-21)

# சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் மருந்து விசிறப்பட்ட பழ வகைகள்

## குற்றஞ்சாட்டுகின்றனர் நுகர்வோர்



சாவகச்சேரி, ஏப்.5
சாவகச்சேரி பொதுச் சந்தையில் மருந்து விசிறப்பட்ட மாம்பழம் மற்றும் பலாப்பழம் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டும் நுகர்வோர் அதிக பணம் கொடுத்து வாங்கப்படும் குறித்த பழங்களைப் பின்னர் பயன்படுத்த முடியாத நிலையில் வீசியெறிய வேண்டியுள்ளது என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.
நேற்று இடம்பெற்ற பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்கென தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்களின் தேவைக்காக சாவகச்சேரி சந்தையில் மாம்பழங்களும், பலாப்பழங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. அவற்றை ஆலயங்களில் வெட்டியபோது அவை பிஞ்சுகளாக காணப்பட்டுள்ளன. ஆல யத் தேவைக்கென கட்டாயம் மாம் பழம் மற்றும் பலாப்பழம் கொள்வனவு செய்வார்கள் என்பதால், பிஞ்சுகளைப் பிடுங்கி மருந்து விசிறிப் பழுக்க வைத்து வாகனங்களில் கொண்டு வந்து சந்தைகளில் விற்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.
இது தொடர்பாக சாவகச்சேரி சந்தையில் உள்ள பழவகை வியாபாரிகளிடம் கேட்டபோது-
தூர இடங்களிலிருந்து வாகனங்களில் கொண்டு வரப்படும் பழ வகைகளை நாங்கள் கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றோம். பழுத்த நிலையில்காணப்படுவதால் அவற்றை அதிக விலை கொடுத்துக் கொள்வனவு செய்துள்ளோம் - என்று தெரிவித்தனர்.
பழுத்த வாசனையுடன் காணப்பட்ட பலாப்பழங்களை 500 ரூபா வீதம் கொள்வன்வு செய்திருந்தோம். பின்னர் அவற்றை வெட்டியபோது அவை பிஞ்சுகளாக் காணப்பட்டதால் விற்பனை செய்யப்படாதுள்ளன. அதனால் எமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. சந்தையில் பொதுச் சுகாதார பரிசோதகர் பரிசோதனை செய்யாததால் வாகனங்களில் கொண்டு வருவோர் மருந்து விசிறப்பட்ட பழங்களை விற்றுவிட்டுச் செல்கின்றனர்.- என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். (ற-ஜ-9)

# சிறுவர் நாடகம்

யாழ்ப்பாணம்,ஏப்.5
ஜேர்மன் தூதரகமும், ஜேர்மன் கலாசார நிலையமும், யாழ்ப்பாணப் பல்லைக்கழக நுண்கலைத்துறையும் இணைந்து வழங்கும் சிறுவர் நாடகம், நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.
'மூக்குடன் தனியாக'என்ற இந்த சிறுவர் நாடகம், சிறுவர்களுக்கான முதலாவது வார்த்தைகளற்ற நாடகமாக நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி)

# பல இடங்களில் இன்று மின் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.5
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்புமற்றும்பராமரிப்புவேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியலிருந்து மாலை5.30மணிவரைகீழ்க்காணும் இடங்களில் மின்சாரம் தடைப்படும்.
யாழ்.பிரதேசத்தில் உரும்பிராய் பிரதேசம் முழுவதிலும், வவுனியா பிரதேசத்தில் குகன்நகர் கிராமம், உமாமகேஸ்வரன் கிராமம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.
மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி பம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

# நகர சபை அறவீடுகள் குறித்த நடமாடும் சேவை இன்று முதல்

சாவகச்சேரி, ஏப்.5
சாவகச்சேரி நகரசபையால் வரி அறவீடுகள் தொடர்பான நடமாடும் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் ஆதன வரி, வியாபார உரிமக் கட்டணம், சைக்கிள் இலக்கத் தகடு போன்றவற்றுக்கான வரி அறவீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித் துள்ளார்.
சபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும், நடமாடும் சேவைகளை நடத்தி' அதன்மூலம் கிடைக்கும் நிதி, சபையால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தவுள்ளதெனவும் தெரிவித்தார்.
இன்று மீசாலை மேற்கில் உள்ள மலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடமாடும் சேவை இடம்பெறுமெனவும், முதலாம் வட்டார மக்கள் இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்துமாறும் அறிவித்துள்ளார்.
நடமாடும் சேவை தொடர்பான அறிவிப்பு நேற்று ஒலிபெருக்கி மூலம் நகரசபை அலுவலர்களால் முதலாம் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து 11 வட்டாரங்களிலும் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்ட ஆதன வரிகளுக்கு கழிவு வழங்கப்பட்டமை போன்று, ஆதனங்களுக்கு 2016 ஆம் ஆண்டுக்குரிய வரியைச் செலுத்துவோருக்கு கழிவு வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (ஜ-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் சந்நிதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற [illegible] நூல் வெளியீட்டு விழாவில் நல்லை ஆதீனமுதல்வர், வல்வை வைத்தீஸ்வர ஆலய பிரதமகுரு, வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு உட்பட நூல் ஆசிரியர் மற்றும் விருந்தினர்கள் விழா மேடையில் அமர்ந்திருந்த வேளையில்..... (அ)

# சாவகச்சேரி தற்கொலை அங்கி; விமல், தினேஸிடமும் விசாரணை

## பீரிஸின் வாக்குமூலத்தை அடுத்து

கொழும்பு,ஏப்.5
சாவகச்சேரியில் தற்கொலைத் தாக்குதல் அங்கி உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான, விமல் வீரவன்ச மற்றும் தினேஸ் குணவர்த்தன ஆகியோரிடமும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

சாவகச்சேரியில் கடந்த வாரம் மீட்கப்பட்ட வெடிபொருள்கள் வெள்ளவத்தைக்குக் கொண்டு வரப்படவிருந்தவை என்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம், கடந்த சனிக்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தனர்.

குற்றப்புலனாய்வுப் பணியகத்துக்கு அழைக்கப்பட்டு அவரிடம் இரண்டரை மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக, கேள்வி எழுப்புமாறு தமக்கு தினேஸ் குணவர்த்தனவே அறிவுறுத்தினார் என்று ஜி.எல்.பீரிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வாக்குமூலத்தில், தினேஸ் குணவர்த்தனவே அந்த செய்தியாளர் சந்திப்பை நடத்தவிருந்தார் என்றும், கடைசி நேரத்தில், அவருக்குப் பதிலாக தாம் அதில் பங்கேற்றிருந்தேன் என்றும் பீரிஸ் கூறியுள்ளார்.

இது பற்றி தினேஸ் குணவர்த்தனவுக்கே தெரியும் என்றும், தனக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் கூறியிருந்ததுடன், இதே போன்று விமல் வீரவன்சவும் கருத்து வெளியிட்டுள்ளார் என குறிப்பிட்டிருந்தார்.



இந்த நிலையில், பீரிஸின் வாக்குமூலத்தின் அடிப்படையில், விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தன ஆகியோரிடமும், குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-5)

### அரச ஊழியருக்கு 8 ஆம் திகதி சம்பளம்

கொழும்பு, ஏப். 5
தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு அரச ஊழியர்களது சம்பளம் மற்றும் பண்டிகைக் கால முற்கொடுப்பனவு என்பவை எதிர்வரும் 8ஆம் திகதி வழங்கப்படவுள்ளன என்று அரச நிர்வாகங்கள் அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தையும் அந்தத் தினத்திலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களின் சம்பளம் ஒவ்வொரு மாதத்தின் 20ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிக்கு இடைப்பட்ட தினங்களில் வழங்கப்படுவது வழமை. எனினும் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ற-ஐ-22)

## சாவகச்சேரி வெடிபொருள் மீட்பு தகவல்களை வெளியிட முடியாது

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.5
நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, சாவகச்சேரி சம்பவம் தொடர்பில் எல்லாத் தகவல்களையும் வெளியிட முடியாது. நடந்து கொண்டிருக்கும் விசாரணைகளுக்கு அதனால் பாதிப்பு ஏற்படக் கூடும். - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் ரம்பேவவில் நேற்று முன்தினம் சிவில் பாதுகாப்புப் படையின் ஆடைத் தொழிற்சாலையைத் திறந்து வைத்த பின்னர், ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சாவகச்சேரிச் சம்பவத்துக்கு முன்னர் வடக்கில் பத்தாயிரம் ஆயுதங்கள் படையினராலும், பொலிஸாராலும் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. அது பற்றி எவரும் கேள்வி எழுப்பவும் இல்லை. விமர்சிக்கவும் இல்லை.

உண்மையை மறைக்க வேண்டிய தேவை எனக்குக் கிடையாது. இப்போது ஊடகங்களுக்கு கவர்ச்சியான - சூடான தலைப்புகள் இல்லை. அதற்காக அரசு வதந்திகளைப் பரப்பத் தயாராக இல்லை. சம்பவங்கள் தொடர்பான எல்லாவற்றையும் வெளியிட முடியாது. நடந்து கொண்டிருக்கும் விசாரணைகளுக்கு அதனால் பாதிப்பு ஏற்படும். இதுவும் கூட தேசிய பாதுகாப்புக்கான நடவடிக்கைதான் - என்றார். (ற-ஐ-5)

## அதிவேக ரயில் எஞ்ஜின்கள் இந்தியாவிடம் கொள்வனவு

கொழும்பு, ஏப்.5
அதிவேக ரயில் எஞ்ஜின்கள் மற்றும் பயணிகளுக்கான பெட்டிகளை இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்திய கடனுதவிகள் யோசனைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ள ரயில் எஞ்ஜின்கள் மற்றும் பெட்டிகளுக்குத் தேவையான செலவின விவரங்கள் இந்தியத்தூதுவர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது ரயில்வே திணைக்களத்துக்கு ரயில் எஞ்ஜின்கள், அதிவேகத் தொகுதிகள் மற்றும் பயணிகளுக்கான ரயில் பெட்டிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

2020 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள ரயில்வே திணைக்களத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இவை அடுத்த ஆண்டில் திணைக்களத்துக்குக் கிடைக்கவுள்ளன.

பயணிகளுக்கு செயற்றிறன் மிக்க ரயில் சேவையொன்றை வழங்குவது தொடர்பாக இவை தருவிக்கப்படவுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாடு முழுவதிலுமுள்ள ரயில் போக்குவரத்து மார்க்கங்களை நவீனமயப்படுத்தி, மின்சார ரயில் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கும் அமைச்சு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-22)

## போர்ட் சிற்றி திட்டத் தாமதத்துக்காக இழப்பீடு கோருகிறது சீன நிறுவனம்

கொழும்பு, ஏப்.5
கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தை அரசு தாமதித்தமைக்கான இழப்பீட்டை வழங்க வேண்டும் என்றும், இல்லையெனில் மேலதிக நிலப்பரப்பை உருவாக்க அனுமதிக்க வேண்டும் என்றும் சீன நிறுவனம் கோரியுள்ளது.

துறைமுக நகரத் திட்டப் பணிகளை ஓர் ஆண்டாக இடைநிறுத்தி வைத்திருந்தமையால், தாமதத்துக்கான இழப்பீடாக 125 மில்லியன் டொலரைத் தரவேண்டும் என்று சீன நிறுவனம் கேட்டுள்ளது. இல்லாவிட்டால், கடலில் மேலதிக நிலப் பரப்பை உருவாக்க அனுமதிக்க வேண்டும் என்ற மாற்றுத் திட்டம் ஒன்றையும் சீன நிறுவனம் முன் வைத்துள்ளது.

இது தொடர்பாக சீன நிறுவனத்துடன் பேச்சு நடத்தப்படும் என்று பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சீனாவுக்கு நாளை மேற்கொள்ளவுள்ள பயணத்தின்போது, இழப்பீடு அல்லது மேலதிக நிலப் பரப்பை உருவாக்கும் விவகாரம் தொடர்பாக முக்கியமான பேச்சு நடத்தவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்தி வைத்திருந்ததால், இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும், சீன முதலீட்டாளரான சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனத்தின் துணை நிறுவனமே, 125 மில்லியன் டொலரை இழப்பீடாகக் கோரியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாகப் பேச்சு நடத்தி, பிரதமரின் சீனப் பயணத்துக்கு முன்பாக, இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இழப்பீடு உள்ளிட்ட விவகாரங்களில் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு மேலதிக கால அவகாசம் தேவைப்படுகிறது.

பேச்சில் இணக்கப்பாடு எட்டப்பட்ட பின்னர், அது பற்றிய வரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்ற பின்னரே, உடன்பாடு கையெழுத்திடப்படும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் ஆதிக்கம் மீண்டும் வடக்கில்

## விமல் வீரவன்சவின் கண்டுபிடிப்பு



கொழும்பு, ஏப். 5
வடக்கில் மீண்டும் புலிகளின் ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனும், வடமாகாண சபையினரும் மட்டுமே இன்று வடக்கின் பாதுகாப்பைத் தீர்மானிக்கின்றனர். வெகு விரைவில் மீண்டும் புலம்பெயர் புலிகளின் ஆதிக்கம் தலைதூக்கும்.- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்கள் பொறுமையாக இருந்தால் புலிகளின் ஆதிக்கம் மீண்டும் தலைதூக்கி நாட்டில் மீண்டும் பிரிவினை வாதம் உச்சக் கட்டத்துக்கு வந்துவிடும். ஆகவே மக்கள் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டும். விரைவில் மீண்டுமொரு பொதுத் தேர்தலுக்கு மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

வடக்கில் இன்று என்ன நடக்கின்றது என்பது சிங்கள மக்களுக்கு தெரியவில்லை.தமிழ்ப்பிரிவினை வாதம் இன்று தலைதூக்குகின்றது.தற்கொலைக்குண்டுகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. இன்றுவடக்கில் பாதுகாப்பு இல்லை. இராணுவத்தினரோ, புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகளோ இல்லை. வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்,முதலமைச்சர்விக்கினேஸ்வரன், வடமாகாண சபையும் மட்டுமே வடக்கின் பாதுகாப்பைத் தீர்மானிக்கும் தரப்புக்கள். இவ்வாறு நாட்டின் தேசிய பாதுகாப்பு இருக்கையில், நாட்டுக்கு அச்சுறுத்தல் இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார். நாட்டில் நடக்கும் பிரிவினைவாத முயற்சிகள் நிறுத்தப்படாது புலம்பெயர் புலிகளின் தேவை சரியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எமது புலனாய்வு பிரிவின் முக்கிய சிலர் சிறையில் அடைக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு வருகின்றனர். இராணுவம் மீது போர்க்குற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஐ.நா. விசாரணையாளர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர். இலங்கையில் நடக்கவிருக்கும் விசாரணைகள் தொடர்பில் ஆதாரங்கள் உருவாக்கப்படுகின்றன.

> வடக்கில் இன்று என்ன நடக்கின்றது என்பது சிங்கள மக்களுக்குத் தெரியவில்லை. தமிழ் பிரிவினை வாதம் இன்று தலை தூக்குகின்றது.

இந்த நிலைமை மாற வேண்டும். ஆனால், அதற்கு இன்னமும் நான்கு ஆண்டுகள் காத்திருக்க முடியாது. மக்கள் பொறுமையாக இருந்தால் புலிகளின் ஆதிக்கம் மீண்டும் தலைதூக்கி நாட்டில் மீண்டும் பிரிவினைவாதம் உச்சகட்டத்துக்கு வந்து விடும்.

ஆகவே மக்கள் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டும். விரைவில் மீண்டுமொரு பொதுத் தேர்தலுக்கு மக்கள் அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும். அப்போதுதான் நாட்டில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை உருவாக்கவும், தேசிய பாதுகாப்பை பலப்படுத்தவும் முடியும் - என்றார். (ற-ஜ-5)

# தமிழருக்கான தீர்வு குறித்து கூட்டமைப்புடன் அரசு பேசும்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.5
புதியஅரசமைப்பின்ஊடாகதமிழ் பேசும் மக்களுக்கு தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்தும். ஏனைய கட்சிகளுடனும் நாம் இந்த விடயம் தொடர்பில் பேச்சு நடத்தினாலும், தமிழ்க் கூட்டமைப்புடனான பேச்சுக்களே மிகவும் முக்கியமானதாகும்.- இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதியஅரசமைப்பின்ஊடாகதமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில் அரசியல் தீர்வுத்திட்டமொன்றை முன்னெடுக்க அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவோம். ஆனால் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரு தரப்புப் பேச்சுக்களை அரசு நடத்தும். ஏனைய கட்சிகளுடனும் நாம் இந்த விடயம் தொடர்பில் பேச்சு நடத்தினாலும் கூட்டமைப்புடனான பேச்சே மிகவும் முக்கியமான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் பிரதானமான கட்சியாகும். தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவது மிகவும் அவசியமாகும். விரைவில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் இரு தரப்புபேச்சுக்களைநடத்துவோம்- என்றார். (ற-ஜ-5)

# ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஜெனிவாப் பயணம் வெற்றியாம்

## உதய கம்மன்பில கூறுகின்றார்



கொழும்பு, ஏப்.5
ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினரின் ஜெனிவாப் பயணம் வெற்றியளித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசால் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினருக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து முறையிடும் வகையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் ஜெனிவாவுக்குச் சென்றிருந்தனர்.

அங்கு சென்று முறைப்பாடுகளை மேற்கொண்ட பின்னர்- நாட்டுக்குத் திரும்பியுள்ள ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் ஆட்சியில் உள்ள தேசிய அரசால்,நாங்கள் எதிர்நோக்கியுள்ள தொந்தரவுகள் மற்றும் இடையூறுகள் தொடர்பில் ஜெனிவா நகருக்குச் சென்று சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்திடம் தெரிவித்ததும், அதன் பொதுச்செயலாளர் அதிர்ச்சியடைந்தார்.

தற்போதைய அரசுக்கு எதிராக, மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச நாடாளுமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சர்வதேச அமைப்புக்களின் ஊடாக, இந்த அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும். சர்வதேச நாடாளுமன்றத்தின் மூலம் எங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது- என்றார். (ற-ஜ-5)

## 346 மதுக்கடைகளுக்கான அனுமதிப் பத்திரம் இரத்து

கொழும்பு, ஏப்.5
சுற்றுலாத்துறை விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மதுபான விற்பனைக்கான 346 அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன.

கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், விகாரைகள் மற்றும் பாடசாலைகளை அண்மித்ததாக உள்ள சுற்றுலா விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதியை இரத்துச் செய்வது தொடர்பான சோதனைச் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுக்கும் மற்றும் சுற்றுலா விடுதிகளுக்கும் அருகிலுள்ள தூர அளவுகளைநில அளவைத்திணைக்களத்தின் மூலமாககலால் திணைக்களம் ஏற்கனவே அளவீடுசெய்துள்ளது. அதன்போது 346 மதுவிற்பனை நிலையங்கள் குறித்த இடங்களிலிருந்து 500 மீற்றர் எல்லைக்குள் அமைந்திருப்பது தெரியவந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

விடுதிகளில் மதுபான விற்பனையை நிறுத்துவது சுற்றுலாத்துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால் அது தொடர்பாக மாற்றுச் செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-ஜ-22)

## நல்லிணக்கத்தை முதலில் கட்சிக்குள் ஏற்படுத்துங்கள்

### மைத்திரிக்கு சவால் விடுக்கிறார் மகிந்த

கொழும்பு, ஏப்.5
வடக்கு - கிழக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர், குறைந்தபட்சம் கட்சிக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குச் சவால் விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் மத வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னர் போர் வலயத்தில் நல்லிணக்கம் பற்றிப் பேசும் அரசு, தொடர்ந்து கட்சி உறுப்பினர்களை இடைநிறுத்தியும், வெளியேற்றியும் வருகிறது. தீவிரவாதிகளின் விருப்பத்துக்கு ஏற்ப நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபடக் கூடாது.

சாவகச்சேரியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்ட விவகாரத்தை அரசு சாதாரணமாக எடுத்துக் கொண்டிருக்கிறது.

உண்மையை அறிய முனையும் மக்களை அரசு மிரட்டுகிறது. இதுபற்றிக் கேள்வி எழுப்பிய ஜீ.எல்.பீரிஸ்மீது விசாரணை இதனையே காட்டுகிறது.- என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# சிவாஜிலிங்கத்தை விசாரிக்க அரசுக்கு முதுகெலும்பில்லை

## சாவகச்சேரி சம்பவம் குறித்து சாடுகின்றார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஏப்.5
சாவகச்சேரியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்டமை தெற்கு அடிப்படைவாதிகளின் செயல் என்றுதெரிவித்த, வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்திடம் விசாரணை நடத்துவதற்கான துணிவு முதுகெலும்பு இலங்கை அரசிடம் கிடையாது என்று கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க சாடியுள்ளார்.

மினுவாங்கொடையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாம்அனைவருடனும்இணைந்து செயற்படவே விரும்புகின்றோம். எனினும் அரசின் சகல செயற்பாடுகளுக்கும் எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் பெரும் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பிரிஸ் முக்கியமான கருத்தை வெளியிட்டிருந்தார். அவரிடம் இந்த அரசு விசாரணை மேற்கொண்டது.

சாவகச்சேரியில் தற்கொலை அங்கிமீட்கப்பட்டமை, தெற்கு அடிப்படைவாதிகளின் செயல் என்று வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்திருந்தார். சிவாஜிலிங்கம் போன்றவர்களிடம் விசாரணை நடத்தக்கூடிய முதுகெலும்பு அரசுக்கு கிடையாது. எமது எதிர்காலம் பாதுகாப்பற்றதாகவே காணப்படுகின்றது. எனவே எம்மால் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது.

நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளது. அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்ளும் ஓர் பலவீனமான அரசாகவே இந்த அரசைக் கருத வேண்டும் - என்றார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உயர வேண்டியது சட்ட ஆட்சியே; வெறும் நல்லிணக்கம் மட்டுமன்று...

மீள்கட்டுமானம் சுலபமானது. ஆனால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சிரமமானது. நல்லிணக்கத்தை உண்டாக்க தொலைநோக்குள்ள பார்வை அவசியம்.

மேற்போந்த கருத்தை வெளிப்படுத்தி உள்ளார், வடக்கு மாகாணத்தின் தற்போதைய ஆளுநர் றெஜினோல்ட் கூரே.

நேற்றுமுன்தினம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஹோட்டல் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, வடக்கின் ஆளுநர், மேலே சுட்டிக்காட்டப்பட்ட கருத்தை முன்வைத்தார்.

அந்தக் கருத்து நாட்டின் மக்கள் மத்தியில், குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தெளிவின்மையை, மயக்கத்தை உண்டாக்கி உள்ளது.

ஆழ்ந்து, கூர்ந்து நோக்கின், இந்தக் காலம்- காலவேளை- நல்லிணக்கத்தை நாடி நிலைமாறு காலம் (Transition period) எனக் கொள்ளத்தக்கது.

பொது நிலை நின்று நோக்கின், நல்லிணக்கத்தை நோக்கி, அடி எடுத்து வைப்பதற்கு உகந்த காலம்- உரிய காலம்-என்றே கருதப்பட வேண்டும்.

ஆனால், எங்களது மாகாணத்தில் இப்போது மேலெழும் செயற்பாடுகள், வடக்கு வாழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை அரசு--அதன் பொறுப்பு வாய்ந்த தரப்புகள்--உள்ளார்ந்து நன்னோக்குடன் செயற்படுத்தமாட்டா என்ற எதிர்மறையான (Negative) போக்கையே புலப்படுத்துகின்றன.

நல்லிணக்க காலம், இன்னமும் எங்கள் நாட்டில் மேலெழவில்லை என்பதே யதார்த்தம். வேண்டுமாயின் இப்போதைய காலத்தை நிலைமாறு காலம் (Transition period) என்று கொள்வதே பொருத்தம்.

விரித்துச் சொல்லப்புகின், நல்லிணக்கத்தை நாடி (நோக்கி) அடி எடுத்து வைப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான முன்னோட்ட காலம் என்று கொள்ளலாம்.

உள்ளதைச் சொன்னால், நல்லிணக்கத்தை உற்பவிப்பதற்கான உகந்த வேளை இது என்று, நெளிவு சுளிவு இன்றி நேரடியாகக் கருதப்பட வேண்டிய விதத்தில் செயற்பாடுகள் முகிழ வேண்டிய காலகட்டம் இது.

ஆனால் அரசின் இன்றைய போக்கு, எமது மக்கள் மனங்களில்- நெஞ்சங்களில்- ஆட்சியாளர்களின் பொடுபோக்கான செயலாற்றல்களையும், ஏய்க்காட்டும் போக்குகளையுமே பதிக்கின்றன.

ஒட்டுமொத்தத்தில், தமிழ் மக்களிடம் இருந்து முன்னைய அரசுகளால் "பலாத்காரமாகப்" பறித்து எடுக்கப்பட்ட--பிடுங்கப்பட்ட-- அவர்களின் வாழ்வியல் உரிமைகளையும், அரசியல் உரிமைகளையும் பிசிறின்றி வழங்கவல்ல சட்டவாட்சியை மேலுயர்த்தாமல், நல்லாட்சி என்பது வெறும் வேதாந்தமே; வெற்று வேட்டே!

அதற்குத் தமிழ் மக்கள் ஒரு துளியேனும், எந்தக் காலத்திலும் ஒப்புவர் என்று ஆட்சியாளர்கள் மனப்பால் குடிப்பதற்குக் கனவு தானும் காண்பது பூச்சிய-'சைபர்'-நிலையையே குறுக்கே நிறுத்தும்.

அதனைத் தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள், உள்ளூர உள்வாங்குவது எப்போது...??!!

# உலகமுன்றிலில் இது ஒரு வாய்ப்பு

வந்தியத்தேவர்

சோல்பரி அரசியல் யாப்புக்குப் பின்னர், இலங்கையில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள் அனைத்துமே தமிழ் மக்களுக்கு- சிறுபான்மை இனங்களுக்கு இந்த நாட்டில் சிங்கள மக்களுடனான சமஅந்தஸ்துக் கொண்டதாக உருவாக்கப்படவில்லை. தமிழ்ச் சிறுபான்மை இனங்களை இரண்டாந்தரப் பிரசைகளாகக் கொண்டு, சிங்கள மக்களே இந்த நாட்டின் முதற்குடிமக்களாக, ஆளும் வர்க்கமாக முன்னுரிமை அங்கீகாரம் அளிக்கக்கூடியதான அரசியல் யாப்புக்களே கடந்த காலங்களில் உருவாக்கப்பட்டன. தமிழ்ச் சிறுபான்மை மக்களையும் இந்த நாட்டின் சிங்களப் பிரசைகளைப் போன்று கருதாமல், அவர்களை ஒரு அடிமைப்பட்ட இனமாகவே சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாகக் கருதி வந்தனர். இலங்கை சுதந்திரம் பெறத் தமிழ்த் தலைவர்கள் ஆற்றிய பங்களிப்பைக்கூட அன்றைய சிங்களத் தலைமைகள் உதாசீனம் செய்திருந்தனர்.

### இலங்கையின் எதிர்காலம்

இதன் விளைவுகள் இலங்கையின் எதிர்காலத்தை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்று ஆரம்ப கால சிங்களத் தலைவர்கள் கிஞ்சித்தும் கவலைப்படாதவர்களாகவே இருந்துள்ளனர். ஒன்றுபட்ட சுதந்திர இலங்கை என்று சிங்களத் தலைமைகளுடன் இணைந்து ஆட்சியில் பங்கெடுத்த தமிழ்த் தலைமைகளும் கூட எதிர் காலம் குறித்து தீர்க்க தரிசனமற்றவர்களாகவே இருந்துள்ளனர்.

பின்னாளில் தமக்கு இசைவான முறையில் தொடர்ந்து புதிய புதிய அரசியல் யாப்புக்கள் வரையப்பட்டு தமிழ் மக்களின் அனைத்து உரிமைககளும் படிப்படியாகப் பறித்தெடுக்கப்பட்டுதமிழினம் ஒரு அடிமை இனம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியினூடாக புதிய வழிமுறைகள் மூலம் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற முயற்சிகளை முன்னெடுத்தபோதும் அவை வெற்றியளித்ததாக இல்லை. அவர் முன்வைத்த சமஷ்டி ஆட்சி முறையை பண்டாரநாயக்கா மனதளவில் ஒப்புக் கொண்டாலும்கூட, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் கண்டிக்கான பாத யாத்திரை போன்ற பல்வேறு எதிர்ப்புக்களால் அது நடைமுறைச் சாத்தியமற்றதாகிப்போனது. பண்டா–செல்வா, டட்லி–செல்வா ஒப்பந்தங்கள் காலத்துக்குக் காலம் செய்யப்பட்ட போதும், சிங்கள இனவாதிகளால் அவை கிழித்தெறியப்பட்டும், எரியூட்டப்பட்டும் செல்லுபடியற்ற தாக்கப்பட்டதேயாழிய, எந்த ஒரு ஒப்பந்தமும் கூட ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை. அரசியல் யாப்பில் தமிழர்களுக்குச் சாதகமாக இருந்த சில சரத்துக்களைக் கூட மாற்றிக் கொள்வதிலேயே சிங்கள அரசியல்வாதிகள் அக்கறை காண்பித்தனர். இறுதியாக ஜே.ஆர், தான் ஆயுள் காலம் வரை ஜனாதிபதியாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட மனிதராக ஒரு சர்வாதிகாரியாகத் திகழலாம் என்ற நோக்குடன் தயாரித்த அரசியல் யாப்பும், பின்னர் ஜனாதிபதி பதவி க்கு வந்த மகிந்தவின் 'மகிந்த சிந்தனை' யும் தமிழ் மக்களுக்கு முற்றுமுழுதாகப் பாதிப்பபான ஒன்றாகவே இருந்துள்ளதால், மகிந்தவின் ஆட்சிக்காலம் தமிழ் சிறுபான்மை இனங்களுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கு ஒரு இருண்ட காலமாக மாறியது. தமிழ் மக்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்க மறுத்த அரசியல் யாப்புக்களால் தனி நாட்டுக் கோரிக்கை, அதற்கான விடுதலைப் போராட்டம் என்று இலங்கை பல்வேறு போராட்டங்களைக் கண்டமை தான் வரலாறு.

> தமிழ் மக்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்க மறு த்த அரசி யல் யாப்புக்களால் தனி நாட்டுக் கோரிக்கை அதற்கான விடுதலைப் போராட்டம் என்று இலங்கை பல்வேறு போராட்டங் களைக் கண்டமை தான் வரலாறு.

### ஜனாதிபதியின் விருப்பம் நிறைவேறுமா?

இப்போது போர் முடிந்து ஒரு மென்மையான போக்குக்குள் நாடு சென்று கொண்டிருக்கிறது. இனவாதிகள் இன்னமும் இனவாதம் கக்கிக் கொண்டிருந்தாலும்கூட, தற்போதுள்ள அரசியல் யாப்பை மாற்றி அமைத்து அனைத்து மக்களும் உரிமையுடன் வாழக் கூடிய புதிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பியிருந்தாலும், அது உருவாகுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. கடந்த கால அரசியல் யாப்புக்கள் மக்களைப் பாதுகாக்கும் ஒன்றாக இருந்ததில்லை. இனங்களுக்கிடையில் ஒற்றுமை, ஜனநாயகம் நிலவக்கூடியதாக அமைந்துள்ள, உண்மையில் ஒரு அரசமைப்பு ஜனநாயகம், மக்கள் பாதுகாப்பு, ஒற்றுமை என்பவற்றுக்கு வித்திடுவதாக அமைய வேண்டும். இவ்வாறான அரசியல் யாப்பு ஒன்றின் மூலமே நாடு அமைதி வழியில் செல்ல முடியும். சிறுபான்மை மக்களும் கூட ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் அமரக்கூடிய அரசமைப்பு முறையே தேசத்துக்குப் பொருத்தமானதாக அமையும். இப்போது புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்புக் குறித்து மக்கள் கருத்தும் அறியப்படுகின்றது. எனினும் அரசமைப்பில் சில மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் தமிழர் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே அரசுத் தலைமைகளின் கூற்றாகவும் உள்ளது. தீர்வு ஒற்றையாட்சியின் கீழ் தான், சமஷ்டி அமைப்பு முறையில் அல்ல என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. வெளிவரும் தகவல்கள் முன்கண்டவாறு இருக்க, புதிய அரசமைப்பு உருவாவதைத் தென்பகுதி மக்கள் வரவேற்பதாக அரசமைப்புக் குழு கூறுகிறது.

அரசுத் தலைமைகளும் அரசமைப்புக் குழுவும் மக்களைத் தடுமாறச் செய்வது போல் உள்ளன. புதிய அரசியல் யாப்பா?திருத்தங்கள் மட்டுமா? என்பதை அரசுத் தலைமையும் அரசமைப்புக் குழுவும் திட்டவட்டமாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இரும்பு விலைக்குத் தள்ள வேண்டிய பழைய வாகனத்தைத் திருத்தித் திருத்தி ஓடிக் கொண்டிருக்க முனைவது வீணானது, பயனற்றது.

எனவே, தமிழர்களதும் ஏனைய சிறுபான்மை மக்களதும் உரிமைகள், அபிலாசைகள் நிறைவேறக் கூடியதாகவும், எல்லா மக்களும் சமத்துவம் மிக்கவர்களாக கௌரவத்துடன் வாழக்கூடியதுமான புதிய அரசியல் யாப்பு ஒன்றை வரைவதும், அதனை நடைமுறைப்படுத்த ஒற்றுமையுடன் செயற்படுவதுமே உலகில் புதியதொரு இலங்கையைக் கட்டியெழுப்பும் வாய்ப்பை வழங்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இருள் சூழ்ந்த நிலையில் தமிழர்களின் எதிர்காலம்

சேரலாதன்

போர் ஓய்ந்து விட்டது, நாட்டில் பூரண அமைதி நிலவுகின்றது, மக்கள் அச்சமின்றித் தமது அன்றாட அலுவல்களைக் கவனித்து வருகின்றனர் என்பவை தான் இலங்கை பற்றிய வெளிநாடுகளின் இன்றைய கணிப்பாக உள்ளது. புதிய ஆட்சி அமைக்கப்பட்டதன் பின்னர் நாடு சகல துறைகளிலும் புதுப்பொலிவுடன் காணப்படுவதாகவும் வெளிநாட்டு நோக்கர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

**மேலெழுந்த வாரியான கணிப்பீடுகள்**

இவையெல்லாம் மேலெழுந்த வாரியான கணிப்பீடுகள் என்பதுதான் பலரது அபிப்பிராயமாக உள்ளது. மகிந்த ஆட்சி ஒழிந்த பின்னர், நாட்டில் நல்லாட்சி ஒன்று மலர்ந்திருப்பதாகவே ஆரம்பத்தில் தெரிந்தது. முன்னைய ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள், மோசடிகள் மக்கள் விரோத நடவடிக்கைகள் என்பவை ஓரளவு தணிந்திருப்பதான தோற்றமொன்று தற்போது தெரிந்தாலும், சிறுபான்மையின மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது அவலங்கள் முற்றாக நீங்கியதாகத் தெரியவில்லை.

**சம்பூரில் நடப்பது என்ன?**

போரைக் காரணம் காட்டி சம்பூரில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தமிழ்மக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர். அந்த மக்கள் நாடோடிகளாக அலைந்து அகதி வாழ்வு வாழ்கின்றனர். தமிழர்களது பூர்வீக மண்ணில் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பு பறித்தெடுக்கப்பட்டு அங்கே இந்திய அரசின் உதவியுடன் அனல் மின் நிலையமொன்றை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அந்த மண்ணுக்கு உரித்தானவர்கள் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதை அப்பகுதி மக்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றபோதிலும், அரசு அதைக் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைத்தே தீருவோமென மின்சக்திக்குப் பொறுப்பான அமைச்சர் சவால் விடுகின்றார். வடபுலத்திலுள்ள யாழ்ப் பாண மாவட்டம் தமிழ்பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்டுள்ளது. இவர்களில்பெரும்பாலானவர்கள் இந்துக்களாகவும், கணிசமான தொகையினர் கிறிஸ்தவர்களாகவும் காணப்படுகின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய பௌத்தர்களே இங்கு வாழ்கின்றனர்.

புத்தபெருமான் நயினாதீவில் காலடி வைத்ததாகத் தெரிவிக்கப்படுவதால் அங்கு பௌத்த விகாரையொன்று அமைக்கப்பட்டுள்ளதோடு, பௌத்த மக்களின் பிரதான வழிபாட்டுத் தலமாகவும் இது விளங்குகின்றது.

**நயினாதீவில் பெரிய புத்தர் சிலை**

இறுதிப்போரில் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் வடக்கு-கிழக்கில் இடம் பெறுகின்ற சம்பவங்கள் தமிழர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி வருகின்றன. தமிழர் பிரதேசம் எங்கும் புத்தர் சிலைகள் அமைக்கப்படுவதும், விகாரைகள் நிறு வப்படுவதும் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. நயினாதீவில் பிரமாண்டமான புத்தர் சிலையை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. கடற்கரையோரமாக இந்துக்களின் புனித ஆலயமொன்று அமைக்கப்பட்ட நிலையில் 67 அடி உயரமான மிகப்பெரிய புத்தர் சிலையொன்று இந்துஆலயத்தின் பெருமையைச் சீர்குலைக்கும் வகையில் அமைக்கப்படவுள்ளமை எந்த வகையில் நியாயமானது என்பது எவருக்குமே புரியவில்லை. இதைப் போன்றுதான் பௌத்தர்களே இல்லாத கொக்கிளாயில் தமிழர்களின் காணிகளை அடாத்தாகக் கைப்பற்றி பௌத்த விகாரையொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள காவிநகர்ப்பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்படுவதாக அங்கிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

நல்லாட்சி அரசு இவற்றையெல்லாம் கண்டு கொள்வதாகவே தெரியவில்லை. ஐக்கியம், சமத்துவம் தொடர்பாக இங்கு வருகின்ற அரசுத் தலைவர்கள் இதமாகப் பேசிவிட்டுச் செல்கின்றனர். ஆனால் நடப்பது வேறு மாதிரியாகத்தான் தெரிகின்றது.

இனவாதிகளுக்கு முன்னால் நல்லாட்சி மண்டியிட்டு விட்டதாகவே எண்ணத் தோன்றுகின்றது. அவ்வாறாயின் சிறுபான்மை மக்களின் கதியென்ன? அவர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்படப் போகின்றார்களா? இவற்றுக்கான விடைகள் நல்லாட்சி அரசிடமிருந்துதான் வெளிவர வேண்டும்.

## யாழ்.மருத்துவமனைப் பணியாளருக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம்

யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகளை வெளியிட்டிருந்தார். இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். ஆனால், இவற்றைப் பலர் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

எழுந்து நடமாட முடியாத நோயாளர்களுக்கு மட்டுமே பராமரிப்பாளர் தேவை. ஆனால் நடமாடக்கூடியவர்களுடனும் பராமரிப்பாளர் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இயலாத நோயாளியொருவருடன் ஒன்றுக்கு மேற்பட்ட பராமரிப்பாளர்கள் நிற்பதும் தவறான விடயமாகும். பார்வையாளர் நேரத்தில் ஒரு நோயாளியைச் சுற்றி பல பார்வையாளர்கள் நிற்பது சகலருக்கும் இடைஞ்சலாக உள்ளது. எனவே இருவர் பார்வையிட்ட பின்னர் அவர்கள் ஒதுங்கி மற்றவர்களும் பார்வையிடச் சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

நோயாளியின் கட்டிலில் அமர எவருக்கும் அனுமதியில்லை. பராமரிப்பாளர், பார்வையாளர்கள் நோயாளியின் கட்டிலில் அமர்ந்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சில சந்தர்ப்பங்களில் நோயாளியின் கட்டிலில் நோயாளியுடன் படுத்திருப்பதைக்கூடக் கண்டேன்.

கைத்தொலைபேசிகளுக்கு சார்ச் செய்வதற்குத் தடை செய்யப்பட்டிருந்தும், அதனை நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை.

மருத்துவர்கள் பார்வையிடுகின்ற நேரங்களில், சகலரும் நோயாளியைவிட்டு விலகி வெளியே நிற்க வேண்டும். குழந்தைகளிடமும் வயோதிபர்களிடமும் தொற்று நோய் எதிர்ப்புச் சக்திகள் குறைவாக இருப்பதால், அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வரவேண்டாமென்ற பணிப்பாளரின் வேண்டுதலை எவரும் மதிப்பதாகத் தெரியவில்லை.

மாலை 6 மணிக்குப் பின்னர் வைத்தியசாலை விடுதிகளிலோ, வெளியில் போடப்பட்டுள்ள இருக்கைகளிலோ அமர்வதைத் தவிர்க்கும்படியும், வைத்தியசாலைச் சுற்றாடலில் நடமாடுவதைத் தவிர்க்கும்படியும் அறிவுறுத்தப்பட்டும், சிலர் இதனைச் செயற்படுத்துவதாகத் தெரியவில்லை.

பணிப்பாளரின் அறிவுரைகள் ஒரு சிலருக்கு செவிடன் காதில் ஊதின சங்கு போலாகின்றது. இவற்றைப் பொது மக்கள் தாமாகவே உணர்ந்து நடந்தால், எந்தவிதப் பிரச்சினையும் ஏற்பட வாய்ப்பில்லை. இவர்கள் எல்லோரையும் ஊழியர்கள் கண்காணித்து சகல பிரச்சினைகளையும் சீராக்கலாமெனச் சிலர் கருதலாம். ஊழியர்களுக்கு அவர்களின் கடமைகளைச் செய்வதற்கு நேரம் போதாமலிருக்கின்றபோது அவர்களையும் குறைகூற முடியாது. பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இந்த விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கி இடையிடையே விடுதிகளுக்குள் சென்று கண்காணித்தால் இந்தப் பிரச்சினையை ஓரளவு நிவர்த்தி செய்யலாம். பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியின் இலட்சியங்கள் நிறைவேற எனதும், எல்லோரினதும் முன்மொழிந்த ஆசிகள்.

**இ.இராஜேந்திரா,**
**சமாதான நீதிவான்.**

## கவனம் செலுத்த வேண்டும்?

சாவகச்சேரி–பருத்தித்துறை வீதியில் உள்ள வெறும் காணிகளில் நடமாடும் மதுப் பிரியர்களின் அட்டகாசத்தால், வீதியில் பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள திரையரங்கம், ஆஞ்சநேயர் கோயில் ஆகியவற்றுக்கு அருகிலுள்ள வெறும் காணிகளிலே இப்படியான சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதில் வாலிபர்களின் கிரிக்கெட் விளையாட்டும் இடம் பெறும்.

மதுப் பாவனையாளர்களினால் இந்த வீதியில் செல்ல முடியாமல் இருப்பதால், சம்பந்தப்பட்டவர்களைக் கவனம் செலுத்துமாறு கேட்டுகொள்கின்றோம்.

**நலன்விரும்பிகள்,**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கிக்கு அகதிகள் நாடு
# மனித உரிமை அமைப்புகள்

அங்காரா, ஏப்.5

ஐரோப்பாவில் குடியேறிய அகதிகளை துருக்கிக்கு மீள அனுப்புவது குறித்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதன் பிரதிபலிப்பாகக் கிரீஸில் உள்ள சிரிய அகதிகள் துருக்கிக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டனர் என மனித உரிமை அவதானிப்புக் குழு தெரிவித்துள்ளது.

நேற்று கிரீஸ் தீவான லெஸ்போசில் இருந்து 400 பேரைத் துருக்கிக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டிருந்தது. 500 பேரின் வருகைக்காகத் துருக்கி ஆயத்தமாகின்றது என துருக்கியின் உட்துறை அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது. மேலும் 500 அகதிகளை ஏற்கத் தயாராகவுள்ளோம் என கிரீஸ் அதிகாரிகளுக்கு அறிவித்தோம். அவர்கள் எமக்கு 400 பேரின் பெயர்களைத் தந்தனர் என அவர் தெரிவித்தார்.

ஏடன் கடலினூடாகக் கிரிஸில் உள்ள சிரிய அகதிகளைத் துருக்கிக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளனர். குறித்த தொகையில் அகதிகளை ஏற்கவும், அவர்களுக்கான தங்கு மிட வசதிகளுக்கான ஏற்பாடுகளைத் துருக்கி மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியாகியது. ஐரோப்பாவில் அகதிகளின் நெருக்கடியைத் தவிர்க்க கடந்த மார்ச் மாதம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடம் மாத்திரம் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட அகதிகள் ஐரோப்பாவைச் சென்றடைந்துள்ளனர். ஆபத்தான கடல் பயணம் மேற்கொண்டு ஐரோப்பாவுக்கு வரும் அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்த இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு எதிராக அகதிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். தமது எதிர்ப்புகளை பதாகைகளில் எழுதிக் கவனவீர்ப்புகளை ஏற்படுத்தியபோதும் நாடு கடத்தும் முயற்சியை ஐரோப்பா கைவிடவில்லை.




ஆனால் இந்த நடவடிக்கை குறித்து மனித உரிமை அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன. இந்த ஒப்பந்தம் பெரும் மனித உரிமை நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்பதுடன், இந்தச் செயற்பாடு நியாயமானதா, சட்ட ரீதியானதா எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த நடவடிக்கை குறித்து ஐ.நாவின் குடியகல்வு அதிகாரி தெரிவித்ததாவது:-

தஞ்சம் கோரிவந்தவர்களது சம்மதமின்றி அவர்களை நாடு கடத்துவது சட்டவிரோதமானது. இதனை இவர்கள் எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்கள் எனத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஆபிரிக்க நாடுக



# ஏமனுக்குப் புதிய பிரதமர்

சனா, ஏப்.5

ஏமன் ஜனாதிபதி அப்ட்-ரபு-மன்சூர்-ஹடி புதிய பிரதமரையும், துணை ஜனாதிபதியையும் அறிவித்துள்ளார். முன்னர் பிரதமராகப் பதவி வகித்திருந்த கலிட் பஹாவைப் பதவில் இருந்த அதிரடியாக நீக்கியுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றள்ளது.

தற்போதைய பிரதமராக அகமத் ஒபெய்டி பின் டக் பதவி ஏற்றுள்ளார். இவர் ஜனாதிபதியின் ஆதரவாளர் கட்சியில் அதிகாரியாக இருந்துள்ளார். இந்த அதிரடி மாற்றம் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஏமன் – ஈரான் சமாதானப் பேச்சில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏமனில் ஜனாதிபதி ஹடியின் ஆதரவாளர்களுக்கும், ஈரானியக் கூட்டுள்ள ஹவுதிக் கிளர்ச்சியாளருக்கும் இடையில் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகிறது. அத்துடன் இந்த விவகாரத்தில் சவூதி தலைமையிலான கூட்டணியும் செல்வாக்குச் செலுத்தி வருவதனால், அது மத்திய கிழக்குப் பகுதியில் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-ரி4)

# அமெரிக்காவில் ரயில் விபத்தில் 2 பேர் சாவு

பென்சில்வேனியா, ஏப்.5

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் பிலெடெல்பியா பகுதியில் ரயில் தடம் புரண்டதில் 2 பேர் உயிரிழந்ததுடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

35 பேர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கிட்டத்தட்ட 350 பயணிகளை ஏற்றி வந்த ரயில் பயணித்த பாதையில் கட்டுமானக் கருவி ஒன்று சிக்கியதால் ரயில் தடம் புரண்டது. ரயிலின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த ரயில் தடம் புரண்டுள்ளது. உடனடியாக அவசர உதவிக் குழு அழைக்கப்பட்டு பயணிகள் மீட்கப்பட்டனர். விபத்துக் கான காரணம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (து-ரி4)



அமெரிக்காவின் தெற்கு புளோரிடா கடலோரப் பகுதி சிறிய நாவல் நிற ஜெலி மீன்களால் நிறைந்துள்ளது. கடந்த வாரம் ஆயிரக்கணக்கான ஜெலி மீன்கள் கரையை வந்தடைந்தன. உள்ளூர்ப் பகுதி மக்களின் தகவலின்படி மூன்று வருடத்துக்கு ஒரு முறை இவை இவ்வாறான படை எடுப்பை மேற்கொள்கின்றன என அறிய வந்துள்ளது. இவற்றை அப்புறப்படுத்தும் வரை கடற்கரைப் பகுதிக்குப் பொது மக்களைச் செல்ல வேண்டாம் என நகர அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவனை தீவிரவாதி என அழைத்தஆசிரி[illegible] பணியிலிருந்து நீக்க[illegible]

றெக்சாஸ், ஏப்.5

அமெரிக்காவின் றெக்சாஸ் மாகாண
உள்ள பாடசாலை ஒன்றில் முஸ்லிம் மாண
ஒருவனை ஆசிரியை தீவிரவாதி என அ
தால் குறித்த ஆசிரியை பணியில் இ
விலக்கப்பட்டுள்ளார்.
12 வயதான வலீட் அபுாபான் எனும் மாண
வகுப்பறையில் ஏனைய மாணவர்கள
திரைப்படம் பார்த்துள்ளான். இதன்போது
தில் காட்டப்பட்ட நகைச்சுவைக் காட்சியை
த்து அவன் சிரித்தபோது ஆசிரிய்யை, உன்
போன்று நான் இருந்தால் சிரிக்க மாட்
என்றார். இதற்கு ஏன் எனக் கேட்ட மா
னுக்கு, நீ ஒரு தீவிரவாதி என ஆசிரியர்
ளித்துள்ளார். இது போதாதென்று சக ம
வர்களும் அவனைக் கேலி செய்ய ஆர
துள்ளனர். இதனால் கவலை அடைந்த ம
வன் சம்பவம் குறித்துப் பெற்றோரிடத்தில்
விக்க அவர்கள் பாடசாலை நிர்வாகத்திடம் மு
யிட்டனர். இதனையடுத்து பாடசாலை நிர்வ
ஆசிரியையைப் பணியில் இருந்து நீக்கியுள்
மத ரீதியான புரிந்துணர்வுப் பயிற்சியை ம
வர்களுக்கும் ஆசிரியர்களுக்கு
வேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவ
பெற்றோர் தெரிவித்துள்ளனர். (த-

## ...் கடத்தல்
## ...ள் விசனம்

...ளில் இருந்து 250 அகதிகள் கிரீசுக்கு அகதிகளாகச் சென்றுள்ளதாக கிரீஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவற்றைத் தடுக்க இந்த முயற்சி இடம்பெற்றுள்ளது.

5 ஆயிரம் பேர் வசிக்கக் கூடிய பிரதேசம் அகதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் துருக்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவற்றுக்கானசெலவைத்துருக்கியஅரசு பொறுப்பெடுத்துள்ளது. இதற் காக எந்தப் பணமும் அறவிடப்படவில்லை. அகதிகளுக்காக உதவும் கொள்கையில் திறந்த மனதுடன் இருப்பதாகத் துருக்கி தெரிவித்துள்ளது. (த-ரி4)

# கர்ப்பிணிகள் புகை பிடித்தால் சிசுவின் மரபணுவில் மாற்றம்

## ஆய்வறிக்கையில் வெளியானது தகவல்

வொஷிங்டன், ஏப்.5

பெண்கள் புகை பிடிப்பது அவர்களின் கருவில் உள்ள சிசுவின் டி.என்.ஏயைப் பாதிக்கும் எனக் கடந்த வாரம் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6 ஆயிரம் பெண்களும் சிறுவர்களும் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர். முன்னதாக மருத்துவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் புகை பிடிப்பதைத் தவிர்க்கவேண்டும் என அறிவுறுத்தினர்.

குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பு, நுரையீரல் பாதிப்பு, நரம்பு மண்டலப் பாதிப்பு என்பவற்றைத் தவிர்க்க மருத்துவர்களால் இந்த அறிவுரை வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது, இரசாயனச் சிகரெட்டைப் புகை பிடிக்கும் கர்ப்பிணிப் பெண்களின் கருப்பையினுள் வளரும் குழந்தைகளின் மரபணுக்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை மருத்துவர்கள் அவதானித்துள்ளனர்.

நஞ்சுக் கொடியுடன் சிகரெட் இரசாயனம் கலப்பதாகவும், இதனால் பாரம்பரிய மரபணுக்கள் சிதைவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். அமெரிக்காவில் 12 சதவீதக் கர்ப்பிணிப் பெண்கள் புகை பிடிக்கின்றனர். இவர்களை ஆய்வு செய்தபோது இந்த மாற்றம் கண்டுபிடிக்கப்பட்டது.


இந்த ஆய்வு புகை பிடிக்கும் தாய்மார்களின் 6 ஆயிரத்து 685 குழந்தைகளிடம் நடத்தப்பட்டது. இவர்களின் தாய்மாரில் 13 சதவீனமானோர் கர்ப்ப காலத்தில் புகை பிடித்தவர்களும், 25 சதவீதமான தாய்மார் கர்ப்ப காலம் தவிர்ந்த ஏனைய நாள்களில் புகை பிடித்தவர்களும் ஆவர். 6 ஆயிரத்து 73 குழந்தைகளின் மரபணு, புகைப் பிடிக்காத தாய்மாரின் குழந்தைகளின் மரபணுவில் இருந்து மாறுபட்டிருந்தது.

இந்த ஆய்வில் இருந்து சிகரெட்டின் பாவனை எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என அறியக் கூடியதாக உள்ளது என மருத்துவர்கள் தெரித்தனர். மேலும் கர்ப்பிணிப் பெண்கள் சிகரெட் பாவனையைக் கட்டாயம் தவிர்க்கவேண்டும். அத்துடன் புகைத்தல் தொடர்பான நோய்களுக்கான ஆய்வில் இந்தக் கண்டுபிடிப்பு செல்வாக்குச் செலுத்தும் எனத் தெரிவித்தனர். (த-ரி4)

## ...ரியை
## ...நீக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மச்சமும் அதன் பயன்களும்

(மச்சமும் அதன் பயன்களும் என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான கருத்தின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது)

**நாக்கில் மச்சம்:**
அறிஞர்கள், மேதைகள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், மகான்கள் போன்றோருக்குத்தான் நாக்கில் மச்சம் இருக்கும். இவர்களுக்குத் தன்னம்பிக்கை அதிகம். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இனியவர்களாக இருப்பார்கள். குழந்தை உள்ளம் படைத்தவர்கள்.

**கழுத்தில் மச்சம்:**
கழுத்தில் மச்சம் உள்ள பெண்கள் அகன்ற முகமும், திரண்ட உருவ அமைப்பும், திடகாத்திரமும், நல்ல ஆரோக் கியமும் பெற்றுத் திகழ்வார்கள். எவருக்கும் அஞ்சாதவர்கள். எப்பொழுதும் மகிழ்ச்சி யாகவே இருப்பார்கள். இவர்களுக்குப் பொறாமைக் குணம் கிடையாது.

**முதுகில் மச்சம்:**
முதுகின் வலப்புறம் மச்சம் இருந்தால் பெரிய லட்சியவாதியாக இருப்பார்கள். எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இயங்குவர். வலப்புறம் மச்சம் உடைய பெண்கள், வேலை செய்து சம்பாதிப்ப வர்களாக இருப்பார்கள். முதுகின் இடப்புறம் மச்சம் இருந்தால் இளமைப் பருவத்தில் மந்த நிலை ஏற்படும். கல்வி கற்பதில் இடையூறு, முயற்சிகளில் தோல்வி ஏற்படும்.

**மார்பில் மச்சம்:**
பொதுவாக மார்பில் மச்சம் உடையவர்கள் இளமையில் பெரும் துன்பங்களை அனுபவித்து, பிற்கால வாழ்வில் நல்ல சுகத்தை அடைவர். மனத்தில் என்ன நினைக்கிறார்களோ அதை வெளிப் படையாக வாய் திறந்து சொல்லுவார்கள். வாழ்க்கையில் என்ன கஷ்டங்கள் ஏற்பட்டாலும், அதைப் பிறர் அறியா வண்ணம் சகித்துக்கொள்வார்கள். சிற்பம், மரவேலை போன்ற ஏதாவது ஒரு கலையில் சிறந்து விளங்குவார்கள்.

**இடுப்பில் மச்சம்:**
வலப்பக்க இடுப்பில் மச்சம் இருப்பின் அவர்கள் நேர்மையாளர்கள். அளவுக்கு அதிகமாகப் பேசமாட்டார்கள். தங்களுடன் நெருங்கிப் பழகுபவர்களிடத்தில் அளவு கடந்து அன்பு செலுத்துவார்கள். இதேபோல், மற்றவர்களால் அன்பு செலுத்தப்படும் போது மனமுருகி அடிமையாகிவிடு வார்கள்.
இடப்பக்கம் மச்சம் இருப்பின், திட மான உள்ளம், கடுமையாக உழைக்கும் இயல்பைப் பெற்றிருப்பர். இவர்கள் பிறந்த இடத்தைவிட்டு வெளி இடத்தில் வாழ்வை அமைத்துக்கொண்டால், வாழ்வில் நல்ல முன்னேற்றம் காணலாம். கள்ளம் கபடமற்றவர்கள். ஆனால், எதையும் நிதானித்துச் செய்யும் பொறுமை இல்லாததால், காரியம் கெடுவதற்கு வாய்ப்பு உண்டு.

**தொடைகளில் மச்சம்:**
பொதுவாக, தொடைகளில் மச்சம் ஆண்களுக்கு நல்ல பயனைத் தரும். பெண்களுக்கு சுமாரான பயனையே தரும். வலது தொடையில் மச்சம் உடைய ஆண்கள் மன உறுதி படைத்தவர்கள். இன்பம், துன்பம் இரண்டையும் சமமாகக் கருதுவர். இவர்கள் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். இவர்களை எவருமே ஏமாற்ற முடியாது. இவர்களை எவராலும் புரிந்துகொள்ள இயலாது.

**உள்ளங்கையில் மச்சம்:**
ஆண்களுக்கு வலது கையில் மச்சம் இருப்பது மிகவும் உயர்ந்த அம்சமாகும். வலது உள்ளங் கையில் மச்சம் இருப்பவர்கள் சகல சாஸ்திரங்களிலும் வல்லவர்களாக இருப்பர் என்பது விதி. குறிப்பாக கணித சாஸ்திரம், நீதி இயல், பொறியியல் போன்றவற்றில் ஆழ்ந்த அறிவுள்ளவர்கள். சிறுகச் சிறுக முன்னேறி உன்னதமான நிலையை அடைவார்கள்.

**கை விரல்களில் மச்சம்:**
கைவிரல்களில் அமையும் மச்சங்கள் ஏறத்தாழ இருந்தால், சரஸ்வதியின் அருள் பெற்றவர்கள் என்பது சாஸ்திர விதி. கல்வித் துறையில் இவர்களுக்கு மிகவும் உயர்ந்த தகுதி அமையும். எதிலும் முன்னெச்சரிக்கையாகச் செயற்படுவது இவர்களின் குணம். தனியார் பதவியில் உயர்நிலையில் இருப்பார்கள். அரசியல் துறையில் பேச்சாளராக இருத்தல், வழக்கறிஞராகப் பேரும் புகழும் அடைதல் இவர்களுக்கு அமையும். இடது கை சுண்டு விரலில் மச்சம் இருந்தால், விகாரமான தோற்றத்தைப் பெற்று இருப்பார்கள்; பிடிவாத குணம் இருக்கும். (முற்றும்)

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா,
ஆத்தியடி, புலோலி

# திருமணமும் தாலியும்

எமது பழக்க வழக்கங்களில் திருமணமும் முக்கியத்துவம் பெறும் ஒன்றாகும். இன்று திருமண மண்டபங்களும் பெருகி வருகின்றன. இல்லங்கள் தோறும் நடைபெற்ற திருமணங்கள், மண்டபங்களில் அரங்கேறி வருகின்றன. இது காலத்தின் கோலம். சங்ககாலத்து இலக்கண இலக்கிய நூல்களில் பெண்களின் குலம் பேசிக், குணம் பேசிக்கொள்ளும் திருமண முறை உண்டென்று கூறுவதற்கு ஆதாரமுண்டு. களவொழுக்கம் அகப்பொருள் இலக்கணம். அதாவது களவுத் திருமணத்தை வற்புறுத்தும் நூல். இதற்கு இலக்கணம் கூறவந்த தொல்காப்பியர் போன்றோர், வடவருடைய காந்தருவ திருமணம் என்று உவமை கூறியிருப்பதே சான்று. களவில் கூடிய தலைவனுக்குப் பெற்றோர் மறுத்த வேளையில், தோழி அறத்தோடு நின்று களவில் கூடிய அவனுக்கே கொடுக்குமாறு கூறுவாள்.
பிறன் வரைவாயினும் அவன் வரைவு மறுப்பினும் தோழிக்கூற்று நிகழும் ஆதாரம் தொல்காப்பி யக் களவியலில் கூறப்பட்டுள்ளது. நொதுமலர் வரையும் பருவமாயினும்
அறத்தோடு நிற்றல் தோழிக்குமுரித்தே என்பதற்கு ஆதாரம் இறையனார்க் களவியல். பெற்றோர்களால் நிச்சயிக் கப்படுவது கற்புமணம். இது பலராலும் அங்கீகரிக்கப்பெற்று இன்று வரையிலும் நடைமுறையில் வருவது கண்கூடு.



கணவன் மனைவி என்ற பிணைப்பை வாழ்வில் ஒவ்வொருவருக்கும் புனிதமான முறையில், சம்பிரதாய முறைப்படி சுமுகமாகச் செய்து வைக்கும் சுப காரியமே திருமணம். இல்வாழ்க்கை என்ற இன்பவாழ்வுக்கு மணப் பெண்ணின் வருகையை அதிஷ்டமாக எண்ணி மகிழ்வான் மணமகன். இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை என்பது முதுமொழி. இருவருக்கும் மனப் பொருத்தம் மிகவும் அவசியம். பெற்றோர் திருமணப் பொருத்தம் பார்ப்பர். கிரக பாவங்களையும் கணிப்பீடு செய்வர். திருமணங்களில் தாலிகட்டுவதே சிறப்பு அம்சம். யான் மணந்தவளை எந்த விதத்திலும் வஞ்சிக்கமாட்டேன் என்ற மணமகனின் வாய்மைக்கு அடையாளச் சின்னமே தாலி.
தாலி என்ற சொல் மாங்கல்யம் எனவும் வழங்கப்பெறும். கந்த

> கணவன் மனைவி என்ற பிணைப்பை வாழ்வில் ஒவ்வொருவருக்கும் புனிதமான முறையில், சம்பிரதாய முறைப்படி சுமுகமாகச் செய்து வைக்கும் சுபகாரியமே திருமணம்

புராணத்தில் பார்வதி திருமணத்தில் ஆண்டிக்கோல மிருந்த சிவனே கல்யாண சுந்தரர் ஆனார். திருமணத்துக்கு அறிகுறியாக தாலியை அவரவர்களுடைய நிலைகளுக்கேற்றவாறு பொன் தாலியாகவோ, மஞ்சள் நூலிலோ கோர்த்துக் கட்டுவது வழக்கம். சங்க காலத்துக்கு முற்பட்ட காலத்துத் தமிழரிடையே இருந்த நாகரிக வழக்கில் தாலி இருந்து வந்திருக்கிறது.

**தமிழர் திருமண நூல்**
இது வித்துவான் மா.இராசமாணிக்கம் பிள்ளையால் 1939ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது. இதில் அகம் 86,126 ஆம் செய்யுள் கள் எடுத்துக்காட்டோடு 16 வகைச் சடங்குகள் குறித்தும் விவரிக்கப் பட்டுள்ளது. அதில் 10 ஆவது சடங்காக அறிஞர், தாலியை வாழ்த்தித்தர மணமகன் அதனை மணமகள் கழுத்தில் அணிதல் என்ற கட்டளை உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலை அமைத்துக் கொடுப்போம்



ஜெ.காயா

குழந்தைப்பருவமென்பது மிகவும் வெளிப்படையானது. எதுவும் அறியாமலிருந்து, அந்த அறியாதவைகளை அறிவதற்காக விருத்தி கொள்ள முற்படும் பருவங்களாகவே குழந்தைகளின் பருவ வளர்ச்சிப் பாதை அமைந்திருக்கும். பிறந்தவுடன் சிசுவின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தை அம்மா என்ற தொனியுடனேயே ஆரம்பிக்கும். அது அம்மா என்று அறுத்துறுத்துச் சொல்லும் குரலாக அல்லாமல், அந்தச் சொல்லின் ஆரம்ப உச்சரிப்பாகவே அமைந்திருக்கும். அதுவே பின்னர் படிப்படியாக விருத்தியடைந்து அம்மா என்றாகிவிடும். குழந்தையொன்றின் உடற் தோற்றம் மட்டுமன்றி, அதன் உணர்ச்சிகள், எண்ணங்கள், சிந்தனைகள், சூழலுடன் ஒன்றிக்க முற்படும் தன்மைகள் அனைத்துமே மென்மையானதாகவே அமைந்திருக்கும்.

அழகான குழந்தை ஒன்று தமக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணமே அனைத்துப் பெற்றோர்களுக்கும் அடிப்படையானதாகும். அதில் எந்தவொரு அங்கக் குறைபாடுமில்லாமல் கிடைக்க வேண்டும் என்பதும் அடங்கும். அதேவேளை, குழந்தைகளில் அழகற்றவர்கள் என எவருமில்லை. ஏதோ ஒருவகையில் அவர்கள் அழகானவர்களாகவே தோற்றமளிப்பார்கள். இதனாலேயே குழந்தைகளின் மீது ஆசையும், அன்பும், அரவணைப்பும் கொள்ளாதவர்களைக் காண்பது அரிது.

அழகான பிள்ளை, என்ற அடிப்படை எண்ணத்திலிருந்து விலகி, அவர்களின் அடுத்தகட்ட எதிர்பார்ப்பாகத் தோன்ற ஆரம்பிக்கும் எண்ணம், குழந்தையின் அறிவு விருத்தியைத் தூண்டி விடுவதாகும். ஒரு குழந்தை புதியதொன்றை அறிய முற்படும்வேளை, அதற்கு உதவியாகப் பெற்றோர்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. பிள்ளைகளிடத்தில் அறிவு விருத்தியைத் தூண்டி விடுவதற்கு பெற்றோர்களின் பங்களிப்பு முக்கியமானது மட்டுமன்றி, அவர்கள் தங்கள் பிள்ளையை அடுத்த கட்ட வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வைக்க வேண்டியதற்கும் இது வழி வகுக்கும்.

புதிதாக ஒன்றை உணர முற்படும் பிள்ளையானது, தன்னைச் சுற்றியுள்ளவைகளைப் பார்க்கும்போது அது வெளிப்படுத்தும் மகிழ்ச்சிகரமான உணர்ச்சி வெளிப்பாட்டை மெருகூட்டிவிட வேண்டியதன் அவசியம் பெற்றோருக்கு உண்டு.

குறிப்பாக விதம் விதமான வர்ணங்கள் குழந்தைகளின் கண்களைக் கவர்ந்து ஈர்க்கும் தன்மைகொண்டவையாதலால் கைகளையும் கால்களையும் அசைத்து தனது விருப்பத்தை, ஒருவித குதூகல உணர்வை வெளிப்படுத்த குழந்தை முற்படும். இது பிள்ளையின் பார்வைப்புலன் சரியாகத் தொழிற்படுவதை உறுதி செய்வது மட்டுமன்றி, அது நிறங்களில் தன்னை லயித்து அதனை அனுபவித் துணரும் தன்மையையும் காட்டுகிறது.

பல நிறங்களிலான பலூன்களைப் பிள்ளையைச் சுற்றியுள்ள சூழல்களில் தொங்கவிடுதல், பிரகாசமான, வர்ணங்களுடைய படங்களைத் தொங்கவிடுதல் மூலம் பெற்றோர் குழந்தை நிறங்களை உணர முற்படுவதற்கு உதவி புரியும் பெற்றோராகலாம். அந்த நிறங்களைத் தொட்டுக் காட்டிபிள்ளையை மகிழ்விக்கும்போது, அதனிடத்தே தோன்றும் ஒருவித பரவச உணர்ச்சி நிலையையும் அறிய முடியும். அதன் இத்தகைய தன்மை அனைத்தும் ஆரம்பத்தில் பார்வைப்புலன் ஊடாக மூளையை அடையும். இவை நிறங்கள், சூழல் அசைவுகள் பற்றியதாகவே இருக்கும். இவ்வாறான தன்மையை உணர்ந்து பிள்ளையுடன் ஒன்றித்துப் பயணிக்க வேண்டிய கட்டாயமுள்ளவர்களாகப் பெற்றோர்கள் இருக்க வேண்டும்.

செவி வழி உணரும் ஓசை(சத்தம்) யை அவதானிக்கும் குழந்தை, அது உருவாகும் திசை நோக்கி அவதானிக்க முற்படுவதோடு, அதை உணர்ந்து கொண்டு அதன் மூலம் தோன்றும் மகிழ்வு, எதிர்பார்ப்பு, ஆச்சரியம், வியப்பு, சந்தேகம் போன்ற எண்ணங்களையும் பிள்ளையிடம் தோற்றுவிக்கும். இதில் பெற்றோர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. மென்மையான ஓசை, இசை என்பவை பிள்ளை வளரும் சூழலில் அமைந்திருக்க வேண்டும். மிகை ஒலி, திடீரென ஏற்படும்.

பெரும் சத்தம், அவர்கள் முன் உரத்துப் பேசிக்கொள்ளுதல் போன்றவை பிள்ளையிடத்தே மனம் திடுக்கிடும் தன்மையையும், முகத்தில் அச்ச உணர்வு நிலையையும் ஏற்படுத்தக் கூடும். குழந்தை பிறந்து குறிப்பாக ஒரு மாதகாலப் பகுதியின் பின்னர் ஆரம்பிக்கும் இந்த நிலை, அதன் 18 மாத காலம் வரை அடிப்படை விருத்தியைத் தோற்றுவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும். எனவே இந்தப் பருவ நிலைகளில் அவர்களுக்கு ஏற்றதான சூழலைப் பெற்றோர்கள் அமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயமுண்டு.

பிள்ளையிடத்தே ஒன்றைப் பார்க்கும் விதம், கேட்கும் தன்மை என்பனவற்றை உணர முற்பட்ட பின்னர், அதன் அடுத்த கட்ட நகர்வு அவை பற்றிய தேடலாகவே அமைந்திருக்கும். அது என்ன? ஏன் இவ்வாறு உள்ளது? எங்கேயுள்ளது? என்பதை அது பார்க்கும் நிறங்களிலும், கேட்கும் ஓசைகளிலும் அறிய முற்படும் (உணர முற்படும்). இதன்போது குழந்தை தனது கண்களை ஈர்க்கும் வர்ணங்களை நோக்கிக் கையசைத்தல், எட்டிப்பிடிக்க முற்படுதல், பார்வையை வியப்புடன் அதன் மீது செலுத்துதல், அவற்றைப் பிடித்து ஆராய முற்படுதல் போன்றனவாக தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும். இந்தச்செயற்பாட்டைத் தூண்டுவதாகவும் அல்லது அது சிந்திக்க முற்படும் வேளையில் அதற்கு உதவி புரிவதாகவும், அந்தச் சிந்தனையைத் தூண்டிஅந்தக்குழந்தையோடு ஒன்றித்து உணர்ந்து செயற்படும் ஈடுபாடுடையவர்களாகவும் பெற்றோர், பராமரிப்போர்கள் இருக்க வேண்டும்.

இந்த நிலை குழந்தைகளின் முக்கிய காலகட்டமாதலால், இதிலிருந்துதான் அவர்களின் ஏனைய செயற்பாடுகள் விருத்தியடைய முற்படுகின்றன. திடீரென ஒரு குழந்தை, ஒன்றை உணர்ந்து, அறிந்து அதன்படி செயற்பட்டு விடுவதில்லை. இவ்வாறான பார்த்தல், கேட்டல் மூலம் உள்வாங்கும் அடிப்படை உணர்வுகளை அவர்களின் உள்மனதில் ஏற்படும் ஆராய்வு, அறிய முற்படுதல் எனலாம். இதுவே நாளடைவில் விருத்தியடைந்து அவர்களின் மூளை வழிச் செயற்படவும், ஏனைய ஆற்றல்களை வெளிப்படுத்தவும், அந்தக் குழந்தையின் சுயசிந்தனைக்கும் உறுதுணையாக அமைகின்றது.

வர்ணங்களைக் கண்டவுடன் அவற்றைச் சுட்டிக்காட்டுதல், பிடிக்க முற்படுதல், அவற்றைத் தொடும்போது முகத்தில் தோன்றும் உணர்வு (சிரித்தல், சிந்தித்தல்) கைகால்களை அடித்துக் குதூகலத்தை வெளிப்படுத்தல் போன்றவை, ஒரு பிள்ளையிடம் சாதாரணமாகவே அமைந்திருக்கும். அத்தகைய தன்மையற்றிருக்கும்போது அதனைத் தூண்டிவிடும் செயற்பாடுகளை பெற்றோர், பராமரிப்போர் ஏற்படுத்திக் கொடுப்பது கட்டாயமானதாகும்.


விதம்விதமான வர்ணங்களை மாற்றி மாற்றிக் காட்டுதல், அதனை அவர்கள் கையில் தொட்டுணர்ந்து அனுபவிக்க வைத்தல், அவர்களுக்குப் பக்கமாகவும் தூரமாகவும் அசைத்துப் பிள்ளைளை அந்தச் செயற்பாட்டில் ஒன்றிக்க வைத்தல் என்பவற்றின் மூலம் அவ்வாறான அசாதாரண நிலையைத் தவிர்த்துக் கொள்ளக்கூடிய தூண்டுதல்களாக அமையலாம்.

மென்மையான ஓசைகளைச் சூழலில் ஏற்படுத்துவதன் மூலம், அந்த ஒசை உருவாகும் இடத்தை அறிய முற்படும் பிள்ளையின் வியப்புணர்வை அறிந்து கொள்ள முடியும். அத்தோடு அது உருவாகும் மூலத்தைச் சுட்டிக்காட்டிச் சேர்ந்து இரசித்தல் என்பவை அந்தக் குழந்தை அறிய முற்படும் முயற்சியில் தம்மையும் இணைத்துக் கொள்ளுதல் மூலம் பெற்றோர், பராமரிப்போர் பிள்ளையின் அந்தச் செயற்பாட்டின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க முடியும்.

ஆயினும் இன்றைய காலகட்டத்தில் நிறைந்த வேலைப்பளுவுடைய பெற்றோர்கள் பிள்ளைகளுடன் தமது நேரத்தைச் செலவிடுவது அரிதாகவே உள்ளது. எனினும், தன்னிச்சையாகவே பிள்ளையிடம் இவ்வாறான உணர்திறன்கள் ஏற்படாத பட்சத்தில், அவற்றைத் தோற்றுவித்துக் கொடுப்பதும் அவர்களுடன் ஒன்றித்து குழந்தையோடு குழந்தையாக இணைந்து அனுபவித்தலும் பெற்றோரின் தலையாய பொறுப்பாகும். இதன் மூலம்தான், சுயதிறனுள்ள பிள்ளை ஒன்றையும், ஆரோக்கியமான உடல், உளமுள்ள சந்ததியையும் தாய், தந்தையரால் உருவாக்கிக் கொள்ள முடியும். ஆயினும் இன்றைய உலக நடைமுறை ஒழுங்கானது பெரும்பாலான பெற்றோர்களுக்கு ஒரு பெரும் சவாலாகவே அமைந்துள்ளது.

> பெரும் சத்தம், அவர்கள் முன் உரத்துப் பேசிக்கொள்ளுதல் போன்றவை பிள்ளையிடத்தே மனம் திடுக்கிடும் தன்மையையும் முகத்தில் அச்ச உணர்வு நிலையையும் ஏற்படுத்தக் கூடும். குழந்தை பிறந்து குறிப்பாக ஒரு மாதகாலப் பகுதியின் பின் ஆரம்பிக்கும் இந்த நிலை, அதன் 18 மாத காலம் வரை அடிப்படை விருத்தியைத் தோற்றுவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீடனின் துரோகம்!

அடியக்கமங்கலம் என்பது ஒரு சிறிய கிராமத்தின் பெயர் பேர் பெற்ற ஊர் அது. "அடியக்கமங்கல அடி அபார அடி! அதை அடுத்தவரிடம் போய்ச் சொல்லாதடி" என்று அவ்வூரைப்பற்றிஒருபழமொழியேஉண்டு. அவ்வூரில் 'வீரபாண்டியன் விளையாட்டுக் கழகம்" மிகவும் பிரசித்தி பெற்றது. குமரகுரு அதற்குத் தலைவராக இருந்தார். அவருக்கு வயது அறுபது. சிலம்பம், வாள் வீச்சு, வேல் எறிதல் போன்ற வீரவிளையாட்டுக்கள் அனைத்தும் அவருக்கு அத்துப்படி!

எத்தனையோ இளைஞர்கள் குமரகுருவிடம் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைந்து வந்தனர்.

இவ்வாறு ஊருக்கே நல்லதொரு பாதுகாப்பாக விளங்கிய அவருக்கு ஊருக்குள் ராஜமரியாதைதான்!

குமரகுருவின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் பொறாமைத் தீயில் பொசுங்கிக் கொண்டு இருந்தான் ஓர் இளைஞன்! அவன்தான் சிகாமணி.

"போயும் போயும் ஒரு கிழவனுக்கு இவ்வளவு மரியாதையா?" என்று எண்ணி ஏக்கப் பெருமூச்சுவிட்டான் சிகாமணி!

குமரகுருவைஎதிர்த்து வீழ்த்துவது என்பது கனவிலும் நடவாத ஒன்று! ஏனெனில்எந்தஒருவிளையாட்டிலும் அரிச்சுவடியையே அறியாதவன் சிகாமணி!

அதனால் நைசாகப் பேசி, கூழைக் கும்பிடு எல்லாம் போட்டு எப்படியோ மெதுவாக குமரகுருவிடம் சீடனாகச் சேர்ந்து விட்டான் சிகாமணி!

இரண்டு ஆண்டுகள் காலத்திலேயே வீரவிளையாட்டுக்களில் முழுமையான தேர்ச்சி அடைந்தான் அவன். சிகாமணியின் திறமையைச் சிலர் புகழ்ந்து "ஆகா.... ஓகோ" என்று பேசுவதைக் கேட்ட அவனுக்குத் தலைகால் புரியாமல் போய்விட்டது. எந்த விளையாட்டிலும் தன்னை வெற்றிகொள்ள ஆளில்லை என்று தலைக்கனம் ஏற்பட, சிகாமணி குருவையே ஒரு கைபார்த்துவிட எண்ணினான்!

மறுநாள் குமரகுருவின் முன்னால் போய் நின்று கொண்டு... "இப்போதே உங்களோடு நான் மோதத் தயார்... நீங்கள் தயாரா?" என்றான் சிகாமணி.

அவனைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்துவிட்டு..."சிகாமணி ...நீ சின்னப் பையன்... அவசரக்காரன்... ஆதலால் உனக்குப் புத்திமட்டு.. அது மட்டுமல்ல; உன்னைப் போல எத்தனை பேரை நான் பார்த்திருப்பேன்...? இப்படிக் குருவிடமே கை வரிசை காட்ட நினைப்பாய் என்று எனக்கு முன்னாரே தெரியும். மேலும் இதுபோல் ஏடாகூடம் ஏதும் ஆகிவிடக் கூடாது என்பதற்காகத் தான் ஒரே ஒரு விளையாட்டை மட்டும் எவருக்குமே நான் சொல்லிக் கொடுப்பதில்லை. இதுவரை நான் உனக்கு விளையாடிக் காட்டாதது. "காட்டா குஸ்தி". புரிகிறதா? இப்போது நான் தயார்... நீ தயாரா....?" என்றார் குமரகுரு.

அப்படியே இடி தலையில் இறங்கினாற்போல் நிலை குலைந்தான் சிகாமணி!.

# வரலாற்றில் இன்றைய தினம்



823 - முதலாம் லோதையர் இத்தாலியின் அரசராக பாப்பரசர் முதலாம் பாஸ் சாலால் முடி சூட்டப்பட்டார்.

1722 - ஈஸ்டர் தீவு, டச் கண்டுபிடிப்பாளர் ஜேகப் றொகிவீனால் கண்டுபிடிக்கப்பட்டது.

1923 - பயர்ஸ்டோன் றப்பர் நிறுவனம் பலூன் ரயர் உற்பத்தியைத் தொடங்கியது.

1932 - பின்லாந்தில் அல்கஹோல் தடை முடிவுக்கு வந்தது. மதுக் கடைகளில் அல்கஹோல் விற்பனைக்கு இடப்பட்டது.

1942 - இரண்டாம் உலக மகாயுத்தம்; ஜப்பானிய இம்பீரியஸ் கடற்படை இலங்கையின் தலைநகர் கொழும்புமீதும், விமானத் தாக்குதல்களை மேற்கொண்டது.

1943 - இரண்டாம் உலக மகாயுத்தம். அமெரிக்க குண்டு வீச்சு விமானங்களின் தவறுதலான தாக்குதல் காரணமாக பெல்ஜியம் மோட்செல் நகரில் 209 சிறுவர் உட்பட 900 குடிமக்கள் உயிரிழந்ததுடன், 1,300 பேர் காயமடைந்தனர். மக்கள் குடியிருப்பில் இருந்து ஒரு கி.மீ. தொலைவிலுள்ள ஏர்லா தொழிற்சாலையே அவர்களது இலக்காக அமைந்திருந்தது.

1944 - இரண்டாம் உலக மகாயுத்தம். கிரேக்க நாட்டின் லெஸ்ஸெளரா நகரில் ஜேர்மனியரால் 270 குடிமக்கள் கொல்லப்பட்டனர்.

1949 - எப்பிங்காம் இல்லியனொஸ் மருத்துவ மனையில் ஏற்பட்ட தீயில் 77பேர் சாவடைந்ததையடுத்து, அமெரிக்காவில் தேசிய அளவில் தீ நடைமுறைக்கோவை மேம்பாட்டுத் திட்டம்கொண்டுவரப்பட்டது.

1956 - கியூபா ஜனாதிபதி பிளென்சியோ பாடிஸ்டாமீது, போர்ப் பிரகடனத்தை பிடல் காஸ்ரோ வெளியிட்டார்.

1956 - இலங்கையில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மஹஜன எக்சத் பெரமுன வெற்றிபெற்று எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்கா பிரதமராகச் சத்தியப் பிரமாணம் செய்தார்.

1957 - இந்தியாவின் கேரளாவில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றிபெற்று ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் முதலமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

1969 - அமெரிக்க நகர்களில் பெரியளவிலான வியட்நாம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

1971 - சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு எதிராக ஜனதா விமுத்தி பெரமுன புரட்சி ஒன்றைத் தொடங்கியது.

1994 - அமெரிக்க இசையாளர் குர்ட்கொபைன் தற்கொலைசெய்து கொண்டார்.

2009 - பிரச்சினைக்குரிய வாங்கி யோங் - 2 றொக்கெட்டை வடகொரியா ஏவியது. ஜப்பானுக்கு மேலாக சற்றலைற் கடந்ததையடுத்து உடனடியாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டதுடன் ஆறுநாடுகள் பங்குகொண்ட பேச்சுவார்த்தையும் இடம்பெற்றது.



# வெற்றி நிச்சயம்



சுட்டெரி உன்னுள்
சுடர்விடும் கோபத்தை

விட்டொழி தணலாய்
எரிகின்ற மோகத்தை

விழித்திரு வாழ்வில்
வெளிச்சம் வரும்வரை

பொறுத்திரு துன்பம்
தூணாய் நிற்கையில்

படித்திரு பாட்டன்
பாரதி வரிகளை

உழைத்திரு வியர்வை
சிந்திட நித்தமும்

கிடைத்திடும் வாழ்க்கையில்
வெற்றிகள் நிச்சயம்

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைக்கு நிரந்தர விடுதலை அளிப்போம்



கே.எஸ்.சிவஞானராஜா

**தோல்விகளே வாழ்க்கையின் மூலதனம். தோமஸ் அல்வா எடிசனின் தொளாயிரம் தோல்விகளாலேதான் இந்த உலகம் ஒளிமயமாகப் பிரகாசிக்கிறது. பரீட்சை, காதல் தோல்விகளுக்குத் தற்கொலை ஒரு தீர்வல்ல! அது உனது உரிமையுமல்ல!**

அண்மைக் காலமாக அருமந்த சில பிள்ளைகளின் விபரீத முடிவுகள் பற்றி ஊடகங்கள் வாயிலாக அறிந்த போது, இந்த மண் கலங்கிற்று. கண்ணீர் சிந்தியது. ஏன் இந்தப் பிள்ளைகள், இவ்வாறான விபரீதங்களுக்கும், முடிவுகளுக்கும் ஆளாகிறார்கள் என்பது பற்றி ஆராய்வதும், அதனைத் தடுப்பதும் சமூகத்தினது கட்டாய பொறுப்பாகும். பொன் போன்ற பிள்ளைகளின் தோல்விகளுக்கும், தாக்கங்களுக்கும், இயலாமைகளுக்கும், வினாக்களுக்குமான தீர்வுகள், இதயங்களை நோதல்படுத்தா வண்ணம், வெல்லும்படியாக வழிகாட்டப்படுமாயின் அல்லது வேதனைகளிலிருந்து விடுபடக்கூடிய ஆன்மிகப் பாதைகளில் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுமாயின் அல்லது மனதைத் தேற்றிக் கொள்ளும் படியான பொறுமை என்னும் ஆன்மிக பலத்தைச் சமூகமானது, பக்கத் துணையாக்கிப் பாதுகாப்புத் தருமாயின், விழுந்தவர்களையும் தடக்கியவர்களையும் மீண்டும் எழுந்து நடக்கச் செய்து இந்த மண்ணில் அவர்களையும் பூரண வரமுள்ள மனிதர்களாக ஆக்கி விடமுடியும். ஆகவே, ஒவ்வொரு பிள்ளைகளையும் வரந் தரும் பிள்ளைகளாக மாற்ற வேண்டிய கட்டாயப் பொறுப்பில் சமூகத்தில் மிளிரும் ஊருக் குப் பெரியவர்கள் இருக்கிறார்கள். மேடையானது, பாடையில் செல்வோரையும் விழிப்படையச் செய்யுமாயின், கோடைகூட மழையால் ஓடையாகும்.

### முடிவு இதுவல்ல

தோல்வி என்பது வெற்றியின் ஆரம்பம். தோல்வியை விடச் சிறந்த படிப்பினை இந்த உலகில் வேறொன்றுமில்லை. தோல்விக்குத் தீர்வு தற்கொலையல்ல. தற்கொலை ஒரு தீர்வாகாது. அதனால் எவரும் எதையும் சாதிக்கப் போவதில்லை. சாதிக்கவும் முடியாது. சமூகம் ஆக மிஞ்சினால், ஒரு நாளோ, ஒரு சில நாள்களோ அந்தச் செயலை நினைவில் வைத்திருக்கும். சுடலை அலுவல் முடிந்ததும், படலை வழமை போலத் தன் நாளாந்தக் கடமையை நிறைவேற்றியே தீரும். ஏனெனில் இறைவன் இந்த உலகை, ஜீவராசிகள் நன்றாக அனுபவிப்பதற்காகவே படைத்திருக்கின்றான். அனுபவித்தால் தான் ஆடி அடங்கும். அதுதான் உலக நியதியும்கூட. எனவே, அது வரை ஒவ்வொரு மனிதனும் தோல்விகளையும், துன்பங்களையும் சகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். தோல்விகளாலேயே இந்த உல்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. வைத்தியம் என்பது பலருடைய தோல்விகளிலே தான் உயர்ந்து நிற்கிறது. தோமஸ் அல்வா எடிசன் பல தோல்விகள் மூலமாகவே ஒரு மின்குமிழை எரியச் செய்தார். நான் கடமையாற்றிய ஒரு பாடசாலையில், விளையாட்டுப் போட்டி களின் போது இல்லமொன்றுக்குப் பொறுப்பாசிரியராக இருந்த கால கட்டத்தில் ஐந்து தடவைகள் அந்த இல்லம் கடைசி இடத்தைப் பெற்ற போதும், நேர்மையாகவும், விதி களை மீறாமலும் மாணவர்கள் ஒழுக்கமாக செயற்படப் பழகிக் கொண்டதால் இன்று அத்தனை மாணவர்களும் நல்ல பிரசைகளாக, உயர்ந்த பதவிகளோடு வாழ்கிறார்கள். அல்லாமலும் தோல்வி அடைந்தவர்களாலேயே இந்த மண்ணும் சரி, உலகமும் சரி உயிரோடு வாழ்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இவர்களில் எவரும் தோல்வியைக் கண்டு தற்கொலையை மறந்தும் கூட எண்ணிப் பார்த்ததேயில்லை.

ஊனமுற்றவர்கள் எல்லோரும் தாம் வாழ முடியவில்லையே என்று தற்கொலை செய்த வரலாறு இல்லை. ஏனென்றால், அவர்கள் எல்லோரும் இந்த உலகில் வாழ்ந்து காட்ட வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

### பரீட்சை

க.பொ.த சாதாரண தரத்தில் சுமார் ஆறு லட்சத்துக்கும் அதிகமானோர் தோற்றியபோதும், அத்தனைபேரும் எல்லாப் பாடங்களிலும் சித்தி பெற்றதாக எந்தவொரு இணையத்தளமும் செய்தி வெளியிடவில்லை. அரைவாசிக்கு மேற்பட்டோர், உரியவாறு சித்திபெறவில்லை என்பதை யாவரும் அறிவர். இவர்கள் திரும்பவும் பரீட்சையை எடுக்கும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும். சகதோழி ஒன்பது "ஏ" எடுத்தது போன்று தனக்கும் வர வேண்டுமென்றால் அது ஒரு போதும், சாத்தியப்படாது. தான் நினைத்தது கிடைக்காமல் போகுமானால் தனது உயிரை மாய்த்துக் கொள்ள முனைவது முட்டாள்தனமானது; கோழைத்தனமானது; மடமைத்தனமானது; இதை எவருமே சரியென்று கூறமாட்டார்கள். சிறுபிள்ளைகூட இதனை ஆதரிக்காது. எல்லாவற்றிலும் மேலான இறைவன்கூட இந்தச் செயலை ஏற்றுக்கொள்ளவே மாட்டான். அவ்வாறு எவருமே ஆதரிக்காமல், எதிர்த்து நிற்கும் போது தற்கொலை என்ற அயோக்கியத்தனமான முடிவுக்கு எவருமே முனைந்திடலாகாது. அதனால் எவரும் பயனடையப் போவதில்லை. எவராலும் சரியென்று பாராட்டப்படப் போவது மில்லை. பிறப்பின் பயனும் அதுவல்ல.

### தீர்வு

உயர்தரத்துக்குப் போகமுடியவில்லை என்றோ, அல்லது வகுப்பேற்றப்படவில்லை என்பதற்காகவோ, அல்லது தான் அழகில்லை என்பதற்காகவோ, அல்லது ஆபாசத்தை அள்ளிக்கொட்டும் படங்களைப் பார்க்கக்கூடாது என்று சொன்னதற்காகவோ, அல்லது பணம் தரவில்லை என்பதற்காகவோ, அல்லது காதலில் ஏமாற்றப்பட்டு விட்டேன் என்பதற்காகவோ அல்லது பலாத்காரம் செய்யப்பட்டு விட்டேன் என்பதற்காகவோ உயிரைப் போக்குவதற்கும் அல்லது உயிரை விடுவதற்கும் எவருக்குமே உரிமை இல்லை.

ஆதலால் தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதே. தோல்விகளே உனது முன்னேற்றத்தின் வேள்விகளாகக் கருதி நிமிர்ந்து நட. துணிந்து செல். நேர் கொண்ட பார்வையை உதிர்த்து தொடர்ந்து செல். எந்தத் தெய்வம் உன்னைச் சமாதானப் படுத்துகிறதோ அதனைச் சிக்கெனப் பிடி. தோல்வியிலிருந்து மீண்டு, வெல்லப்படுவாய். உனது முகத்தில் ஆன்மிக ஒளி பிரகாசிக்கும். உன்னிடத்தில் உனக்கே பூரண நம்பிக்கை வளரும். உன் பின்னால் ஒரு சமூகமே வருவதாகி நீ உயர்ந்த கருடனைப் போலப் போற்றப்படு வாய். நீ நினைப்பது சரியாய் நடக்கும். சிறுவர், முதியவர், நோயாளிகள், சமூகத்த வர்கள், படித்தவர்கள் யாவருமே உனது முன்னேற்றத்தில் அக்கறையோடு இணைவார்கள். கல்வியிலும், கருணையிலும், கடவுளிலும், கடமையிலும் நீயோ படிப்படியாக வெல்வாய். தோல்வி வந்தாலும் நீ மீண்டு எழுந்திடுவாய். வருத்தப்படமாட்டாய். வாழ்வதற்கு ஆசைப்படுவாய். பயம் உன்னை விட்டகன்றிடும். சாவுப் பயமோ, சாவோ உன்னைக் கண்டு தூர விலகிடும். சாவுப் பயம் உள்ளவர்களைக் கண்டு ஆறுதலளித்து அபயம் கொடுப்பாய். தற்கொலை என்ற எண்ணமே உன்னை நெருங்காது. அதற்கு விடுதலை கொடுப்பாய். அருமந்த பிள்ளைகளின் வாழ்வு இனி ஆயிரம் மலர்கள்போல் மலரட்டும். தோல்விகள் மூலமாகவே மனித இனம் வரலாற்றைப் படைக்க முடியும்.

# பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவதா?

2009 இல் புலிகள் தோற்கடிக்கப்பட்டதில் இருந்து கடந்த வருடம் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட காலம்வரை, முன்னைய அரசு புலிகள் தொடர்பான புரளியிலும் இனவாதத்திலுமே அரசியலை நடத்தி வந்துள்ளது.

இந்த நடைமுறைக்கு வாய்ப்பளிக்கும் விதமாக யாழ். சாவகச்சேரி, மறவன்புலவுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலைக் குண்டு அங்கி மற்றும் வெடிபொருள்கள் மீட்புச் சம்பவம் அமைந்திருக்கிறது.

இந்த நிலையில், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கட்டுப்பாடு, அரசை விட்டு முற்றாகவே கைநழுவிப் போய்விட்டது என மகிந்த அணியைச் சேர்ந்தவர்கள் இப்போது எகிறித் துள்ளிக் குதிக்க ஆரம்பித்துவிட்டனர். ஆட்சிப் பொறுப்பை மீண்டும்மகிந்தராஜபக்சவிடம் ஒப்படைத்து விடுமாறும், நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை கோத்தபாயவிடம் வழங்குமாறும் அண்மைய தினங்களாக குரலெழுப்பி வருகின்ற மகிந்த அணியினருக்கு, சாவகச்சேரிப் பகுதியில் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக வெளிவந்துள்ள செய்தியானது பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாகி உள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் தற்கொலைக் குண்டு அங்கியும் கிளைமோர்களும் மீட்கப்பட்ட தாகச் செய்தி வெளியாகியதே தவிர, அந்த விவகாரம் குறித்த விசாரணையின் உறுதிப்படுத்தப்பட்ட தகவலெதுவும் அன்றைய தினம் வெளியாகியிருக்கவில்லை. தற்கொலை அங்கியும் ஏனைய ஆயுதங்களும் முன்னைய போர்க் காலத்துக்குரியவையா, இப்பொருள்கள் அங்கு வந்து சேர்ந்தது எவ்வாறு என்பவை போன்ற விடயங்களும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனாலும், ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட செய்தி வெளியானதும் அன்றைய தினமே ஊடகவியலாளர் மாநாட்டில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அரசுக்கு எதிரான கருத்துக்களைக் கடும்தொனியில் வெளிப்படுத்தினார். தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், கொழும்புக்குக் கொண்டுவரப்படவிருந்த வெடிபொருள்களே மீட்கப்பட்டுள்ளதாகவும் எதுவித உறுதிப்பாடுகளுமின்றிக் கருத்து வெளியிட்டிருந்தார் பேராசிரியர் பீரிஸ்.

புலிகள் மீண்டும் ஒருங்கிணைந்து தலையெடுக்கத் தொடங்கியிருப்பதாக தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் பீதியை உருவாக்குவதற்கு முற்படுகின்ற மகிந்த அணியினருக்கு சாவகச்சேரி ஆயுத மீட்புச் செய்தியானது வாய்ப்பாக அமைந்துள்ளதுடன், பேராசிரியரின் கருத்துக்களும் அதற்கு ஏதுவானதாகவே அமைந்திருக்கின்றன.

சிங்கள மக்களை எழுச்சிக்கு உள்ளாக்கக்கூடியது புலிகள் தொடர்பான பீதியும் சிறுபான்மையினருக்கு எதிரான இனவாதமும்தான் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த வருட ஜனவரியில் பறிபோன ஆட்சியை மீண்டும் கைப்பற்றிக்கொள்வதற்காக மகிந்த தரப்பினர் அன்றைய பாதையையே இப்போதும் பின்பற்றுகின்றனரென்பதும் இரகசியமான ஒன்றல்ல.

வடக்கு-கிழக்கு மக்களின் சுமுகமான வாழ்வுக்கு வழி செய்யும் வகையில் அங்குள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டு, வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் நல்லிணக்கம் உருவாகி வருகின்ற இன்றையவேளையில், ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவமானது தெற்கில் எத்தகைய எதிர் விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றதென்பதை ஊகித் துக் கொள்ள முடியாதிருக்கிறது.




எதிர்த்தரப்பிலிருந்து வருகின்ற கருத்துக்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்குமிடத்து, சில விடயங்கள் தெளிவாகவே புலப்படுகின்றன எனக் கூறப்படுகிறது. அதேசமயம், வடக்கு- கிழக்கில் படை முகாம்களைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வைத்திருப்பதன் மூலம் இன்றைய அரசின் மீது வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களுக்கு வெறுப்பை உருவாக்கலாமெனவும் அவர்கள் எண்ணுகின்றனர் என்பதே அதுவாகும்.

இந்தச் சம்பவத்தின் பின்னணி குறித்த பிந்திய தகவல்களைப் பார்க்கும்போது இது அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட விடயமாக இருப்பதையே அவதானிக்க முடிகிறது. எனினும், இது எங்கு கொண்டுசெல்லப்படவிருந்தது என்பது குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளிவரவில்லை.

மொத்தத்தில் பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுவதுபோல், சற்று அமைதி நிலைமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த தமிழ்மக்களையும் அவர் தம் பிரதேசங் களையும் மீண்டும் பதற்றமான நிலைக்குத் தள்ளிச்செல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதே யதார்த்தம். இதற்குக் கட்டியம் கூறுமாற்போல் சோதனைச் சாவடிகளும் வழிமறிப்புகளும், சோதனைகளும் தலைதூக்கத் தொடங்கிவிட்டன. ஆண்ட இனம் மீண்டும் அதிகாரங்களைக் கேட்பதற்கு வைக்கப்படும் ஆப்பாகவே இதனைத் தமிழர் தரப்பு நோக்குகின்றது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொலிவூட்டில் ரவிவர்மன்



தமிழ் சினிமாவின் முன்னணி ஒளிப்பதிவாளராக விளங்குபவர் ரவிவர்மன். வெற்றிப்படங்களான ஆட்டோகிராப், வேட்டையாடு விளையாடு, தசாவதாரம், அந்நியன் உள்படப் பல படங்களை ஒளிப்பதிவு செய்துள்ள இவர் மாஸ்கோவின் காவிரி என்ற படத்தை இயக்கி இருக்கிறார். பின்னர் ஹிந்திப் பட உலகுக்குச் சென்ற இவர் பெர்பி, ராம்லீலா உள்பட பல படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார். தமிழ், ஹிந்தியில் இவரது சிறப்பான ஒளிப்பதிவில் வெளியான படங்கள் ரவிவர்மனின் திறமையை ஹொலிவூட்வரை கொண்டு சென்றுள்ளன. ராம்லீலா ஹிந்திப் படத்தின் ஒளிப்பதிவை இரசித்த ஹொலிவூட் இயக்குனர் டுயான் அட்லர், ரவிவர்மனின் தமிழ்ப் படங்களின் ஒளிப்பதிவையும் பார்த்து பிரமித்துப் போயுள்ளாராம்.

இதையடுத்து, 'டுயான் அட்லக்' தனது புதிய ஹொலிவூட் படத்துக்கு ரவிவர்மனை ஒளிப்பதிவாளர் ஆக்கி இருக்கிறார். ஏற்கனவே 'ஹார்ட் பீட்' என்னும் படத்துக்கு ஒளிப்பதிவை ரவிவர்மன் செய்துள்ளார். நடனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவான இந்தப் படத்தையடுத்து, ரவிவர்மன் ஹொலிவூட் படங்களில் தொடர்ந்து ஒளிப்பதிவாளராகப் பணிபுரிவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | | | 6 |
| | | | | 4 | | | | |
| 9 | | 6 | | | | 3 | 2 | |
| 3 | 1 | | 5 | | | | | |
| | | | | 1 | | | | |
| | 7 | | | | 2 | | | 4 |
| | | | | | | 6 | | 7 |
| 7 | | | 8 | 6 | 5 | | | |
| | 5 | | 2 | | 7 | | | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 1 | 5 | 2 | 4 | 8 | 9 |
| 9 | 1 | 4 | 8 | 3 | 6 | 5 | 7 | 2 |
| 2 | 8 | 5 | 9 | 7 | 4 | 3 | 1 | 6 |
| 1 | 4 | 9 | 6 | 8 | 5 | 7 | 2 | 3 |
| 5 | 2 | 3 | 7 | 4 | 9 | 8 | 6 | 1 |
| 8 | 6 | 7 | 3 | 2 | 1 | 9 | 5 | 4 |
| 6 | 7 | 8 | 2 | 9 | 3 | 1 | 4 | 5 |
| 3 | 5 | 2 | 4 | 1 | 8 | 6 | 9 | 7 |
| 4 | 9 | 1 | 5 | 6 | 7 | 2 | 3 | 8 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: நித்யா



**மேடம்:** மனதில் தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். தொழிலில் வருமானம் திருப்திகரமானதாக இருக்கும். பெண்களின் வாழ்க்கைத் தரம் உயரும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு இடம்பெறும்.

**இடபம்:** எதிரியால் இருந்த தொல்லை குறையும். தொழில் வளர்ச்சியால் ஆதாயம் உயரும். நிலுவைப் பணம் கிடைக்கும். இயன்ற அளவில் தானதர்மம் செய்வீர்கள்.

**மிதுனம்:** பொறாமை எண்ணம் உள்ளவர்களிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்புக் கூடும். பெண்கள் வீட்டுச் செலவுக்குக் கடன் வாங்க நேரிடலாம். வாகனப் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கடகம்:** பணிகளைக் கவனத்துடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் ஆன்மிக நாட்டம் கொள்வர்.

**சிங்கம்:** செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பிள்ளைகள் வெகுநாள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** எதிலும் விழிப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரித்தாலும் வருமானம் கூடும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்:** சகோதரர் மூலம் உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கு, புதிய உத்தியைக் கையாள்வீர்கள். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** உலக விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிட்டாலும் இலாபத்துக்குக் குறைவிருக்காது. கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**தனுசு:** நண்பர்களிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். புதிதாகச் சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். மனைவியின் அன்பால் மனம் நெகிழ்வீர்கள்.

**மகரம்:** முக்கியமான பணியைத் தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழிலில் உள்ள சிரமத்தை, பிறரிடம் விவாதிக்க வேண்டாம். இலாபம் சுமாராகவிருக்கும். மனைவியின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கையளிக்கும்.

**கும்பம்:** செயலில் வசீகரம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். மாமன், மைத்துனருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். பெண்கள், குடும்பத்தினரின் அன்பைப் பெறுவர்.

**மீனம்:** பொது விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். விடாமுயற்சியால், தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். இலாபம் கூடும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர்.

### வகுப்பறையில் மாணவர்கள் செய்யும் அட்டகாசம்

**ஆசிரியை:** பிள்ளைகளா, நான் உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கப்போறேன். அதுக்கு நீங்க பதில் சொல்லணும்.
**மாணவர்கள்:** சரி ரீச்சர்...
**ஆசிரியை:** ஏன் பொண்கள் மட்டும் பரீட்சையில் அதிகமா மார்க் வாங்குறாங்க? ஏன் ஆண்கள் வாங்குவதில்லை?
**மாணவன்1:** அதுக்குத் தானே மார்க்குக்கு தமிழ்ல "மதிப்–பெண்" என பெயர் வச்சுருக்கீங்க. நாங்க அதிகமா மார்க் வாங்கணும்னா அதை "மதிப்–ஆண்" (மதிப்பாண்) என மாத்துங்க.
(திடீரென்று இன்னொரு மாணவன் எழும்பி மீக ஆவேசமா பதில் சொல்கிறான்)
**மாணவன்2:** ரீச்சர், இந்த கல்விக் கடவுள் சரஸ்வதியை வேற டிப்பாட்மேன்றுக்கு மாத்திட்டு, புதுசா ஆம்பள கடவுள போடுங்க. சரஸ்வதியம்மா எப்போதுமே பசங்களுக்கு சப்போர்ட் பண்றதில்ல.
**ஆசிரியை:** ???????????

**ஹலோ சேட்டு பேசுறேன்** @SettuOfficial
முதியோர் இல்லத்தையும் அனாதை இல்லத்தையும் ஒன்று சேர்த்து விடுங்கள்.. பாட்டி தாத்தாவும் பேரக் குழந்தைகளும், மகிழ்ச்சியாய் விளையாடட்டும்!!!

**Sangeetha** @_Sangeethaa_
ஆபாசமாய், அசிங்கமாய் பேசுவதுதான் நவீனமானவர்கள், வலிமையானவர்கள் என்பதங்கு அத்தாட்சின்னு நம்ம ஆள்களுக்கு யாரோ பிழையா கத்துக் கொடுத்திருக்காங்க...



யுவர்ஹார்னர்... வருசத்துல 365 நாளு இருக்கு. ஏப்ரல் ஒண்ணாந் தேதிய மட்டும், அந்த வெள்ளக்காரன் முட்டாள் தினம் என்று சொல்லிட்டுப் போயிட்டான். நீங்களும் மறக்காம அத ஞாபகப்படுத்துறீங்க. நான் தெரியாமத்தான் கேக்குறேன்... மீதி 364 நாளும் நாங்க என்ன புத்திச்சாலியாவா இருக்கோம். இல்லே புத்திசாலியா இருக்க விடுறாங்களா..?

காலையில் எங்கள் வீட்டில் ஒலிக்கும் மங்கள இசை



"எரும இன்னும் எவ்ளோ நேரம் தூங்குவ"
அம்மாவின் மங்கள இசை

**கணவன்:** உனக்கு அக்பரைப் பற்றித் தெரியுமா??
**மனைவி:** இப்போ என்ன அவருக்கு??
**கணவன்:** அவருக்கு மூன்று மனைவிகள்.
**மனைவி:** அதனால??
**கணவன்:** எனக்கு இன்னும் இரண்டு மனைவிகளுக்கான வாய்ப்பு இருக்கிறது.
**மனைவி:** உங்களுக்கு பாஞ்சாலியைப் பற்றித் தெரியுமா?
**கணவன்:** என்ன செல்லம்.. இப்படி பட்டுன்னு டென்ஷன் ஆகுற...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஸ்கேட் ஜீன்ஸ்

ஸ்கேட் ஜீன்ஸ் அறிமுகமாகியுள்ளது. பார்வைக்குப் பாவாடை போன்று தோற்றமளிக்கும் இது, ஜீன்ஸைப் போன்று அணிவதாகும். இதன் விலை 1800 ரூபா தொடக்கம் 2000 ரூபாவாகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்


| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொழும்பு | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | 800 |
| நண்டு | 200 | 500 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 400 | 600 | 700 | – |
| பாரை | 400 | 500 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 700 | – | 450 |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 450 | 400 | – |
| விளை | 500 | 500 | 400 | 500 | 400 | 500 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 300 | 400 | 300 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 600 | – | – |
| ஒரா | 400 | 350 | – | – | 450 | – | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 350 | 100 | 350 |
| நகரை | 150 | 250 | – | 250 | 300 | – | 350 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 150 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 400 | – | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 250 | – | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 300 | 500 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 400 | 250 | 250 |

## மாற்றி யோசியுங்க

- இட்லி அதிகமானாலோ, அல்லது கல்லுப் போல இருந்தாலோ உடனே அதனை உதிர்த்து உப்புமா செய்து விடுங்கள். இட்லிக்கு வைத்த இணை உணவையே இந்த உப்புமாவுக்கு வைத்துச் சமாளித்து விடுங்கள்.
- எத்தனை நாள்தான் ஒம்லெட் போடும்போது, மிளகுப்பொடி தூவியே சாப்பிடுவீர்கள். ஒரு மாறுதலுக்கு ஸ்வீட் பிரட்டை பொடியாக உதிர்த்திப் பரவலாகத் தூவி விட்டு, பிடிக்குமென்றால் நறுக்கிய பச்சை மிளகாய் சேர்த்துச் சாப்பிட்டுப் பாருங்கள்.
- பாற் கொழுக்கட்டை செய்கிறீர்களா? பாலில் கொழுக்கட்டைகளைக் கொதிக்க வைக்கும் போது ஒரு கரண்டி தேங்காய் எண்ணெய் விட்டுப்பாருங்கள். அலாதியான சுவையுடன் இருக்கும்.
- அவல் பாயாசம் செய்து போரடித்து விட்டதா, அவல் உப்புமா அல்லது அவலைக் கொண்டு எலுமிச்சம் சாதம் செய்யலாம். சுவையாக இருக்கும்.
- பால் கெட்டுவிட்டதாக வீணாக்காமல், அதை அப்படியே சட்டியில் ஊற்றி சிறிது நெய்யும், சீனியும் சேர்த்து கோவா செய்து விடுங்கள்.

## நாளை

பங்குனி -24
புதன்கிழமை 06.04.2016
திதி: சதுர்த்தசி மு.இ.07.49 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.05.07 வரை
ராகுகாலம்: 12.08-01.38 வரை
சுபநேரம்: 04.38-06.08 வரை



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 40 | 60 | 40 | 25 | 30 |
| கத்தரி | 90 | 40 | 80 | 60 | 80 | 60 | 40 | 50 |
| கரட் | 80 | 100 | 80–200 | 100 | 160 | 120 | 80 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 35 | 60 |
| பயிற்றை | 80 | 80 | 60–80 | 100 | 100 | 40 | 60 | 50 |
| பாகல் | 120 | 100 | 120 | 100 | 120 | 160 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 70 | – | 60 | – | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 68 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 80 | 80 | 60 | 90 | 70 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 20 | 30 |
| தக்காளி | 40 | 50 | 40 | 60 | 40 | 60 | 60 | 45 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 40 | 100 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 | 30 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 100 | 80–120 | 100 | 100 | 100 | 80 | 110 |
| புடோல் | 50 | 50 | 50 | 60 | 60 | 30 | 30 | 50 |
| கோவா | 50 | 70 | 80 | 80 | 50 | 100 | 70 | 60 |
| வெண்டி | 80 | 60 | 80 | 60 | 80 | 60 | 50 | 50 |
| போஞ்சி | 120 | 110 | 120 | 140 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 140 | 110 | 120 | 140 | 120 | 160 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 35–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 68 | 100 |
| தேசிக்காய் | 160 | 200 | 200 | 140 | 160 | 400 | 180 | 180 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 80 | 100 | 200 | 100 | 120 | 120 | 60 | 80 |
| இராசவள்ளி | 150 | – | 140 | 160 | 160 | – | 110 | 70 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 300 | 400 | 400 | 350 | 350 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

## செய்யும் முறை

- காய்கறிகளை நன்றாகக் கழுவித் தோல் நீக்கி நீளவாக்கில் நறுக்கி ஒரு பாத்திரத்தில் போடுங்கள்.
- அளவாக நீர் ஊற்றி உப்பையும் போட்டுக் கலக்கி அடுப்பில் வைத்து வேக விடுங்கள்.
- தேங்காயைத் துருவிக் கொள்ளுங்கள். பிறகு தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், சீரகம் முதலியவற்றை மிக்ஸியில் விழுதாக அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள்.
- காய்கறிகள் பாதி வெந்ததும் அரைத்த விழுதைப் போட்டுக் கலக்கிவிடுங்கள்.
- அதன்பின் காய்கறிகள் நன்கு வெந்ததும் தயிரை ஊற்றிக் கலக்கிவிடுங்கள்.
- பத்து நிமிடங்களுக்குப் பின்னர் சிறிதளவு தேங்காய் எண்ணெயை ஊற்றிக் கலக்கி ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு இறக்கி விடுங்கள்.

## தேவையானவை

வாழைக்காய் - 1
முருங்கைக்காய் - 2
கத்தரிக்காய் - 3
அவரைக்காய் - 6
மாங்காய் - 1
உருளைக்கிழங்கு - 1
கரட் - 2
தயிர் - 2 கப்
தேங்காய் - 1
பச்சைமிளகாய் - 10
தேங்காய் எண்ணெய் - 3 தேக்கரண்டி
சீரகம் - அரை தேக்கரண்டி
உப்பு தேவையான அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து 10 ஆண்டுகளாக முதலாவது இடத்தில் சிங்கர்

அண்மையில் வோட்டர்ஸ் எட்ஜில் இடம்பெற்ற சிலிம் நீல்சன் மக்கள் தெரிவு விருதுகள் வழங்கும், நிகழ்வில் தொடர்ந்து பத்தாவது ஆண்டாக சிங்கர், இலங்கை மக்கள் விரும்புகின்ற மிகச் சிறந்த வர்த்தகநாமமாகத் தெரிந்தெடுக் கப்பட்டுள்ளது.

இரவை வர்ணமயமாக்கியவாறு விமரிசையாக இடம் பெற்ற இந்த நிகழ்வில், நீடித்து உழைக்கும் நுகர்வோர் உற்பத்திகள் விற்பனையில் நாட்டில் முன்னிலை வகித்து வருகின்ற சிங்கர் நிறுவனம், மகத்தான வெற்றிகளைச் சம்பாதித்துக் கொண்டுள்ளது. வருடத்துக்கான இளையோர் விரும்பும் மிகச் சிறந்த வர்த்தகநாமம், நீடித்து உழைக்கும் நுகர்வோர் உற்பத்திகள் - வருடத்தின் மிகச் சிறந்த வர்த்தகநாமம் ஆகிய விருதுகளை சிங்கர் வென்றுள்ளதுடன், நாட்டில் எந்தவொரு வர்த்தக நாமத்துக்கும் கிடைக்கக்கூடிய அதியுச்ச விருதான மக்கள் தெரிவின் பிரகாரம் வருடத்துக்கான மிகச் சிறந்த வர்த்தகநாமம் என்ற பிரபல விருதையும் தனதாக்கி சிங்கர் நிகழ்வில் அனைவரது கவனத்தையும், தன்பால் ஈர்த்துக் கொண்டது.



இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்ற தனித்துவம் மிக்க விருது வழங்கும் நிகழ் வான் சிலிம் நீல்சன் மக்கள் தெரிவு விருதுகள், நாட்டில் மக்களின் மனதில் கணிசமான ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ள வர்த்தகநாமங்கள் மற்றும் தனிநபர்களை இனங் கண்டு, அங்கீகரிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இலங்கையின் வர்த்தகத்துறை நாள்காட்டியில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்வு களுள் ஒன்றாக இது காணப்படுகின்றது. சந்தை ஆராய்ச்சி நிபுணத்துவத்தை வழங்குவதில் உலகிலுள்ள மிகவும் பெரிய தகவல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்ற நீல்சன் லங்கா நிறுவனத்தால் நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற முழுமையான ஆராய்ச்சியின் மூலமாக இதற்காகப் பரிந்துரைக்கப்படுபவர்கள் மற்றும் வெற்றியாளர்கள் என இரண்டு தரப்பினருமே மக்களின் கருத்தின் மூலமாகவே தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர்.

இந்தச் சாதனை மிக்க வெற்றி தொடர்பில் சிங்கர் சிறிலங்கா குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அசோக பீரிஸ் கருத்து வெளியிடுகையில்: இந்த விருதைத் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளாக வென்றுள்ளமை சிங்கர் நிறுவனத்தில் நாம் அனைவரும் மிகவும் பெருமைப்பட வேண்டிய ஒரு தருணமாகும். அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைந்து, அனைத்து உற்பத்திப் பிரிவுகள் மற்றும் சேவைகள் மத்தியில் மிகச் சிறந்த வர்த்தகநாமமாக சிங்கரைத் தெரிவு செய்துள்ளமைக்கு, சிங்கர் அவர்களின் இதயங்களில் நெருக்கமாக இடம்பிடித்துள்ளமையே அடிப்படைக் காரணமாகும்.

நாம், பெறுமதிமிக்க எமது வாடிக்கையாளர்களுடன் நடந்துகொள்ளும் விதம் மற்றும் சிங்கர் வர்த்தகநாமம் அவர்களுக்கு எத்தகைய அளவுக்கு மகத்தானது ஆகியவற்றுக்கான இனங்காணல் அங்கீகாரமே இந்த விருது. பல்வேறு சந்தர்ப்பங்கள் மற்றும் நிகழ்வுகளின் ஊடாக நாட்டில் விளையாட்டு, கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை மேம்படுத்துவதில் எமது அனுசரணைகள் மற்றும் செயற்பாடுகளுடன், மிகுந்த பங்குபற்றல் அடங்கலாக நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற சமூக சேவை நிகழ்ச்சித்திட்டங்களின் மூலமாக நாம் பொதுமக்களுடன் கட்டியெழுப்பியுள்ள மிகவும் உறுதியான பிணைப்பை இது வெளிக்காண்பிக்கின்றது. சிங்கர் நிறுவனம், மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ள ஒரு நிறுவனமாக உள்ளதுடன் மட்டுமல்லாமல், வருடத்துக்கான இளையோர் விரும்பும் மிகச் சிறந்த வர்த்தகநாமம் என்ற விருதை வென்றமையானது கணினிகள், ஸ்மார்ட்போன்கள் மற்றும் பல அனுசரணைகள் அடங்கலாக புத்தாக்கமான உற்பத்திகள் மற்றும் சேவை களின் ஊடாக இன்றைய இளைய தலைமுறையினரையும் வெற்றிகரமாக இணைத்து, அவர்களின் இதயங்களையும் வென்றுள்ளமையைக் காண்பிக்கின்றது.

நாடளாவியரீதியில் வியாபித்து, 400 இற்கும் மேற்பட்ட காட்சியறைகளுடன் விஸ்தரிப்படைந்து வருகின்ற வலையமைப்பு மற்றும் அதே அளவுக்குச் சிறப்பாக வியாபித்துள்ள விற்பனைக்குப் பின்னரான சேவை வலையமைப்பு ஆகியவற்றின் துணையுடன் பரந்துபட்ட தனது நுகர்வோர் தளத்தை நிறுவனம் தொடர்ந்தும் பேணி வருகின்றது. கொள்வனவு இடம்பெறுகின்ற வேளைகளில் நுகர்வோருக்கு சௌகரியத்தையும், வசதியையும் வழங்கும் முகமாக, சிங்கர் அவர்களுக்கு பெரிய தெரிவிலான உற்பத்திகள் மற்றும் சேவைகள், நியாயமான கொடுப்பனவுத் திட்டங்கள் மற்றும் அவர்களின் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் மகத்தான சௌகரியம் ஆகியவற்றையும் தனது நுகர்வோருக்கு வழங்கி வருகின்றது.

முக்கியமான குறைபாடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வந்துள்ள சிங்கர் சிறிலங்கா நிறுவனம், அதன் மூலமாக சமூகரீதியாக, பொறுப்புணர்வுடனான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. கல்வித்துறையைப் பொறுத்தவரையில் கிராமப்புற பாடசாலைகளில் மிகவும் தேவையாக உள்ள சுகாதார வசதிகள், குடி தண்ணீர், தளபாடங்கள், காதிதாதிகள் மற்றும் ஏனைய வசதிகளை அது ஏற்படுத்தித் தந்துள்ளது. 64 கிளைகளைக் கொண்டுள்ள சிங்கர் பான் அக்கடமி, ஆயிரக்கணக்கான மாணவர்கள் முறையான ஆடைத் தயாரிப்பு மற்றும் இயந்திர பூத்தையல் (எம்பிராய்டரி) திறன்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி ஒன்றை முன்னெடுக்க உதவி, ஆடைத் தொழிற்றுறையில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது சுய தொழில் முயற்சிகளை முன்னெடுக்கவோ அவர்களுக்கு வழிவகுத்துள்ளது. (த)

# ஜப்பானிலிருந்து கிளிங்கர் இறக்குமதியை மீள ஆரம்பித்துள்ள டோக்கியோ சிமெந்து

பல தசாப்தகாலமாக நிர்மாணத்துறையில் புகழ்பெற்று விளங்குவதோடு, உயர் தரம் வாய்ந்த சிமெந்துகளை விநியோகித்து வரும் டோக்கியோ சிமெந்து குழுமம், ஜப்பானிலிருந்து கிளிங்கர் இறக்குமதியை மீள ஆரம்பித்துள்ளது. சிமெந்து உற்பத்தியில் பிரதான மூலப் பொருளான கிளிங்கர், நிப்பொன் சிமென்ற் புறோ தயாரிப்புக்கு பிரத்தியேகமான முறையில் பயன்படுத்தப்படும். வானுயர்ந்த கட்டடங்கள் மற்றும் உறுதியான கட்டடங்கள் நிர்மாணத்துக்காகப் பயன்படுத்தப்படும் சிமெந்து வகையாக இது அமைந்துள்ளது.

டோக்கியோ சிமெந்தின் குழும சந்தைப்படுத்தல் முகாமையாளர் தந்த உடவத்த கருத்துத் தெரிவிக்கையில், டோக்கியோ சிமெந்தைச் சேர்ந்த நாம், உயர் வினைத்திறன் வாய்ந்த சிமெந்து வகைகளுக்கு அதிகளவு தேவை காணப்படுகின்றமையை நன்கு உணர்ந்துள்ளோம். இதன் காரணமாக ஜப்பானின் தலைசிறந்த உற்பத்தியாளர் மூலம் கிளிங்கரை இறக்குமதி செய்ய தீர்மானித்தோம். டோக்கியோ சிமெந்து அண்மையில் நிப்பொன் சிமென்ற் புறோ வர்த்தக நாமத்தை அறிமுகம் செய்திருந்ததுடன், இதன் மூலம் முதலாம் தர ஒப்பந்தகாரர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளின் மற்றுமொரு பங்களிப்பாக, சவால்கள் நிறைந்த நிர்மாணச்செயற்றிட்டங்களை கையாளும் ஒப்பந்தகாரர்களுக்கு பெரும் நிவாரணமாக இந்த தயாரிப்பு அமைந்திருக்கும் -என்றார்.

**வணிகம்**

டோக்கியோ சிமெந்து நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் கலாநிதி. எம்.ஜி.எம்.யு.இஸ்மைல் கருத்து தெரிவிக்கையில், நிப்பொன் சிமென்ற் புறோ உற்பத்தியில் ஜப்பானிய கிளிங்கர் பயன்பாட்டின் மூலமாக, உயர்ந்த கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதோடு, குறிப்பாக வெப்பநிலைகளுக்கு தகுந்த தாக்குப்பிடித்தல், 80க்கும் அதிகமான உயர் வலிமையான் கொங்கிறீற் வகைகளுக்கு தாக்குபிடிக்கக்கூடிய தன்மை போன்றவை இவற்றின் சிறப்புக்களில் உள்ளடங்கும் -என்றார்.

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உயர் தர கிளிங்கர் வகையை உபயோகிப்பது எனும் தீர்மானத்தைத் தொடர்ந்து, உயர்தரம் வாய்ந்த சிமெந்து வகைகளை விநியோகிக்கக்கூடிய ஆற்றலை டோக்கியோ சிமெந்து கொண்டுள்ளதுடன், நிர்மாணத் துறையைச் சேர்ந்த தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய இயலுமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

## நுட்பம்




# மூடுவிழாக் காணும் க்ரோம் அப் லான்சர்

அண்மைக்காலமாக கூகுள் தேவையற்ற தனது சேவைகளை நிறுத்தி வருகிற நிலையில், பெரும்பாலானோரால் அறியப்படாத க்ரோம் அப் லான்சர் அப்ளிகேசன் சேவையை நிறுத்திக் கொள்வதாகத் தற்போது அறிவித்துள்ளது. இணைய உலவியாக க்ரோம் மூலமே அனைவரும் தமது தேவைகளை நிவர்த்தி செய்து வருகின்றனர். இந்த நிலையில், உலவிக்கு வெளியே சில சேவைகளைத் திறந்து பார்க்கும் க்ரோம் அப் லான்சர் அப்ளிகேசன் பெரும்பாலானோரால் பயன்படுத்தப்படுத்த முடிவதில்லை.

உதாரணமாக: ஜிமெயில், யூடியூப் உள்ளிட்டவைகளை உலவிக்குள் செல்லாமலே தனியாகத் திறக்கலாம். அதாவது அடிக்கடி பயன்படுத்தப்படும் இணையத் தளங்களை இதன் மூலம் எளிமையாகச் சென்று பயன்பெறலாம்.

ஆனால், பலர் க்ரோம் உலவிக்குள்ளேயே அனைத்து இணையத் தளங்களையும் சென்று பார்ப்பதால், க்ரோம் அப் லான்சரின் சேவை தெரிவதில்லை.

இந்த நிலையில், கூகுளால் சமீபகாலமாக மூடுவிழா செய்யப்பட்ட, கூகுள் லேப்ஸ், கூகுள் டிக்சனரி, பிகாசா, கூகுள் ரீடர், ஓர்குட் உட்பட பல சேவைகளின் வரிசையில், க்ரோம் அப் லான்சரும் இணைந்துள்ளது.



# எச்ரிசி வெளியிடும் எச்ரிசி 10 கைபேசி

உலகின் தரமான கைபேசிகளை உற்பத்தி செய்யும் எச்ரிசி நிறுவனம், தனது அடுத்த படைப்பான எச்ரிசி 10 எனும் புதிய தொடுதிரைக் கைபேசியை இந்த மாதம் 15ஆம் திகதி வெளியிட முடிவுசெய்துள்ளது.

இந்தக் கைபேசியானது 5.1 அங்குல அளவு, 2560 X 1440 பிக்சல் தீர்மானம் உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், பிரதான நினைவகமாக 4ஜிபி ரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர தலா 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, அண்ட்ரொய்ட் 6 இயங்குதளம் என்பவற்றையும் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சவால்களை

குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதும், நாட்டுக்காக ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களை உரிய முறையில் நிறை வேற்றுவேன்.

புத்தபெருமானும்கூட நிந்தனைகளுக்குள் ளானார். மகாத்மா காந்தி போன்ற சிரேஷ்ட தலைவர்கள் நாட்டுக்காகப் பணி செய்தபோது, பல்வேறு குற்றச்சாட் டுக்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாகினர்.

புதிய அரசின் நிகழ்ச்சித் திட்டங்களில் சமய விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப் பும் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிக் கப்பட்டுள்ளது. அத்தகையதொரு சமூ கத்தைக் கட்டியெழுப்புவதற்குச் சமயத் தாபனங்கள் பலப்படுத்தப்படவேண்டும். பின்தங்கிய விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கும், அங்குள்ள பிக்குகளுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத் திக் கொடுப்பதற்கும் ஒரு விசேட அரச நிதி யத்தை ஆரம்பிக்கவுள்ளேன். இதே போன்று ஏனைய சமயத்தாபனங்களின் அபிவிருத்திக்கும் நான் அர்ப்பணிப்போடு பணியாற்றுவேன் - என்றார். (த-வ-5)

## சமுர்த்தி

மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழி யன் ஆகியோரிடம் முறைப்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளது. அதில் குறித்த முகாமையாளர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்தக் குற்றச்சாட்டு சமுர்த்தி முகாமை யாளருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசா ரணை மேற்கொள்வதற்காக இரண்டு பெண் அதிகாரிகள் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட விசாரணைக் குழு, யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனி னால் நியமிக்கப்பட்டுள்ளது. (த-வ-5-101)

## அதிக

குறித்த சாவு தொடர்பான விசாரணை களைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற் கொண்ட திடீர் இறப்பு விசாரணை அதி காரி திருலோகமூர்த்தி, குறித்த பெண் ணின் உடலில் நீர்த்தன்மை அற்றுப் போனதால் சாவு ஏற்பட்டுள்ளது என உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு நீர்த்தன்மை அற்றுப்போவதற்கு நாட்டில் தற்போது நிலவும் அதிகூடிய வெப்பமும் ஓர் காரணமாகவுள்ளது எனக் குறிப்பிட்ட திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி திருலோக மூர்த்தி, குறித்த பெண்மணி வாழும் பிரதேசம் கடலை அண்டிய மணற் பகுதி என்ப தால் அங்கு அதிகூடிய வெப்ப நிலை நிலவுகின்றது எனவும் கூறினார். (த-வ-101)

## யாழ்.நகரில்

**இந்தக் கவனவீர்ப்பு யாழ். மத்திய பஸ் நிலையத்தில் எதிர் வரும் ஒன்பதாம் திகதி சனிக் கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப் பினர் குறிப்பிட்டுள்ளனர்.**

இது தொடர்பாக அவர்கள் அனுப்பிவைத்துள்ள செய் திக் குறிப்பில் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது:-

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு வழங்கவுள்ள 65 ஆயிரம் இரும்புப் பொருத்து வீட்டுத் திட் டத்தை மாற்றி கல்வீடுகளை வழங்குமாறு கோரியும், திரு கோணமலை சம்பூர் மக் களின் இருப்பையும் எதிர் காலத்தையும் சீர்குலைக்கும் வகையில் அமையவுள்ள அனல் மின்நிலையத் திட் டத்தை நிறுத்தி மாற்றுத் திட் டத்தைச் செயற்படுத்த வலியுறுத்தியும், சுன்னாகம் நிலத்தடி நீரில் கலந்துள்ள கழிவு எண்ணெயால் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தடுப்பதற்கான நடவடிக் கைகளை முன்னெடுக்கக் கோரியும் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற வுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போரி னால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள் குடி யேற்ற அமைச்சினால் வழங்கப்படவுள்ள 65ஆயிரம் பொருத்து வீடுகள் நமது கால நிலைக்கும், சமூக பண்பாட்டுச் சூழலுக் கும் முற்றிலும் பொருத்தமற்றது. மக் களின் சுகாதாரத்துக்கும், ஆரோக்கியத்துக் கும் பொருத்து வீடுகளால் ஏற்படும் பாதிப் புக்களை துறைசார் நிபுணர்களும் சுட்டிக் காட்டி வருகின்றனர். இத்தகைய இரும்புப் பொருத்து வீட்டுத் திட்டத்தை மாற்றி நிரந் தர கல் வீடுகளை அமைத்து வழங்கும் திட் டத்தை முன்னெடுக்க வேண்டும்.

உலக நாடுகள் பலவும் அனல் மின்னுற் பத்திச் செயற்பாட்டை இன்று கைவிட்டு வருகின்றன. இந்த வேளையிலே இயற்கை வளம் நிறைந்த திருகோணம லையின் சம்பூர் பிரதேசத்தில், மக்களின் மீள்குடியேற்றத்தைத் தடுத்து நிலக்கரி மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டத்தை இந்தியாவுடன் இணைந்து இலங்கை அரசு முன்னெடுத்து வரு கின்றது.

இயற்கையின் சமநிலையை மாற்றி, சம்பூர் மக்களின் வாழ்க்கைத்தரத்தை அழித்து, காற்றை மாசுபடுத்தும் இந்த மின்நிலையத்திட்டம் நிறுத்தப்படுதல் வேண்டும்.

நீண்ட காலமாகக் கவனிப்பாரற்ற நிலை யில் இருக்கும் சுன்னாகமும் அதைச் சூழ உள்ள நான்கு பிரதேச செயலக பிரிவு களிலும் உள்ள கிணறுகளில் கலந்துள்ள கழிவு எண்ணெய் மற்றும் ஆபத்தான பார உலோகங்கள் தொடர்பான பிரச் சினைக்குத் தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவம் ஆகியவற்றை உரைப் பதற்காக நடாத்தப்படவுள்ள இந்த கவன வீர்ப்பில் சமூகமட்ட அமைப்புக்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும், சமூக அக்கறை கொண்ட மக்கள் சார்பு அர சியல் செயற்பாட்டாளர்களையும், பிரச் சினைகளை எதிர்நோக்கி நிற்கும் மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூகநீதிக்கான வெகுஜன அமைப்புபினர் கேட்டுள்ளனர். (த-வ-ரி5)

## வெடிகள்

முறைப்பாடுகள் பொதுமக்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தன. இதற்கமைய கடந்த வருட இறுதிப் பகுதி யில் கொழும்பில் இருந்து வருகை தந்த மதுவரித் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர் பில் நேரில் ஆராய்ந்திருந்தனர். இதன் போது மேற்படி மதுபான நிலையம் உள் பட 10 மதுபான நிலையங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட் டிருந்தன.

இதன் பின்னர் பருத்தித்துறை பிரதான வீதி யில் கோயிலுக்கு அருகில் அமைந்தி ருந்த மேற்படி மதுபான நிலையத்துக்கான அனுமதி கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. கடந்த முதலாம் திகதி மேற்படி மதுபான நிலையம் மூடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொழும்புத் தலைமைய மதுவரித் திணைக்கள ஆணையாளரி னால், மாவட்டச் செயலகத்துக்கும் பிரதேச செயலாளருக்கும் கடிதம் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. அதில், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் பணிப்புக்கு அமைய 2016 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரை இரண்டு மாத காலத்துக்கு அனுமதி வழங்கப்படுவதாகக் குறிப் பிடப்பட்டிருந்தது.

இந்தக் கடித்துக்கு அமைவாக நேற்றைய தினம் மதுபான விற்பனை நிலையம் மீளவும் திறக்கப்பட்டது. இதன்போது சுமார் 10 நிமிடங்கள் வரையில் தொடர்ச்சி யாக வெடி கொழுத்திப் பெரும் ஆரவாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங் களை எதிர்நோக்கினர். (த-வ-5-101)

## நிரந்தர

வடக்கு மாகாண முதலமைச்சர் உள் ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு இந்தக் காணியை மீட்டுத் தருமாறு கோரிக்கை விடுத்தும், இது வரை காணி மீட்பதற்கான நட வடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை என்று காணி உரிமையாளர்கள் தெரி வித்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு வலிகாமம் இடப்பெயர்வின் பின்னர், மேற்படி காணியில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர். 5 குடும்பங்களுக்குச் சொந்தமான 16 பரப்பில் இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு இந்தக் காணியை இராணுவத் தின் சிங்க ரெஜிமென்ட்டுக்குச் சுவீகரிப்ப தற்காக நில அளவை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது. எனினும் காணி உரிமையாளர்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டது. இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம், தமது காணியை இராணுவத்தி னரின் பிடியிலிருந்து விடுவிக்குமாறு கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன், சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாய கன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் ஆகியோருக்குக் கடிதம் மூலமாக காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்குப் பிரதமர் செயலகம் மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை இது தொடர் பிலான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளன. மீள்குடியேற்ற அமைச் சர் டி.எம்.சுவாமிநாதன், பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சரை இது தொடர்பில் நட வடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சு, இந்த விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராணுவத் தலைமையகத்தைக் கோரியி ருந்தது.

இருப்பினும் இதுவரை காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படவில்லை. அத்துடன், குறித்த காணி யைச் சுவீகரிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (த-வ-5-ரி5)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கதிர்காமதேவன்

( Mercantile Security Service (Pvt) Ltd.



வீமன்காமம் தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும் மாட்டீன் வீதியை வசிப்பிடமாக வும் கொண்ட சுப்பிரமணியம் கதிர்காமதேவன் 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென் றவர்களான சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சவிரிமுத்து - திரேசா தம்பதியினரின் அன்பு மருமகனும் அனீரோ நீரஜா (ஆசிரியை - யா/விக்ரோறியாக் கல்லூரி) காலஞ்சென்ற ஜெனீரோ, நிரோஜன், லொயிட் நிதர்சன்(Medical Representative) ஆகியோரின் அன்புத் தந்தையும் மதுரநாத்(Engineering Manager, Abans Electrical PLC) அவர்களின் அன்பு மாமனாரும் றொசேல் தபிஷாவின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற முத்துக்குமார், நடராஜா, சாவித்திரிதேவி மற்றும் கோபாலகிருஷ்ணன், புஸ்பராணி, சற்குணபாலன், சண்முகராசா, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.04.2016) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் இருந்து புனித அடைக்கல அன்னை ஆலயத்திற்கு பி.ப4.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கெஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**61, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை சிவராசா

பிறப்பு
26
.
04
.
1936



இறப்பு
03
.
04
.
2016

யாழ். பருத்தித்துறை பூதராயர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், கந்த உடையார் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவராசா 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் திரு. திருமதி கந்தசாமி தம்பதியரின் அன்பு மருமகனும் அபிராமேஸ்வரியின் அன்புக் கணவரும் அனுசியாதேவி(நோர்வே), அனந்தராஜன், அருந்தராஜன்(நோர்வே), அருள் ராஜன் (கனடா), அமுதராஜன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்றவர்களான இராசம்மா, சாவித்திரி, வள்ளியம்மா, சிங்காரவேலன், திருநாவுக்கரசு, இராமச்சந்திரன், சேதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலநாதன் (நோர்வே), ஜெயகௌரி, விஜயலட்சுமி, நளினி, சந்திரிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் சைலஜா, சகுந்தலா, சர்மிளா, சியாமளா, ஊர்மிளா, விஜய், திவ்வியன், அனோசன், சரண்யா, ஆரங்கா, அருண்யா, துவாரகா, அவின், அகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவநதீப், மிர்துளா, திவ்வியரூபன், ஆர்த்தி, சிவப்பிரதா, வேல்ராஜ், திவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**ஆனந்தராஜா( மகன்), குலநாதன்(மருமகன்),**

(12.18)

**077 777 0481**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

# Spoken English

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Tue, Thu 8.30 p.m. Sat, Sun 2.00 p.m. Mon, Wed 4.30 p.m. | Tue, Thu 4.30 p.m. Sat, Sun 2.00 p.m. | Tue, Thu 10.30a.m. | Mon, Wed, Fri 2.00 p.m. | Sat, Sun 10.30a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

DMI COMPUTER EDUCATION

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
**IELTS** IELTS Life Skills (A1,B1)

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |

# ABI யின்

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்..



இன்பத்தின் தருணங்கள்
எங்கெங்கு உண்டோ
அபியின் ஆடை வகைகள்
அங்கங்கு உண்டு.

உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப
**20% முதல் 50%**
வரையான விசேட
விலைக்கழிவுகள்

சில ஆடைகளுக்கு
ஒன்று வாங்கினால்
இன்னொன்று இலவசம்

இச் சலுகை இன்று
**05.04.2016 - 14.04.2016 வரை மட்டுமே**

"எதை எடுப்பது எதை விடுவது என்ற
சந்தோசத்தில் நீங்கள் திணறப்போவது நிச்சயம்"


அபியின் வாடிக்கையாளர் அட்டைக்கு 3% விசேட விலைக்கழிவு
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

இந்தப் புத்தாண்டுக்கு முன்னதாகவே வந்து உங்கள் உள்ளத்தை கொள்ளை கொண்ட ஆடைகளை சிறப்புத் தள்ளுபடி விலையில் அள்ளிச் செல்லுங்கள்.

ABI Fashion World

112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 3738

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சிவக்கொழுந்து
**செல்வமாணிக்கம்**

திதி: திரயோதசி (05.04.2016)

**தோற்றம்** 01.03.1932
**மறைவு** 18.03.2015

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்த
எம் பாசமிகு தந்தையே!
இனிய மொழி பேசி எமக்காக
ஓயாது உழைத்த ஒளிவிளக்கே
உமைப்பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டு அகலாது.

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு இன்று (05.04.2016) செவ்வாய்க்கிழமை இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள
பணிப்பாளர் **திருமதி நளாயினி இன்பராஜ்**
அவர்களின் அன்பு மாமனார்

**வின்சென்ற் அந்தோனிலெம்பேட்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

**சமூக சேவை உத்தியோகத்தர்,அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) நலன்புரிசங்கம், யாழ்மாவட்டம்.**

## 3 ஆவது ஆண்டு நினைவு தினம்



அமரர்
**வேலன்
தெய்வேந்திரம்**

தோற்றம்
09.02.1959

மறைவு
08.04.2013

திதி: திரயோதசி

எம் வாழ்வில் ஒளிதந்து
எமையெல்லாம் வாழ்விக்க...
சீர்தந்து பார்போற்ற வைத்தீரே! இன்று
சிந்தை நொந்தழுகின்றோம் நாமிங்கு
ஒளியிழந்து ஆண்டுகள் மூன்றானதுவே!
குலவிளக்காய் ஒளிதரவே வாருமையா...

"கந்தன் இல்லம்" அல்வாய் மேற்கு.
077 926 5941
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

06.04.2016



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 07 |
| 05 | 03 |
| 1969 | 2016 |

கடந்த 07.03.2016 திங்கட்கிழமை இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் **சிவராசா கேசவன்**
(உத்தியோகத்தர்- மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம் மேல் மாகாணம்)
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (06.04.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்த கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

முத்தட்டு மட வீதி,
கோண்டாவில் மேற்கு.
குடும்பத்தினர்.

## கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் முல்லைத்தீவு

## லொறி ஏல விற்பனை

கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான NPLA - 5268 இலக்கமுடைய லொறி மூடிய கேள்வி கோரல் முறையில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| | |
|---|---|
| மீளளிக்கப்படக்கூடிய தொகை | 14,500.00 |
| மீளளிக்கப்பட முடியாத தொகை | 1000.00 |

குறித்த வாகன விற்பனை தொடர்பில் மூடிய கேள்வி கோரல் விண்ணப்பப்படிவத்தினை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பப் படிவத்தினை மூடிய தபால் உறையில் இட்டு அத்தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NPLA - 5268 லொறி ஏல விற்பனை" எனக் குறிப்பிட்டு 15.04.2016ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் சங்க கடமை நேரத்தில் தண்ணீரூற்று, நெடுங்கேணி பிரதான வீதியில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சிய வளாகத்தில் பார்வையிடலாம்.

**இரத்தினராசா மயூரன்**
தலைவர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு

## இந்திய மீனவர்களை விடுவிக்கிறது அரசு

யாழ்ப்பாணம்,ஏப். 5
இலங்கைச் சிறைகளில் உள்ள 96 இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கான உத்தரவு நேற்றைய தினம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட வேளையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கையின் சிறைகளில் உள்ள 96 இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கான உத்தரவே நேற்றைய தினம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் குறித்த உத்தரவின் பிரதிகள் இன்றைய தினம் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களப் பிரதிப் பணிப்பாளர்களுக்குஅனுப்பப்பட்டு, குறித்த மீனவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ -101)

## 5 ஆண்டுகளில் 1, 200 இந்தியர்கள் சிறுநீரக தானம்

கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 1,200 இந்தியர்கள் இலங்கையில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் சிறுநீரக தானம் செய்திருப்பதாக கொழும்பு நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் சட்டவிரோத சிறுநீரக வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பு நகரில் கைதுசெய்யப்பட்ட இந்தியர்கள் தரப்பு வழக்கறிஞர் லான்டயஸ் நீதிமன்றத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறார்.
இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 8 இந்தியர்களில் 6 பேரின் சிறுநீரகங்கள் நீக்கப்பட்டுள்ளதை மருத்துவ பரிசோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளதாக கடந்த வாரம் நீதி மன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.
இந்த நிலையில், இந்த ஆறு பேரும் இலங்கையில்தமது சிறுநீரகங்களை அன்பளிப்பு செய்ததாக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீராக அமைக்கப்படாத வான்களால் வளலாய் மீனவர்கள் அசௌகரியம்

## புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

உரிய முறையில் மீளமைத்துக் கொடுக்கப்படாத வான் பகுதியால் மீன்பிடிக்கச் செல்வதில் அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றோம் என்று வளலாய் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன்-

சேவாலங்கா நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஐந்து வான்களும் சேதமடைந்துள்ளன. இவற்றை மீளமைத்துத் தருமாறு அவர்களுக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வளலாய் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு அமைத்துக் கொடுக்கப்பட்ட வான், உரிய முறையில் மீள்புனரமைப்புச் செய்யப்படவில்லை என வளலாய் மீனவர்கள் அதிகாரிகளைக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

மீள்குடியமர்வின் பின்னர் வளலாய் பகுதிக்கு ஐந்து வான்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. பின்னர் டிசெம்பர் மாதம் இடம்பெற்ற கடும் மழையால் முற்றாகச் சேதமடைந்த நிலையில் மூன்று மாதம் கழித்து மீண்டும் சேவா லங்கா நிறுவனத்தால் கடந்த பெப்ரவரி மாதம் மீண்டும் இயந்திரங்கள் மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்டன. சேவா லங்கா தன்னார்வ நிறுவனம் மீள்கட்டுமானம் செய்யும் போது மீனவர்கள் வழங்கிய அறிவுறுத்தலை பின்பற்றாது அரைகுறையாகப் பணிகளை மேற்கொண்டுள்ளனர் என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அமைத்துத் தரப்பட்ட வான் தங்களின் மீன்பிடிப் படகுகள் உள்ளே வருவதற்கும், வெளியில் செல்வதற்கும் இயலாதவாறு அகலம் குறைந்தும், ஆழம் குறைந்தும் காணப்படுகின்றது என்றும் மீனவர்கள் கூறுகின்றனர்.

முழங்கால் அளவு ஆழமே தோண்டப்பட்டு அமைத்துள்ள இந்த வானால் படகின் இயந்திரங்கள் கற்பாறையில் மோதி சேதமடைகின்றன. இது தொடர்பில் உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தும் இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து கடந்த வருடம் விடுவிக்கப்பட்ட இந்தப் பகுதியில் 68 மீனவக் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வாழ்ந்து வருகின்றன.

அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டும், உரிய வகையில் தொழில் செய்ய முடியதாக அளவுக்கு இங்கு அமைக்கப்பட்ட வான் தடையாக உள்ளது என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அரச அதிபர் உரிய நடவடிக்கை எடுத்து, கடலின் ஆழத்தை அதிகப்படுத்தி மீளவும் ஒரு முறை வான் அமைத்துத்தர வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலர்-

சேவாலங்கா நிறுவனத்தால் ஐந்து வான்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. தற்போது ஐந்தும் சேதமடைந்துள்ளன.

பாவனைக்கு உதவாத வகையில் உள்ள இந்த வான்களை மீண்டும் புனரமைத்துத் தரும்படி பலமுறை கடிதம் மூலமாகவும், அலைபேசியூடாகவும் தெரியப்படுத்தி உள்ளேன். இதற்கான அவர்களின் பதில் உங்களுடைய கோரிக்கையை நிறுவனத்தின் உயர்மட்டத்துக்கு அனுப்பியுள்ளோம் என்பதாகவே உள்ளது. முடிவுகள் எவையும் உறுதியாக ஏற்படவில்லை.

வான் அமைக்கும் போது நிறுவனத்தினர் அருகில் இருந்த முருங்கைக் கற்களையும் பயன்படுத்தி அமைத்துள்ளனர். கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களில் மழைகாரணமாக அரிப்புக்கள் ஏற்பட்டு வான்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன- என்றார்.

இந்த விடயம் தொடர்பாக சேவாலங்கா நிறுவன யாழ். பிராந்தியப் பொறுப்பாளர் நகுலேந்திரத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது-

சேவாலங்கா நிறுவனத்தால் வான்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இவை கடந்த டிசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

எனினும் கடந்த பெப்ரவரி மாதத்தில் மீன்பிடித் தொழில் புரியும் மக்களின் நலன்கருதி நான்கு வான் பகுதிகளில் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஆழம் போதாத காரணத்தால் மீன்பிடிப் படகுகள் பாதிக்கப்படுகின்றன எனின் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வோம். வான்களைப் புனரமைப்பதற்கான கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளவுள்ளோம் - என்றார். (ற-ஐ-ரி5,107)

### யாழ்ப்பாணத்துக்கு

நேற்று மதியம் வல்லைச் சந்தியில் வைத்து மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஹெரோயின் போதைப்பொருள் பைக்கெற்றுகளை யாழ்ப்பாணம் நோக்கி கடத்த முயன்ற குற்றச்சாட்டில் தும்பளை - நெல்லண்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதோடு, அவரிடமிருந்து கருவாட்டுப் பைகளுக்குள் வைத்துக் கடத்தப்பட்ட 185 கிராம் ஹெரோயின் பைக்கெற்றுக்களை மீட்டுள்ளதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி யு.சிறிமான்ன தெரிவித்தார்.

சுமார் 185 கிராம் ஹெரோயின் பைக்கெற்றுக்கள் மற்றும் நவீன ரக மோட்டார் சைக்கிள் ஒன்றும் எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் தும்பளை-நெல்லண்டைப் பகுதியைச் சேர்ந்த செல்வராசா செல்வநிசாந்தன் என்ற சந்தேகநபரே கைது செய்யப்பட்டுள்ளார் என மதுவரித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மதுவரித் திணைக்களத்தின் குற்றப்பிரிவு ஆணையாளர் மல்லவ மற்றும் ஆணையாளர் புஸ்பகுமார ஆகியோரின் ஆலோசனையின் கீழ், பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி யு.சிறிமான்ன தலைமையில் அதிகாரிகளான தசநாயக்க ,சேனநாயக்க, ரவிச்சந்திரன், மகிழ்ராஜன், தேவகருணன், வசிகரன், கமலன், சுகிர்தராஜன் ஆகியோரை உள்ளடக்கிய குழுவே குறித்த ஹெரோயின் கடத்தலை முறியடித்துள்ளது.

வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியூடாக சிவப்பு நிற பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்துக்கு ஹெரோயின் கடத்தப்படுவதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இந்த நிலையில் குறித்த மோட்டார் சைக்கிளைத் தாம் வல்லையில் வைத்து வழிமறித்து சோதனையிட்டபோதே, கருவாட்டுப் பைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 185 கிராம் ஹெரோயின் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், விசாரணையின் பின் அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் எனவும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

வடமராட்சியில் கஞ்சாக் கடத்தல் அதிகரித்து அதிகளவான கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டு வரும் நிலையில் அண்மைக்காலமாக ஹெரோயின் உயிர்கொல்லி போதைப்பொருள் சிக்கி வருவது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (த-வ-109-108)

### மன்னார்

எனினும் சட்ட வைத்திய அதிகாரி வருகைதராததால் கிணற்றைத்தோண்டும்பணிகள்ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அதிகாரிகளுடனான சுந்திப்பு ஒன்று நீதிவான் தலைமையில் இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் 29 ஆம் திகதி மற்றொரு கலந்துரையாடலை நடத்தி, அடுத்த கட்ட நடவடிக்கை தொடரவுள்ளது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் - திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட கிணறு தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த நிலையில் குறித்த கிணறு மன்னார் நீதிவான் முன்னிலையில் தோண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக அனைவரும் குறித்த கிணறு உள்ள பகுதிக்குச் சென்றிருந்தனர். அங்கு கிணற்றைச் சுற்றி மூடியுள்ள மண் படை வெட்டி அகற்றப்பட்டது. சுமார் 3 மணித்தியாலங்கள் அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக, அரச தரப்பினரைச் சேர்ந்த 13 அதிகாரிகள் குறித்த மனிதப் புதைகுழிப் பகுதிக்கு வருகை தந்திருந்தனர். எனினும் சட்ட வைத்திய அதிகாரி, தவிர்க்க முடியாத காரணத்தினால் அங்கு செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் அரச பகுப்பாய்வாளர் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், குண்டுவெடிப்புப் பிரிவினர், மன்னார் பொலிஸார் உட்பட திணைக்கள அதிகாரிகளும் சட்டத்தரணிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில் பதில் சட்ட வைத்திய அதிகாரி கலந்துகொண்டிருந்தார். இதன்போது குறித்த வழக்கு தொடர்பில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஒரு கலந்துரையாடல் நடத்துவது என்றும், அதன்பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்ற குறித்த மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட கிணறு தோண்டும் நடவடிக்கைகள் இடம்பெற்றபோது காணாமற்போனவர்களின் குடும்ப உறவுகள் சார்பாக சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சன்,சட்டத்தரணி ரனிதா ஞானராஜா மற்றும் மன்னார் சட்டத்தரணிகள் சங்கம் சார்பாக சட்டத்தரணிகளான எஸ்.பிரிமூஸ் சிராய்வா, ஜெப்நேசன் லோகு, துசித் ஜோன்தாசன் ஆகியோர் சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4,56)

## மரண அறிவித்தல்கள்

### சிவகெங்கை நகுலேஸ்

பிறப்பு 03.05.1940
இறப்பு 03.04.2016



கல்வந்தாழ்வு காரைநகரைப் பிறப்பிடமாகவும், 3ஆம் கட்டை ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகெங்கை நகுலேஸ் 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலன்-செல்வி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நகுலேஸ் அவர்களின் அன்பு மனைவியும் திலகவதி,சுபாகரன்,அன்னலச்சுமி,சுதா,சுவேந்திரராஜா, ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எரிக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை
ஆனைக்கோட்டை,
பழம்றோட்..

தகவல்:
குடும்பத்தினர்.
0712954718

### திருமதி
### தங்கம்மா நாகரத்தினம்



நாவலடி, கோப்பாய் மத்தி கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா நாகரத்தினம் நேற்று (04.04.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் (அதிபர்) அன்பு மனைவியும், தங்கரத்தினம், வீரசிங்கம் மற்றும் காலஞ்சென்ற சிவபாதம், சிவபாக்கியம், ஜெயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியதாசன் (குமரன் சுற்றுலா விடுதி-யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (பிரான்ஸ்), சத்தியபாலன் (ப.நோ.கூ.ச கிளை முகாமையாளர் - நீர்வேலி), சாந்தினி (கொழும்பு), வதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்கி னேஸ்வரன், வாகவன், தவமணி (யா/ஆனைக் கோட்டை றோ.க.த.க.பாடசாலை ஆசிரியை), செல்வராணி, றஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும்,தர்ஷிகா,கௌஷிகா, நிஷாந் திகா, டிலக்ஷன், டிலோஷன், டர்ஷன், அனுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(எசி/113)
(11,17,19)

தகவல்:
குடும்பத்தினர்.
077 079 0454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 5

**அரியாலை கரப்பந்தாட்டம்**

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கச்சர் வொலிகிங்ஸ் அணியை எதிர்த்து சங்கானை யுத் அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியுடன் மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து நியுவொரியஸ் அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நாமகள் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**அல் ஹிஜிரா வி.கழகத் தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 786 விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்டன் ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**யாழ். கூடைப்பந்தாட்டம்**

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்



டுப் பிரிவினர் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறவுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச அணியும் 4.30 மணிக்கு உடுவில் பிரதேச அணியை எதிர்த்து வேலணை பிரதேச அணியும் மோதவுள்ளன. வேம்படி மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுவில் பிரதேச அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச அணியும் 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் சங்கானை பிரதேச அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச அணியும் மோதவுள்ளன.

**இளைஞர் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிறி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-23-108)





# பொம்மர்ஸ், மகாத்மா வி.கழகங்கள் முன்னேறின இளைஞரின் கால்பந்தில்

கரணவாய், ஏப். 5

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன.

**பொம்மர்ஸ் - கண்ணகி**

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் கண்ணகி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே தனது கோல் கணக்கை பிலக்சன் மூலம் பதிவு செய்தது கண்ணகி. ஆரம்பத்தில் சிறிது தடுமாற்றம் கண்டாலும் சரிவில் இருந்து மீண்ட பொம்மர்ஸ் அணி 16 ஆவது, 21 ஆவது நிமிடங்களில் முறையே பவித்திரன், சாரங்கன் உதவியால் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாத நிலையில் வெற்றிபெற்றது பொம்மர்ஸ்.

**சரஸ்வதி -மகாத்மா**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மகாத்மா அணியின் முன்கள வீரர்களான யோகேந்திரன் 15 ஆவது நிமிடத்திலும் மைக்கல் 22ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்து அசத்த முதல் பாதியின் முடிவில் அந்த அணி 2:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 10ஆவது நிமிடத்தில் சரஸ்வதி விளையாட்டுக்கழக வீரர் நிருபன் பதில் கோலைப் பதிவுசெய்தாலும் அடுத்த சில நிமிடங்களில் மகாத்மாவின் ராஜ்தீப் கோலொன்றைப் பதிவு செய்ய அந்த அணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. இறுதியில் 3:1 என்று சாவற்கட்டு மகாத்மா வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)

## அரியாலை கரப்பந்தாட்டத்தின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 5

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

இரவு 7 மணிக்கு இடம் பெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் கச்சாய் வொலிகிங்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் கச்சாய் வொலிகிங்ஸ் அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சங்காணைஐக்கிய அணியை எதிர்த்து நீர் வேலி காமாட்சி அம்பாள் அணி மோதிக் கொண்டது. இதில் நீர்வேலி காமட்சி அம்பாள் அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் அணி மோதிக் கொண்டது. இதில் புத்தூர்கலைமதிஅணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இந்தியாவின் பயிற்சியாளர் ராகுல் ராவிட்?

இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக ராகுல் ராவிட் நியமிக்கப்பட வாய்ப்புக்கள் இருப்பதாக நம்பப்படுகிறது.

புதிய பயிற்சியாளர் இல்லாமலே அந்த அணி கடந்த ஒரு வருடமாகச் செயற்பட்டு வருகிறது. இதையடுத்து புதிய பயிற்சியாளரை நியமிக்கும் பணியில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை களமிறங்கியுள்ளது. ராவிட்டை பயிற்சியாளராக நியமிக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. (ம)

# குறிஞ்சிக் குமரன், யூனியன் அணிகள் நாமகளின் கால்பந்தாட்டத்தில் வென்றன

யாழ்ப்பாணம், ஏப். 5

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் குறிஞ்சிக் குமரன், யூனியன் வி.கழகங்கள் வெற்றிபெற்றன.

நாமகள் வி.கழக மைதானத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதய ராஜா அணி மோதிக் கொண்டது. இதில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி சில்வேஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில்



ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை எம்மை அவமதித்தது ஜெர்சி கூட இல்லாமலேயே இந்தியா வந்தோம்

## கிண்ணம் வென்ற பின்னர் கண் கலங்கினார் சமி

ரி-20 உலகக்கிண்ணம் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் தலைவரான சமி, தமக்கான ஜெர்சியைக்கூட மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஒழுங்குபடுத்தித் தரவில்லை என்று குறிப்பிட்டுள்ளதுடன் வேறுசில கருத்துக்களையும் குறித்த கட்டுப்பாட்டுச்சபைக்கு எதிராக முன்வைத்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் வீரர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்த வண்ணமே உள்ளன. இந்த உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியதன் பிற்பாடு அவர்களுக்கு இடையில் சமரசம் ஏற்படும் என்று எதிர்பார்த்திருக்கையில்; வீரர்களைப் பாராட்டாது மௌனம் சாதித்து அனைவரினதும் கோபத்துக்கு ஆளாகியுள்ளது தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

ஆட்டம் முடிந்ததன் பிற்பாடு சமி கருத்துத் தெரிவிக்கையில்:- நான் கடவுளுக்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர் இல்லையென்றால் எதுவும் சாத்தியமாகியிருக்காது. இந்த வெற்றி மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. இந்த வெற்றியை நாங்கள் நீண்ட நாள்களுக்குக் கொண்டாடவே செய்வோம். 15 வீரர்களும் மிகவும் திறமையானவர்கள், கெயிலை மட்டுமே நம்பி முழு அணியுமே இல்லை என்று கூறியிருந்தேன். இப்போது சொல்லுங்கள் எனது கருத்தில் தவறுள்ளதா. எங்களுக்கு எவரும் வாய்ப்பளிக்கவில்லை. ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒவ்வொருவர் பொறுப்பைச் சுமந்தனர். தனது அறிமுக உலகக் கிண்ணத்திலேயே பிரீத் வைட் இப்படி ஆடுவது உண்மையில் புல்லரிக்கச் செய்கிறது.

நல்ல அமைப்பும் வளர்ச்சியை நோக்கிய முன்னெடுப்பும் இருக்குமேயானால் ஒரு நாள், டெஸ்ட் ஆட்டங்களிலும் கூட தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும் என்று நான் நம்புகிறேன். இந்தத் தொடரில் நாங்கள் விளையாடுவோமா என்று பலரும் பேசினர். எங்களுக்கு நிறைய பிரச்சினைகள் இருந்தன. எங்கள் கட்டுப்பாட்டுச்சபையே எங்களை மதிக்கவில்லை என்பதாகவே உணர்ந்தோம். மார்க் நிக்கலஸ் எங்கள் அணியை மூளையில்லாதவர்களின் அணி என்று கேலி செய்தார். தொடருக்கு முன்பாக இத்தகைய விடயங்கள் எங்களை நாங்கள் ஒருங்கிணைத்துக் கொள்ள உதவின. உண்மையில் இந்த 15 வீரர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவோ எங்களைப் பற்றிப் பேசப்பட்டது. இந்த எதிர்மறை விடயங்களைக் கடந்து வந்து இத்தகைய கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப் படுத்தியது. அதுவும் உணர்வு மிக்க ரசிகர்கள் முன்னிலையில் வெளிப்படுத்தியது அருமையிலும் அருமை.

பயிற்சியாளர் பில் சிம்மன்ஸுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய மேலாளர் ரால் லூயிஸ், அவர் எங்களுக்காகப் பட்ட கஷ்டம் அதிகம். எங்களுக்கு ஜெர்சி கூட இல்லை. அதை மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஒழுங்கமைத்துத் தரவில்லை. அவர் டுபாயில் நாங்கள் பயிற்சியில் ஈடுபட்டது முதல் எங்களுக்காகப் பாடுபட்டார். அங்கிருந்து கொல்கத்தா வந்தார். எங்களுக்கு இந்தச் சீருடையைப் பெற்றுத்தர அவர்



பட்டபாடு எங்களுக்குத்தான் தெரியும், அவருக்கு எனது நன்றிகள். எங்களது இந்த வெற்றியை மேற்கிந்தியத் தீவுகளின் ரசிகர்கள் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறோம்.

பல பகுதிகளிலும் இருந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. ஆனால் மே. இ.தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இருந்து இன்னும் கூட (நேற்று முன்தினம் நள்ளிரவு வரை) வாழ்த்துச் செய்தி வரவில்லை. இது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. இதே அணி எப்போது மீண்டும் இணையும் என்று தெரியாது. எங்களை ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தேர்வு செய்யமாட்டார்கள். மீண்டும் ரி-20 எப்போது விளையாடுவோம் என்று தெரியவில்லை. எனவே இந்த வெற்றிக்காக என் அணிக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கிந்திய தீவுகள்தான் சம்பியன் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே என்றார் உருக்கமாக. (ம)




## ரியல் மட்ரிட்டிடம் வீழ்ந்தது பார்சிலோனா

லா லிகா தொடரில் நேற்று நடைபெற்ற பார்சிலோனா, ரியல் மட்ரிட் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனாவின் தொடர்வெற்றி முடிவுக்கு வந்துள்ளது.

ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களில் ரியல் மட்ரிட், பார்சிலோனா அணிகள் பரம எதிரிகளாகக் கணிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இந்த ஆட்டம் பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டது.

கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 56ஆவது நிமிடத்தில் பைகியூ பார்சிலோனா சார்பாக முதல் கோலைப் பதிவு செய்த போதிலும், ரியல் மட்ரிட் அணியின் வீரர்களான பென்சிமா 62 ஆவது நிமிடத்திலும், றொனால்டோ 85ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது ரியல் மட்ரிட் அணி. (ம)

## தடுமாற்ற ஆட்டத்துக்காக வருந்துகிறார் சிகர் தவான்

ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் சிறப்பாகச் செயற்பட முடியாமல் போனதற்கு இந்திய அணியின் தொடக்க வீரர் சிகர் தவான் வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஆசியக்கிண்ணத் தொடரில் அசத்திய தவான், ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்படவில்லை. இந்த தொடரில் மொத்தமாகவே 41 ஓட்டங்களே எடுத்தார். இதனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் அவர் அதிரடியாக நீக்கப்பட்டார். இதனால் விரக்தியடைந்த தவான் டுவிற்றரில் - எனக்கு ஏதோ பிரச்சினை இருக்கிறது என்று நினைக்கிறேன். நான்நினைத்தது போன்று எனதுசெயற்பாடுஅமையவில்லை ஆனால், சிறந்த ஒரு வீரராக அணிக்கு மீண்டும் வருவேன். எனது தவறுகளைத் திருத்திக் கொண்டு சிறந்த ஒரு கிரிக்கெட் வீரராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்-என்று பதிவிட்டுள்ளார். (ம)

## பதவி விலகிய அப்ரிடி



பாகிஸ்தான் அணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிய அப்ரிடி, ஒரு வீரராக அணியில் தொடர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தான் அணிக்கு அப்ரிடி தலைமை தாங்கி வந்தார். இவரது தலைமையிலேயே அந்த அணி பெரும் விமர்சனங்களைச் சந்தித்தது. அப்ரிடி பதவி விலக வேண்டும் என்று அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்ட நிலையில் தற்பொழுது அவர் பதிவி விலகுவதாக அறிவித்துள்ளார். இந்த வருடத்தின் ரி-20 உலகக்கிண்ணத் தொடருடன் அவர் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவர் ஒரு வீரராக அணியில் தொடர விருப்பம் தெரிவித்துள்ளார். இருப்பினும் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அடுத்த கூட்டத்திலேயே அவர் அணியில் தொடருவதா அல்லது இல்லையா? என்று முடிவு செய்யப்படும். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் வென்றார் அசரென்கா



மியாமி ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீராங்கனையான அசரென்கா கிண்ணம் வென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், அசரென்காவை எதிர்த்து மோதினார் 19ஆம் நிலை வீராங்கனையான ஸ்வெட்லெனா குஸ்நெட்சோவா. முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய அசரென்கா, தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைப்படுத்தி இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கினார். இதற்கு முன்னர், 2009, 2011ஆம் ஆண்டுகளில் மியாமி கிண்ணத்தை இவர் ஏற்கனவே கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

# இறுதிப்பந்துப்பரிமாற்றத்துக்காக வருத்தம் தெரிவிக்கும் ஸ்டோக்ஸ்



ரி-20 உலகக்கிண்ணத்தை இங்கிலாந்து அணி கைப்பற்றப்போகிறது என்று எதிர்பார்த்திருக்கையில், ஸ்டோக்ஸ் வீசிய இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் நான்கு சிக்சர்களை தொடர்ச்சியாகக் கொடுத்து அந்த அணி தோல்வியடைய முக்கிய காரணமாக இருந்தார். ஒரு பந்தை இவர் ஒழுங்காக வீசியிருந்தால் தீவுகளின் ஆட்டத்தில் தடுமாற்றம் ஏற்பட்டிருக்க வாய்ப்புக்கள் இருந்திருக்கும். இந்த நிலையில் கிண்ணம் கைநழுவிச் சென்றமை தனக்கு மிகுந்த ஏமாற்றம் தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - கடைசிப் பந்துப்பரிமாற்றம் எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. ஆனாலும் அனைவரும் எனக்குப் பெரும் ஆதரவு அளித்து வருகிறார்கள். எனவே எனது நாட்டுக்காக உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் விளையாடியதை பெருமையாக கருதுகிறேன் - என்று கூறியுள்ளார்.

(ம)

A/L பொருளியல்
வினாவிடை 5+
சர்வதேசப் பொருளியல்
விலை 250/-
2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறவைத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர்:
வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

ஆசிரியர் தேவை
யாழ் நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு தரம் 6,7,8 வகுப்புகளுக்கு விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய அனுபவமும் திறமையும் உள்ள ஆசிரியர் உடன் தேவை.
தொடர்பு: 077 459 8440

# கோக்லியின் தலைமைத்துவத்தில் ஐ.சி.சியின் கனவு அணி அறிவிப்பு



ரி-20 உலகக்கிண்ணத் தொடர் முடிந்ததன் பிற்பாடு சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (ஐ.சி.சி.) ஒவ்வொரு அணியிலும் இருந்து சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து கனவு அணியொன்றை அறிவித்துள்ளது. இந்த அணிக்கு விராட் கோக்லி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை அணியில் இருந்து எவருமே இடம்பெறவில்லை.

ஐ.சி.சியின் கனவு அணி (துடுப்பாட்ட வரிசையின் படி) றோய் (இங்கிலாந்து), குயின்டன் டி ஹொக் (தென்னாபிரிக்கா), விராட் கோக்லி (இந்தியா), ரூட் (இங்கிலாந்து), பட்லர் (இங்கிலாந்து), வற்சன் (ஆஸ்திரேலியா), ரசல் (மேற்கிந்தியத்தீவுகள்), சான்நெர் (நியூசிலாந்து), வில்லி (இங்கிலாந்து), பத்ரி (மேற்கிந்தியத் தீவுகள்), நெக்ரா (இந்தியா), 12 ஆவது வீரராக ரகுமான் (பங்களாதேஷ்).

(ம)

Upgrade your
qualifaction with us

April intake
16.04.2016
BTEC HND
where personal attention leads to professional achievement
SOFTWARE ENGINEERING
Leads to BSc
071 777 5 666
மேலதிக விபரங்களுக்கு 021 4 900 900
பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

# கனவு மகளிர் அணி அறிவிப்பு



சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது கனவு மகளிர் அணியை அறிவித்துள்ளது. இந்த அணிக்கு மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவி ரெய்லர் தலைமை தாங்குகிறார். இந்த அணியில் இலங்கை, இந்திய வீராங்கனைகள் எவரும் இடம்பெறவில்லை.

அணி விவரம் (துடுப்பாட்ட வரிசையின் படி ) பேடிஸ் (நியூசிலாந்து), எட்வாட்ஸ் (இங்கிலாந்து), லன்னிங் (ஆஸ்திரேலியா), ரெயிலர் (மேற்கிந்தியத் தீவுகள்), டிவைன் (நியூசிலாந்து), பரிஸ்ட் (நியூசிலாந்து), டொற்றின் (மேற்கிந்தியத் தீவுகள்), ஸ்கெச்ல்ட் (ஆஸ்திரேலியா), லூயிஸ் (தென்னாபிரிக்கா), கஸ்பேர்க் (நியூசிலாந்து), சோல் (இங்கிலாந்து). 12ஆவது வீராங்கனையாக அமின் (பாகிஸ்தான்).

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.